# கல்கி



ALKI ஆகஸ்ட் 10, 1952 4 அணா



ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இனிமையான நறுமணத்தை
நீங்களும் அனுபவியுங்கள்.
Himalaya Bouquet
Himalaya Bouquet
TOILET POWDER
இரண்டு
நேர்த்தியான
இராஸ்மிக்
தயாரிப்புகள்
HBP. 6-X30 TM

# கல்கி பொருளடக்கம்

மலர் 12 இதழ் 2 | 1952 ஆகஸ்டு 10 | நந்தன ௵ ஆடி 26


| | | | |
|---|---|---|---|
| என்றென்றைக்கும் நன்றிக் கடன் | (தலையங்கம்) | ... | 3 |
| வாலி பெற்ற வரம் | ... | ... | 4 |
| வாங்கலாமா? வேண்டாமா? | (கார்ட்டூன்) | ... | 5 |
| எழுத்து அழிக்கும் இயக்கம் | ... | ... | 6 |
| அட்டைப்பட விளக்கம் | ... | ... | 7 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 8 |
| அத்தங்கான் அலமு | க. ரா. | ... | 18 |
| அதிர்ஷ்டம் | ராமப்பிரியா | ... | 23 |
| அவர்கள் வணங்கும் தெய்வம் | ரகு | ... | 27 |
| சிலைட் வந்தது! | வி. சித்ரா | ... | 29 |
| மூன்று ராஜகுமாரர்கள் (பாப்பா மலர்) | சீதா | ... | 31 |
| அன்பின் தோல்வி | அம்புஜம் | ... | 33 |
| இடம் உண்டா? | ரகு | ... | 36 |
| கார்த்திகை வாணம் | ரா. வெங்கடேசுவரன் | ... | 39 |
| தமிழ்க் களஞ்சியம் | டி. கே. சி. | ... | 43 |
| இரகசியமும் சட்டியும் | ஓரா வீல்—வாஞ்சி | ... | 47 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 52 |
| உழைப்பால் உயர்ந்த ஏழை | பகீரதன் | ... | 55 |
| வட்ட மேஜை | ... | ... | 66 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... | 67 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


விற்பனையாகின்றன!

★

அகிலனின்

சிநேகிதி (சாதா பதிப்பு) ரூ. 2-8-0

௸ (உயர்ந்த பதிப்பு) ரூ. 3-0-0

செங்கரும்பு ரூ. 1-4-0

சாந்தி ரூ. 1-0-0

இன்பநினைவு (3ம் பதிப்பு) ரூ. 1-0-0

சுகியின்

பூச்சரம் ரூ. 1-8-0

இளமைப்பித்தனின்

சுமங்கலி ரூ. 1-0-0

வி. துரைசாமியின்

முதற்காதல் ரூ. 1-0-0

★

பழனி பிரசுரம்

மணிக்கூண்டு :: புதுக்கோட்டை

நீங்கள் ரொம்பவும் ரசிக்கக் கூடியது

ரோகிணி

பரிமள பாக்குத் தூள்

வாய்க்கு வெகு இன்பமான வாசனையும் மனத்திற்கு உற்சாகமும் தருவது. தாம்பூலத்துடனும் தனியாகவும் போட்டுக் கொள்ளலாம்.

பெரிய ஷாப் ஸ்டோர்களில் 1, 2½, 5 பலம் பொட்டலங்களிலும் 5 பலம் டின்களிலும் கிடைக்கும்.

ரோகிணி பரிமள பாக்குத்தூள் கம்பெனி

9, சிவராம சாஸ்திரி தெரு

பார்க் டவுன், சென்னைப்பட்டணம்-3

# Advertisers...
# get the TRUTH
# about the media you use !

As an advertiser, it is vital for you to know exactly how many readers you get for each rupee spent on advertising.

More than 125 leading publications are now members of the Audit Bureau of Circulations — enough to conduct a full-scale, 13 language national advertising campaign in India, Pakistan and Ceylon. Their circulation figures are subject to re-check at any time by ABC appointed auditors, and are passed on as half-yearly confidential certificates to ABC members.

If you want to know the truth about your advertising media, write today for full details of ABC membership!

**AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.**
Mubarak Manzil, Apollo Street
Fort, Bombay

The following advertisers and advertising agencies are already members of the ABC:—

ADVERTISERS:

Allied photographics Ltd., E. M. Allcock & Mohatta Ltd. Aspro Ltd. England. Atlantis (East) Ltd. Balmer Lawrie & Co. Ltd. Bombay Mutual Life Assurance Society Ltd. Boots Pure Drug Co. (India) Ltd. Burmah-Shell Oil Storage & Distributing Company of India Ltd. Caltex (India) Ltd. Central Tea Board. Corn Products Co. (India) Ltd. Dunlop Rubber Co. (India) Ltd. Glaxo Laboratories (India) Ltd. Godrej & Boyce Mfg. Co. Ltd. Imperial Chemical Industries (India) Ltd. Imperial Tobacco Co. of India Ltd. India Tyre & Rubber Co. (India) Ltd. Lever Brothers (India) Ltd. Lipton Ltd. Mullar & Phipps (India) Ltd. National Carbon Co. (India) Ltd. Parle Products Manufacturing Co. Ltd. Punjabi Chandu Halwai Karachiwala. Shalimar Paint, Colour & Varnish Co. Ltd. Tata Oil Mills Co. Ltd. Volkart Brothers.

ADVERTISING AGENCIES:

Advertising & Sales Promotion Co. Everest Advertising Ltd. Grant Advertising Inc. Greens' Advertising Service Agents. D. J. Keymer & Co., Ltd. Lintas Ltd. National Advertising Service Ltd. Press Syndicate Ltd. Shilpi Ltd. Sista's Ltd. F. D. Stewart Ltd. L. A. Stronach & Co. (India) Ltd. J. Walter Thompson Company (Eastern) Ltd.

**Inserted by the "KALKI" Madras**

THE TAMIL WEEKLY PUBLICATION WITH ABC CERTIFIED CIRCULATION

கல்கி

மலர் 12 } தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் { இதழ் 2

# என்றென்றைக்கும் நன்றிக்கடன்

ராஜாஜி சர்க்கார் வெளியிட்ட ஐந்து கோடி ரூபாய் கடன் வெளியீட்டுக்கு நாலு நாள் தவணை கொடுக்கப்பட்டது. ஆனால் தவணை முடிவதற்கு முன்னாலேயே ஐந்து கோடி ரூபாயும் வசூலாகி விட்டது. இதன் மூலம் சென்னை சர்க்காரின் மதிப்பு அகில இந்தியாவிலும் உயர்ந்திருக்கிறது.

வீழ்ந்து சரிந்து போய்க்கொண்டிருந்த இந்தச் சென்னை மாகாணத்தின் மதிப்பை இவ்விதம் மீண்டும் உயர்த்தி நிலைநாட்டியதற்காக ராஜாஜிக்கு இம் மாகாணம் என்றென்றைக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

ஐந்து கோடி ரூபாய் கடன் எழுப்ப வேண்டும் என்று ராஜாஜி சொன்னபோது பொருளாதார நிபுணர்கள் "அவ்வளவு கடன் வசூல் ஆவது கடினம்; மூன்றரைக் கோடி ரூபாய் இப்போது கேட்டால் போதும்" என்றார்கள். உத்தேசத்திலுள்ள பொது நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மேற்படி தொகை போதாது என்று ராஜாஜி கருதினார். மக்களிடம் நம்பிக்கை வைத்தார். ஐந்து கோடி ரூபாய் கடன் கேட்கத் தீர்மானித்தார். தீர்மானித்து விட்டுச் சும்மா இருந்து விடவில்லை. அதற்கு வேண்டிய பிரயத்தனங்களை இடைவிடாமல் செய்தார். ரேடியோ மூலம் பொது மக்களைக் கேட்டுக் கொண்டார். பாங்கர்கள், வர்த்தக சமூகத்தினர் முதலியவர்களை நேரிலே கேட்டுக் கொண்டார். சென்னை மாகாணம் முழுவதிலும் உள்ள ஜில்லா கலெக்டர்கள் முதலிய அதிகாரிகளும் இந்த நன் முயற்சியில் கலந்து கொண்டார்கள். இந்த முயற்சிகளுக் கெல்லாம் தக்க பலன் கிட்டியது. கேட்ட தொகை ஐந்து கோடியும் கிடைத்தது. இது ராஜாஜிக்கும் வெற்றி; இம் மாகாண மக்கள் அவரிடம் வைத்துள்ள நம்பிக்கைக்கும் மகத்தான வெற்றியாகும்.

இந்த ஐந்து கோடி ரூபாயும் சர்க்காருக்குக் கடனாகக் கொடுத்தவர்களுக்கு வருஷா வருஷம் வட்டி கிடைத்துக் கொண்டிருக்கும். அதே சமயத்தில் அத் தொகையைக் கொண்டு மாகாணப் பொதுநலத்துக்கு அவசியமான நீர்ப்பாசன—மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

ராஜாஜியின் அறிவாற்றல்கள் உலகம் அறிந்தவை. இம் மாகாண மக்களின் பொது நலத்தில் ராஜாஜியைக் காட்டிலும் அதிக அக்கறை கொண்டவர்கள் யாரும் இல்லை. தள்ளாத பிராயத்தில் உடல் நலம் குன்றியுள்ள நிலையில் சென்னை மக்கள் நலம் ஒன்றையே கருதி அவர் முதன் மந்திரி பணியை மேற்கொண்டிருக்கிறார். இன்னும் சில காலம் அவர் முதன் மந்திரியாயிருந்தால், இம் மாகாணம் பல துறைகளிலும் உயர்வு அடையும் என்பதில் ஐயமில்லை. அதற்கு வேண்டிய தேக திடத்தை அவருக்கு அருளும்படி இறைவனை மக்கள் பிரார்த்திக்க வேண்டும். அத்துடன் அவருடைய முயற்சிகளில் என்னென்ன முறையில் உதவி செய்யலாம் என்று ஒவ்வொருவரும் போட்டி யிட்டுக் கொண்டு முன் வரவேண்டும்.

முட்டுக்கட்டை போடுகிறவர்களும் இடையூறு விளைவிப்பவர்களும் அநாவசியமான காரியங்களில் அவரை விவாதத்துக்கு இழுத்துக் காலவிரயம் செய்கிறவர்களும் சென்னை மாகாணத்துக்குப் பெரும் துரோகம் செய்தவர்களாவார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று பொய்யா மொழிப் புலவர் அருளிவிட்டுப் போயிருக்கிறார் அல்லவா?

# வாலி பெற்ற வரம்

இராமாயணத்தில் வாலி ஓர் அருமையான கதா பாத்திரம். அவன் ஓர் அதிசயமான வரம் பெற்றிருந்தான். அவன் முன்னால் யார் நின்று சண்டை விட்டாலும், அப்படிச் சண்டையிடுகிறவர்களின் பலத்தில் பாதி வாலிக்கு வந்து விடும். ஆக, எதிரிகளின் பலத்தைக் காட்டிலும் வாலியின் பலம் எப்போதும் அதிகமாகவே இருக்கும். ஆகையினாலேயே இராமர் வாலியை மறைந்து நின்று கொன்று விட்டு, அதற்குச் சமாதானம் சொல்வதற்குத் திணறும்படி நேர்ந்ததாக இராமாயணம் என்னும் மகா இதிகாசம் கூறுகிறது.

நம்முடைய காலத்தில் ராஜாஜி வேறொரு அபூர்வமான வரம் பெற்றிருக்கிறார். அவரை எதிர்ப்பவர்களுக்கெல்லாம் அவருடைய பலத்தில் ஒரு பகுதி போய் விடுகிறது. எதிர்ப்பவர்களுக்கு ராஜாஜி பதில் சொல்லி விட்டால், எதிரிகள் இன்னும் அதிக பலத்தை அவரிடமிருந்தே அடைந்து விடுகிறார்கள். எதிரிகள் எவ்வளவு அபத்தமாக உளறினாலும், ராஜாஜி அதற்குச் சொல்லும் பதில் ரஸமாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் ஏற்படுகிறது. இதனாலேயே எதிரிகளின் உளறலுக்கும் ஓரளவு முக்கியத்துவம் ஏற்பட்டு விடுகிறது.

"ராஜாஜி என்னமாகப் பதில் சொல்லியிருக்கிறார், பார்த்தாயா!" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும்போது, கேள்வியைப் பற்றியும் கேள்வி கேட்டவரைப் பற்றியும் இயற்கையாக ஞாபகம் வருகிறது.

ராஜாஜியை எதிர்ப்பவர்கள் சாதாரண அறிவாளிகளாகவும் இருந்து விட்டால், அவர்கள் அடையும் சௌகரியம் இன்னும் அதிகமாகிறது.

ஏனெனில், ராஜாஜி உயர்ந்த குணம் படைத்தவர்; பெரிய மனம் படைத்தவர்; தமிழ் நாட்டின் பண்பாடே உருவானவர்.

ஆகையால் எதிரிகளைப் பற்றிப் பேசும்போது மரியாதை கொடுத்துப் பேசுகிறார். அவர்களுடைய பேச்சில் சிறிதளவு அறிவுத் திறமையோ, நியாய உணர்ச்சியோ காணப்பட்டாலும் அவற்றைப் பாராட்டுகிறார். இந்தப் பெரும் பண்பு காரணமாக, எதிரிகளுக்குச் சில சமயம் முதல் மந்திரி உத்தியோகம், அன்னிய நாட்டு மந்திரி உத்தியோகம் முதலியவற்றைக்கூடக் கொடுக்க முன் வந்து விடுகிறார்! "நீங்கள் முதல் மந்திரியாகும் போது நான் சொல்வதின் உண்மையை உணர்வீர்கள்" என்கிறார். "அயல் நாட்டு விஷயங்களைப் பற்றி இவ்வளவு சவிஸ்தாரமாக எனது இளம் நண்பர் படித்து வைத்திருக்கிறார். அவர் ஒரு காலத்தில் அயல்நாட்டு மந்திரியாகி விடலாம்" என்கிறார். இதனாலெல்லாம் அவரை எதிர்ப்பவர்களின் மதிப்பு மேலும் உயர்ந்து விடுகிறது.

இதையெல்லாம் மற்றும் சிலர் கவனிக்கிறார்கள். "ராஜாஜியை எதிர்த்தால் நாமும் எளிதில் பெரிய மனுஷன் ஆகிவிடலாம்" என்று கருதுகிறார்கள். அந்தப்படியே சென்ற பத்துப் பன்னிரண்டு வருஷங்களில் ராஜாஜியை எதிர்ப்பதனாலேயே சிலர் 'பெரிய மனுஷர்'கள் ஆகி யிருக்கிறார்கள். இன்னும் ஆகப் பார்க்கிறார்கள். வேறு ஒன்றும் எதிர்ப்பதற்குக் கிடைக்கா விட்டால் மதுவிலக்கையாவது எதிர்த்துப் பெரிய மனுஷர் ஆகப் பார்க்கிறார்கள். ஆகிப் போகட்டும்: அதைப் பற்றிக் கவலைப்படுவதில் பயனில்லை. பெரியவர்களை எதிர்ப்பதினால் அவர்களுடைய பெருமையில் எதிர்ப்பவர்களும் ஒரு பங்கு அடைவது இயற்கை நியதிகளில் ஒன்று. அதை யாரும் மாற்ற முடியாது.

ராஜாஜியை எதிர்ப்பவர்கள் பெரிய மனுஷர்கள் ஆவதைப் பார்த்து இன்னும் சிலர் பெரிய மனுஷர்கள் ஆவதற்கு ரொம்பவும் அவசரப்படுகிறார்கள்! ஆகையால் மனிதத் தன்மைக்கும் தமிழ் நாட்டின் பண்பாட்டுக்கும் முற்றும் மாறான வசை மொழிப் பிரயோகத்தில் இறங்குகிறார்கள்! அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும். ராஜாஜியை எதிர்ப்பதும் அப்படித்தான். வசை மொழி எதுவும் தூய்மையே உருவான ராஜாஜியின் மேல் ஒட்டாது. ராஜாஜியின் விஷயத்தில் வசை மொழியை உபயோகப் படுத்துகிறவர்கள் 'பெரிய மனிதர்'கள் ஆவதற்குப் பதிலாகக் 'கீழ் மக்கள்' என்று கருதப்படுவார்கள்.

பண்பாட்டில் தலைசிறந்த தெய்வத் தமிழகத்தில் வெறும் வசை மொழியும் கீழான பதப் பிரயோகமும் ஒரு நாளும் ஒருவருக்கு மதிப்பைத் தரமாட்டா. வசை மொழிகளை உபயோகிப்போர் 'கீழ்மக்கள்' என்பதுதான் உறுதிப்பாடு பெறும்.

* * *

சென்னைச் சட்டசபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டம் சமீபத்தில் நடந்து முடிந்தது. அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளைப் படித்து வந்தபோது மேற்கூறிய எண்ணங்கள் நமக்குத் தோன்றின. சென்ற ஐந்து ஆண்டில் நிகழ்ந்ததைப் போல் இம்முறை சட்டசபை நிகழ்ச்சிகள் தூங்கி வழிந்து கொண்டிருக்கவில்லை. காரசாரமாகவும் கிளர்ச்சிகரமாகவும் இருந்தன. பட்ஜெட் பொது விவாதத்தின் போது மொத்தம் நூறு அங்கத்தினர்கள் பேசினார்கள். விவாதத்துக்கு முடிவில் பதில் சொல்லிய நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் நூறாவது பிரசங்கி.

வரவு செலவுத் திட்ட மான்யக் கோரிக்கைகளின்மீது இன்னும் பலர் பேசினார்கள்.

மொத்தம் இரண்டாயிரம் கேள்விகள் அங்கத்தினரால் அனுப்பப் பட்டன.

உப கேள்விகள் எத்தனையோ எழுந்தன.

ராஜாஜி சபையின் மீது நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதன் பேரிலும் நாலு நாட்கள் விவாதம் நடந்தது.

எதிர்க் கட்சியில் சிலர் எப்போது இடுக்குக் கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்து சமயம் நேர்ந்த போதெல்லாம் மந்திரிகளைத் திணற வைப்பதற்குரிய பிரச்னைகளைக் கிளப்பிக் கொண்டே யிருந்தார்கள்.

மக்களின் நலன்களைப் பாதுகாப்பவர்கள் தாங்களே என்று பிரசாரம் செய்வதற்கு என்னென்ன உபாயங்களைக் கையாளலாமோ அவ்வளவையும் கையாண்டனர்.

அவ்வளவுக்கும் பதில் சொல்லிச் சமாளிக்கும் பொறுப்பு முதல் மந்திரி ராஜாஜியின் தலையிலேயே சார்ந்தது. ஸ்ரீ ஏ. பி. ஷெட்டியைத் தவிர மற்ற மந்திரிகள் எல்லாரும் உத்தியோகத்துக்குப் புதியவர்கள். ஆகையால் எல்லாருக்காகவும் பெரும்பாலும் ராஜாஜியே பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இதனால் சென்னைச் சட்டசபை நடவடிக்கைகள் இம்முறை மிகவும் முக்கியத்துவம் அடைந்தன. எதிர்ப்பாளர்களுக்கும் ஓரளவு முக்கியத்துவம் ஏற்பட்டது.

"இந்தப் பேச்சையும் நான் கேட்க வேண்டியிருக்கிறதே!" என்று ராஜாஜி ஒரே தடவை தம் அருவருப்பை வெளியிட்டார்.

மற்றப்போதெல்லாம் எதிர்ப்பாளர்களுக்கும் மதிப்புக் கொடுத்து நடத்தினர். அதனால் அவர்கள் ஓரளவு பெரிய மனிதர்கள் ஆனார்கள்! ஆகிப் போகட்டும். 'பெரிய மனிதர்கள்' ஆவது நல்லதுதானே! இந்த மாகாணத்தில் சின்ன மனிதர்களே இல்லாமல் எல்லாருமே பெரிய மனிதர்களாகி விட்டால் எவ்வளவு நல்லது!

* * *

மந்திரிகள் பதின்மூன்று பேர் புதியவர்கள் என்று சொன்னேனும். ஆரம்பத்தில் அவர்கள் தன்னடக்கத்துடனே இருந்தார்கள். கூட்டம் முடியும் சமயத்துக்குள் ஒவ்வொருவரும் திறமைசாலி என்று காட்டிக் கொண்டார்கள். கீழ்ச் சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் தலைவரான நிதிமந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அரசியலில் மிக்க அனுபவம் பெற்றவரைப் போலவே ஆற்றலுடன் பேசித் திறமையுடன் நடவடிக்கைகளை நடத்தினர். டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ், ஸ்ரீ மாணிக்கவேலு நாயக்கர், ஸ்ரீ ரங்கா ரெட்டி, ஸ்ரீ சங்கர ரெட்டி ஆகியவர்களும், நல்ல திறமையாளர்கள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

* * *

சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றிக் குறைப்படக் கூடியவர்கள் யாரேனும் உண்டு என்றால் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள்தான். இவர்களில் பலர் மிக்க திறமைசாலிகள், வாதத்திறமை புள்ளவர்கள் என்பதை நாம் அறிவோம்.


சென்ற பொதுத் தேர்தலில் இவர்கள் காங்கிரஸ் சார்பாக நின்று ஜயித்து வந்ததே இவர்களுடைய திறமைக்கு அத்தாட்சியாகும். ஆனால் இவர்கள் சட்டசபையில் வாயைக் கட்டிப் போட்டவர்களாக இருக்கும்படி நேர்ந்தது. நம்பிக்கைத் தீர்மானத்தின் போது இவர்கள் பேசுவதற்கே இடமில்லாமற் போயிற்று. மற்ற விவாதங்களிலும் தீவிரமாகக் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. எதிரிகளுக்குச் சொல்ல வேண்டிய பதில்களை யெல்லாம் ராஜாஜியே சொல்லி விடுகிறார்!

சர்க்காரைக் குறை கூறுவதும் புகார் சொல்வதும் சம்பந்தா சம்பந்தமில்லாமல் திட்டுவதும் எதிரிகளுக்கு இலகுவான காரியங்கள்.

சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் அம்மாதிரியெல்லாம் செய்ய முடியாது. சர்க்காரைத் தாக்குகிறவர்களைப் பதிலுக்குத் தாக்கலாம் என்றால், அதுவும் முடியாது. தலைவர் இடம் கொடுக்க மாட்டார். தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட கட்சிக் கட்டுப்பாடும் இருக்கிறது.

முஸ்லீம் லீக்கையும் கிருஷிக் லோக் கட்சியையும் சேர்ந்தவர்களுக்கு உள்ள வசதி கூடக் காங்கிரஸ் அங்கத்தினருக்குக் கிடையாது. காங்கிரஸ் கட்சியில் இல்லாதவர்கள் ராஜாஜி மந்திரி

## வாங்கலாமா? வேண்டாமா?




"ரயில்வே நிலையங்களின் போர்டுகளிலுள்ள ஹிந்தி எழுத்துக்களை அழித்தது சம்பந்தமாக அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, இனி வேறு முறைகளைக் கைக்கொண்டு தான் சர்க்காரின் பார்வையை நம் பக்கம் திருப்பவேண்டும்" என்று ஈ. வெ. ரா. திருச்சியில் நடந்த திராவிடக் கழகக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சபையை ஆதரித்துப் பேசினும் அதற்கு ஒரு விசேஷ மதிப்பு ஏற்படுகிறதல்லவா !

இதை யெல்லாம் எண்ணும் போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ. க்களுக்குச் சிறிது மனச் சோர்வு உண்டாவது இயற்கைதான். ஆனால் அத்தகைய மனச்சோர்வுக்கு அவர்கள் இடம் கொடுக்கக் கூடாது. தங்களுடைய சொந்தப் பிராபல்யத்தைக் காட்டிலும் இந்த மாகாணத்தின் மொத்த நன்மையையே அவர்கள் முக்கியமாகக் கருத வேண்டும். மிக நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில், இந்த மாகாணம் அடியோடு சீர்குலைந்து படுகுழியில் விழுந்து விடும் என்ற பயம் ஏற்பட்டிருந்த சமயத்தில், இம் மாகாணத்தின் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் பெருமுயற்சி செய்து ராஜாஜியை முதன் மந்திரி பதவி ஏற்கும்படி செய்தார்கள். அதன் மூலம் இந்தச் சென்னை மாகாணத்தையே காப்பாற்றினார்கள். இம் மாகாணத்தின் நல்லரசாட்சியை நிலை நாட்டிப் பொருளாதாரச் சீர் குலைவும் சமூக நாசமும் ஏற்படாமல் பாதுகாத்தார்கள். ராஜாஜி மந்திரி சபைக்கு ஆதரவு அளித்து வருவதின் மூலம் அந்தத் தொண்டை நீடித்துச் செய்து வருகிறார்கள். சட்டசபையில் அவர்கள் கொடுக்கும் ஒவ்வொரு வோட்டும் இப்போது விலை மதிக்க வொண்ணாதது. ஒவ்வொரு வோட்டும் இம் மாகாணத்தைக் காப்பாற்றி வருகிறது.—இந்த எண்ணம் அவர்களுக்கு நிச்சயமாக மனத் திருப்தியை அளித்து உற்சாகம் ஊட்டி வரவேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ராஜாஜி வெகு காலம் நீடித்து இம் மாகாணத்தின் முதன் மந்திரியாயிருக்க வேண்டும் என்றுதான் நாம் அனைவரும் ஆசைப் படுகிறோம். ஆனால் அது சாத்தியமில்லாத காரியம் என்பதை மறந்துவிடக் கூடாது. கூடிய சீக்கிரத்தில் ராஜாஜிக்கு ஓய்வு கொடுக்கும்படியாகத்தான் இருக்கும். அவரை எப்போதும் இந்த அரசியல் சிக்கலில் சுழன்று கொண்டிருக்கும்படி சொல்வது தர்ம நியாயமும் ஆகாது.

ராஜாஜி இப்போது வகிக்கும் பொறுப்பையும் பாரத்தையும் கூடிய சீக்கிரத்தில் எல்லாக் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களும் பகிர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும். அதற்கு ஒவ்வொருவரும் தங்களைத் தகுதி செய்து கொள்ள வேண்டும். சட்டசபையில் விவாதத்துக்கு வரும் எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் நன்றாகப் படித்து அறிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியாரின் நியாயமான கேள்விகளுக்கும் குதர்க்கமான கோணக் கேள்விகளுக்கும் ராஜாஜி எப்படிப் பதில் சொல்லிச் சமாளிக்கிறார் என்பதைக் கூர்ந்து கவனித்து வரவேண்டும்.

இந்தச் சட்டசபையில் எதிர்க் கட்சி பலம் அதிகமாயிருப்பதால், காங்கிரஸ் அங்கத்தினர் எல்லாரும் கட்டாயம் எப்போதும் சட்டசபையில் ஆஜராயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இது பல விதங்களிலும் நல்லதாகும். இப்போது காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் ராஜாஜியின் தலைமையில் பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இருந்து அடையும் அரசியல் பயிற்சி, பிற்காலத்தில், அவர்களுக்கு மிக்க பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# எழுத்து அழிக்கும் இயக்கம்

சென்ற வாரத்தில் தமிழ் நாட்டில் சிலர் வெகுவாகச் சந்தோஷப்பட்டார்கள். ஏதோ ஒரு பெரிய மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டதாக எண்ணிச் சந்தோஷப் பட்டார்கள். யாராவது சந்தோஷப் பட்டால் அதைப் பார்க்க நமக்கும் சந்தோஷந்தான்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!"

என்றார் தாயுமானவரும். ஆகையால், காரணமில்லாமலோ அல்லது அற்ப காரணத்துக்காகவோ யாராவது மகிழ்ச்சி அடைந்தாலும், அதைப் பார்க்க நமக்கும் ஆனந்த முண்டாகிறது.

கையிலே கரிய தார் நிறைந்த சட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள் கறுப்பு உடை வீரர்கள். புகை வண்டி நிலையங்களை நோக்கி நடந்தார்கள். அவர்களை வரவேற்பதற்கு அறிகுறியாக புகைவண்டி என்ஜின்களும் கரிய புகைத் திரளைக் குபுகுபுவென்று விட்டன. பிளாட்பாரம் டிக்கட் முறைப்படி வாங்கிக் கொண்டு புகை வண்டி நிலையத்துக்குள் பிரவேசித்தார்கள். அங்கே அந்தந்த நிலையங்களின் பெயர்களைத் தாங்கிக் கொண்டு நின்ற பலகைகளில் இருந்த ஹிந்தி எழுத்துக்களின்மீது தாரைப் பூசினார்கள். அவ்வளவுதான்! "அழிக" கோஷமும் "ஒழிக" கோஷமும் ரயில் என்ஜின் சத்தத்துடன் போட்டியிட்டுக் கொண்டு வானத்தைச் சுக்கு நூறாகப் பிளந்தன! ஹிந்தி பாஷையை அழித்து ஒழித்து அதல பாதாளத்தில் அமுக்கியாகி விட்டது! இனி மேல் அது தலை காட்ட முடியாது!

தார்ச் சட்டியுடன் படை எடுத்துச் சென்ற வீரர்கள் திரும்பி வந்தார்கள்; ஊர்வலம் விட்டார்கள்; பொதுக் கூட்டம் போட்டார்கள்; வெற்றிக் கொண்டாட்டம் நடத்தினார்கள்.

ஆனால் வெற்றிக் கொண்டாட்டத்தில் பேசியவர்கள் சிலரைச் சந்தேகம் பிடித்துக் கொண்டிருந்தது. இது பூரண வெற்றியா, அரை குறை வெற்றியா என்று சந்தேகப்பட்டார்கள். ரொம்ப சந்தோஷப்படலாமா, கொஞ்சமாகத்தான் சந்தோஷப்படலாமா என்று ஐயுற்றார்கள்.

எழுத்து அழிக்கும் தொண்டு செய்தவர்களைப் போலீஸார் கைது செய்யாததுதான் மேற்படி சந்தேகத்துக்குக் காரணமாகும்.

"ஹிந்தி எழுத்தின் மேல் தாரைப் பூசிவிட்டபடியால் நமக்கும் வெற்றிதான்; போலீஸார் வந்து சிறைப்படுத்தாத படியால் ராஜாஜிக்கும் வெற்றிதான்!" என்று இயக்கத்தின் தலைவர் சென்னைக் கடற்கரையில் கூறியதாக அறிகிறோம்.

இப்படியாக இரு தரப்புக்கும் வெற்றி தரக் கூடிய ஓர் இயக்கம் அபூர்வமான இயக்கமே அல்லவா!

யாருக்கு வேணுமானாலும் வெற்றியாக இருக்கட்டும்; யார் வேண்டுமோ சந்தோஷப்படட்டும்.

ஆனால் இந்த எழுத்து அழிக்கும் இயக்கத்தின் மூலமாக ஹிந்தி ஆதிக்கத்தை ஒழித்து விட்டதாகவோ தமிழுக்குத் தொண்டு புரிந்துவிட்ட

தாகவோ எண்ணிக் கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

பாஷைப் பிரச்னையைப் பற்றி நாம் பலமுறையும் வெளியிட்டிருக்கும் கருத்தை மீண்டும் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழகத்தில் தாய் மொழியாகிய தமிழுக்குத் தான் எல்லா விதத்திலும் முதன்மை இருக்க வேண்டும்.

தாய் மொழியைக் காட்டிலும் இன்னொரு மொழிக்கு மேன்மை அளிப்பது பொருத்தமற்றது; இயற்கைக்கு விரோதம்.

ஹிந்தி ஏகாதிபத்தியத்தையோ, ஹிந்தியின் ஆதிக்கத்தையோ நாம் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள முடியாது.

ஆங்கில பாஷை சில காலத்துக்கு முன்பு வரையில் தமிழின் பேரில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஆங்கிலத்தின் ஸ்தானத்தில் இனி ஹிந்தி வந்து உட்காருவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

ஆனால் தமிழர்கள் தாய் மொழியைத் தவிர, ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருத்தல் அவசியம்.

தமிழர்களின் முன்னேற்றத்துக்கும் தமிழ் நாட்டின் மேன்மைக்கும் ஓரளவு பிற பாஷைகளின் அறிவு அவசியமாகும்.

(1) தமிழ் நாட்டில் தமிழர்கள் பேசிப் பழகவும், இலக்கிய இன்பத்தை அநுபவிக்கவும் தமிழ்.

(6) விஞ்ஞான அறிவுக்கும் புதுமுறை இலக்கியப் பயிற்சிக்கும் ஆங்கிலம்.

(3) அகில இந்தியாவுக்குரிய பொதுக் காரியங்களுக்கு ஹிந்தி.

ஆக, மூன்று பாஷைகளுக்கும் தமிழ் நாட்டில் அது அதற்குரிய ஸ்தானத்தை அளிப்பது தான் முறை. இந்த முறையின் மூலமாகத்தான் நமது இளம் சந்ததிகள் முன்னேற்ற மடையும்; தமிழ் நாடும் மேன்மை அடைய முடியும்.


பாஷைத் துவேஷத்தை வளர்ப்பதினாலும், ஹிந்தி எழுத்துக்களை அழிப்பதினாலும் நன்மை ஒன்றும் விளையாது.

அகில இந்தியப் பொதுக் காரியங்களில் நம்மவர்கள் பின்னணிக்குச் செல்வதற்கே ஏதுவாகும்.

திராவிட நாடு தனித்து இயங்கப் போகிறதென்று எதிர் பார்ப்பதும், ஹிந்தி எழுத்தறிவு கூட நமக்குத் தேவையில்லையென்று நினைப்பதும் பகற் கனவாகவே முடியும்.

தெலுங்கர்களும் கன்னடக்காரர்களும் மலையாளிகளும் ஒருநாளும் திராவிட நாடு தனியாவதை ஆதரிக்கப் போவதில்லை. எழுத்தழிக்கும் இயக்கம் ஆந்திர, கன்னட, மலையாளப் பிரதேசங்களில் நடைபெற்றிருக்கிறதா என்று பாருங்கள்.

## அவரால் முடியுமா?




சென்னை சர்க்காரின் (செக்ரடேரியட்) காரியாலயத்தில் வேலை துரிதமாக நடக்குமாறு நிர்வாக முறையைத் திருத்தியமைப்பதற்கு ஸ்ரீ என். வெங்கடேஸ்வரன் ஐ. ஸி. எஸ். விசேஷ அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தமிழ் நாடு தனிச் சுதந்திரத்துடன் இருக்கலாம் என்று நினைப்பது தற்கொலை செய்து கொள்ளும் முயற்சி என்றே சொல்லலாம்.

இந்த அணுகுண்டு யுகத்தில் பத்து ஜில்லாக்கள் உள்ள பிரதேசம் தனிச் சுதந்திரம் படைத்த நாடாக இயங்க முடியாது.

இந்தியப் பேரரசுடன் இணைந்த தமிழரசு இலட்சியந்தான் சாத்தியமானது.

அத்தகைய தமிழரசுக்கு ஹிந்தி எழுத்து அழிப்பு இயக்கத்தினால் யாதொரு பயனும் இல்லை.

உண்மையில் தமிழ் நாட்டுக்கும் தமிழுக்கும் தொண்டு செய்ய விரும்புகிறவர்கள் எழுத்து அழிக்கும் இயக்கத்தைக் கை விட்டுவிட்டு எழுத்து அறிவிக்கும் இயக்கத்தில் ஈடுபடலாம்.

"எழுத்து அறிவித்தவன் இறைவனாகும்" என்பது பழந்தமிழ் முதுமொழி.

தமிழ் எழுத்தே அறியாதவர்கள் தமிழ் நாட்டில் இன்னும் எத்தனையோ லட்சம்பேர் இருக்கிறார்கள்.


எழுத்தழிக்கும் இயக்கத்தில் லோர் காட்டிய உற்சாகத்தை இனித் தொடர்ந்து தமிழ் எழுத்து அறிவிக்கும் துறையில் காட்டினால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அதில் எல்லாருமே கலந்து ஒத்துழைப்பார்களே! அத்தகைய இயக்கத்தின் மூலம் ஏற்படும் சந்தோஷமும் அற்ப சந்தோஷமாயிராமல்,—சந்தேகத்துக்குரிய சந்தோஷமா யிராமல், — பரிபூரண, நீடித்த கால, தூய தமிழ் இனிமையைப் போன்ற மகிழ்ச்சியா யிருக்குமே!

அட்டைப்பட விளக்கம்

# ஐந்தருவிக் காட்சி

"தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்"

என்று குறவஞ்சி ஆசிரியர் வர்ணித்த குற்றாலத்தில் இப்போது சாரல் காலம். தேனருவியுடன் போட்டி யிட்டுக்கொண்டு பாலருவிகளும் பொழியும் காலம். குற்றாலத்துக்கு அருகிலுள்ள ஐந்தருவி என்னும் வழங்கும் இடத்தில் இப்போது உண்மையாகவே ஐந்து அருவிகளிலும் இனிய புதுப் புனல் பொழிந்து தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும். தென்னிந்தியாவிலேயே மிகவும் இனிதான இந்த இயற்கைக் காட்சியைப் புது மணம் புரிந்த தம்பதிகள் பார்த்து மகிழ்கிறார்கள். அதை நமது சித்திரக்காரர் இந்த வாரத்துக் கல்கி இதழ் அட்டைப் படத்தில் தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறார்.




## அத்தியாயம் 43

# நந்தி மண்டபம்

மறு நாள் பிற்பகல் மீண்டும் பெரிய பிக்ஷு பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்கு வந்தார். அவரிடம் பல கேள்விகள் கேட்பதற்கு இளவரசன் துடித்துக் கொண்டிருந்தான். சின்ன பிக்ஷுவிடம் அவன் கேள்வி கேட்டு விவரம் அறிந்து கொள்ளச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. "ஐயா! எல்லாம் குருதேவர் தெரிவிப்பார்" என்ற ஒரே வித மறுமொழி தான் திரும்பத் திரும்ப வந்தது.

குருதேவர் வந்ததும், "இளவரசே! இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"ஐயா! உடம்பு என்னை மிகவும் தொந்தரவு படுத்துகிறது. 'எதற்காகச் சோம்பிப் படுத்திருக்கிறாய்? எழுந்து ஓடு! குதிரை மேல் ஏறு! நதியில் குதித்து நீந்து! யானையுடன் சண்டை போடு! வெறுமனே படுத்திராதே!' என்கிறது. வயிறும் வெகு சுருசுருப்பாயிருக்கிறது. சின்ன பிக்ஷு கொண்டு வந்து கொடுத்த உணவெல்லாம் போதவில்லை. ஆச்சாரியரே! இத்தனை நாள் நான் கடும் சுரம் பிடித்து நினைவு தவறியிருந்தேன் என்பதையே நம்ப முடியவில்லை. தங்களுடைய மருந்து அவ்வளவு அற்புதமான வேலை செய்திருக்கிறது!" என்று சொன்னான் பொன்னியின் செல்வன்.

"ஐயா! உடம்பின் பேச்சை ரொம்பவும் நம்பி விடக் கூடாது. சுரம் தெளிந்ததும் அப்படித் தான் இருக்கும். கொஞ்சம் அசட்டையாயிருந்து, இரண்டாந் தடவை சுரம் வந்துவிட்டால், உயிருக்கே ஆபத்தாகப் போய் விடும்!"

"குருதேவரே! என்னுடைய உயிருக்கு வரக் கூடிய ஆபத்தைப் பற்றி நான் அவ்வளவாகப் பயப்படவில்லை..."

"தாங்கள் கவலைப் படவில்லை; சரிதான்! ஆனால் இந்தச் சோழ நாட்டில் உள்ள கோடி கோடி மக்கள் சென்ற நாலைந்து தினங்களாக எவ்வளவு கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், தெரியுமா? நாடு நகரங்கள் எல்லாம் அல்லோல கல்லோலப் படுகின்றன. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரையில் கண்ணீர் விடுகிறார்கள்..."

"ஐயா! தாங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. ஜனங்கள் எதற்காக அவ்வளவு வருத்தப்பட வேண்டும்? ஒரு வேளை நான் இந்தச் சுரம் குணமாகிப் பிழைக்க மாட்டேன் என்ற எண்ணத்தினாலா? சூடாமணி விஹாரத்தில் தாங்கள் எனக்குச் சிகிச்சை செய்து வருகிறீர்கள் என்று தெரிந்திருக்கும் போது ஜனங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"இளவரசே! தங்களுக்குச் சுரம் என்பதும், தாங்கள் சூடாமணி விஹா

ரத்தில் இருந்து வருவதும் ஜனங்களுக்குத் தெரியாது. இந்த நகரத்தின் மாந்தர்களுக்கு அது தெரிந்திருந்தால், இந்த விஹாரத்தில் இவ்வளவு அமைதி குடி கொண்டிருக்குமா? மதிள் சுவர்களையெல்லாம் இடித்துத் தகர்த்துக்கொண்டு அத்தனை ஜனங்களும் தங்களைப் பார்க்க இங்கு வந்திருக்க மாட்டார்களா? அன்று காலையில் தாங்கள் கடலில் மூழ்கி விட்டதாகச் செய்தி வந்தபோது இந்த நகரின் மாந்தர் எழுப்பிய ஓலத்தையும் பிரலாபத்தையும் தாங்கள் கேட்டிருந்தால்... ஏன்? இந்த விஹாரத்துக்குள்ளேயே அன்று காலை கண்ணீர் விட்டுக் கதறாதவர் யாரும் இல்லையே?"

பொன்னியின் செல்வர் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, "குருதேவரே! இது என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? நான் கடலில் மூழ்கிவிட்டதாகச் செய்தி வந்ததா? எப்போது வந்தது? யார் அத்தகைய பயங்கரச் செய்தியைக் கொண்டுவந்தது? எதற்காக?" என்று கேட்டார்.

"யார் கொண்டு வந்தார்களோ, தெரியாது! ஒருநாள் காலையில் அந்தச் செய்தி இந்த நகரமெங்கும் பரவி விட்டது. தங்களை இலங்கையிலிருந்து கோடிக்கரைக்கு ஏற்றி வந்த கப்பல் சுழல் காற்றில் அகப்பட்டு முழுகி விட்டதாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். கோடிக் கரையோரமாக தனாதிகாரி பழுவேட்டரையர் தங்களை எவ்வளவோ தேடியும் தங்கள் உடல்கூட அகப்படவில்லை யென்றும், ஆகையால் கடலில் முழுகிப் போயிருக்க வேண்டும் என்றும் பராபரியாகச் செய்தி பரவிவிட்டது. அதைக் கேட்டு விட்டு நான்கூட இந்த விஹாரத்தின் வாசலில் நின்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது இன்னொரு பிக்ஷு வந்து, நோயாளியை ஏற்றிக் கொண்டு ஒரு படகு விஹாரத்தின் பின் புறத்துக் கால்வாயில் வந்திருப்பதாகத் தெரிவித்தார். நான் உடனே வந்து பார்த்தபோது படகில் உள்ள நோயாளி தாங்கள்தான் என்பதைக் கண்டேன். பிறகு, மூன்று நாளாகச் சிகிச்சை செய்து வந்தோம். நேற்றுத்தான் தங்களுக்கு நினைவுவந்தது."

"ஆச்சாரியரே! என்னைப் படகில் ஏற்றிக்கொண்டு வந்தது யார், சொல்ல முடியுமா!"

"ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் படகு தள்ளிக்கொண்டு வந்தார்கள்."

"ஆம், ஆம்; எனக்குக்கூடக் கனவில் கண்டது போல் நினைவுக்கு வருகிறது. அந்த இளைஞனும் யுவதியும் யார் என்று தெரியுமா? இளைஞன் வாணர் குலத்து வந்தியத்தேவனா?"

"இல்லை, ஐயா! அவன் பெயர் சேந்தன் அமுதன் என்று சொன்னான். சிவ பக்தி மிக்கவன் என்று தோன்றியது. பெண்ணின் பெயரை நான் அறிந்து கொள்ளவில்லை. தேக திடமும் மனோ வலியும் வாய்ந்தவள்......"

"அவள் யார் என்று நான் ஊகிக்க முடியும். ஓடக்காரப் பூங்குழலி; தியாக விடங்கரின் மகள். அவர்கள் என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தார்கள் என்று சொல்லவில்லையா?"

"இல்லை, இளவரசே! நான் அவர்களிடம் அதைப்பற்றிக் கேட்கவும் இல்லை."

"நான் இங்கு பத்திரமாயிருக்கிறேன் என்று தாங்கள் யாருக்கும் தெரியப்படுத்தவில்லையா?"

"இல்லை, ஐயா! யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று தங்களை அழைத்து வந்தவர்கள் சொன்னார்கள். தங்கள் உடல் நிலையை முன்னிட்டுச் சொல்லாமலிருப்பதே நல்லது என்று நானும் எண்ணினேன்."

"ஆச்சாரியரே! இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. என்னைச் சிறைப்படுத்திக்கொண்டு வரும்படி என் தந்தை-மும்முடிச் சோழ மகாராஜா - கட்டளையிட்டிருந்தார். அதற்கிணங்கவே நான் இலங்கையிலிருந்து புறப்பட்டேன். நடுவில் ஏதேதோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. சக்கரவர்த்தியின் கட்டளைக்கு விரோதமாக நான் நடந்தேன் என்று குற்றம் சாட்டுவதற்காக இந்தச் சூழ்ச்சி நடந்திருப்பதாகத் தோன்றுகிறது. நான் கடலில் முழுகி இறந்து விட்டதாகவும் கதை கட்டி விட்டிருக்கிறார்கள். குருதேவரே! என்னைத் தாங்கள் இந்தச் சூடாமணி விஹாரத்தில் ஏற்றுக்கொண்டதே இராஜத் துரோகமான காரியம். மேலும் வைத்திருப்பது பெருங் குற்றமாகும். உடனே என்னைத் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுங்கள்......"

"இளவரசே! தங்களுக்கு இடங் கொடுத்ததற்காக எனக்கு இராஜ தண்டனை கிடைப்பதாயிருந்தால் அதைக் குதூகலத்துடன் வரவேற்பேன். அதன் பொருட்டு இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்தை இடித்துத் தள்ளி

மண்ணோடு மண்ணாக்கி விடுவதா யிருந்தாலும் பாதகம் இல்லை......"

"தங்களுடைய பரிவைக் குறித்து மகிழ்கிறேன், குருதேவரே! ஆனாலும், என்னைக் கொண்டு வந்தவர்களிடம் ஒன்றும் விசாரியாமல் எப்படி என்னை ஏற்றுக் கொண்டீர்கள்?"

"விசாரிப்பதற்கு அவசியம் என்ன? கடும் சுரத்தோடு வந்த தங்களை வரவேற்றுச் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் என்னைப் போன்ற பிக்ஷுக்களுக்கு வேறு என்ன உயர்ந்த கடமை இருக்க முடியும்? மேலும், தங்களுடைய திருத்தமக்கையார், குந்தவை தேவியார், தாங்கள் இங்கு வந்து சில நாள் தங்கக் கூடும் என்று முன்னமே எனக்குத் தெரிவித்திருந்தார்கள்......"

"ஓ! அப்படியா? இளைய பிராட்டியா அவ்விதம் சொல்லி அனுப்பியிருந்தார்? எப்போது?"

"தாங்கள் இங்கு வருவதற்குச் சில நாளைக்கு முன்பு. தங்களைக் கொண்டு வந்த சேந்தன் அமுதனும் இளையபிராட்டியின் விருப்பம் என்றுதான் கூறினான்."

"குருதேவா! என்னை அழைத்து வந்தவர்கள் இருவரும் உடனே திரும்பிப் போய் விட்டார்களா? அவர்களைக் கண்டு பிடிக்க முடியுமா? அவர்களைப் பார்த்தாவது சில விவரங்கள் எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டும்."

"ஐயா! பதட்டம் வேண்டாம். அவர்கள் இருவரும் இந்த நகரத்திலே தான் இருக்கிறார்கள். தினம் ஒரு முறை வந்து தங்கள் உடல் நிலையைப்பற்றி விசாரித்துப் போகிறார்கள். இன்றைக்கு ஏனோ இதுவரையில் வரக் காணோம்..."

அச்சமயத்தில் சின்ன பிக்ஷு வந்து குருதேவரைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தார். ஆச்சாரிய பிக்ஷு "இதோ வந்து விட்டேன், ஐயா!" என்று கூறி விட்டு வெளியே சென்றார். சற்று நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பி வந்தபோது இளவரசன் அருள்மொழி வர்மனுடைய பரபரப்பு மேலும் அதிகமாகி யிருப்பதைக் கண்டார்.

"ஆச்சாரியரே! இனி ஒரு கணமும் நான் இங்கே தங்கி யிருக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையை மீறி நான் இங்கே வந்து ஒளிந்திருந்தேன் என்ற பழியை ஏற்க நான் விரும்பவில்லை. என்னால் இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்துக்கு எந்த விதமான தீங்கு நேரிடுவதையும் விரும்பவில்லை" என்றான் இளவரசன்.

பெரிய பிக்ஷு மலர்ந்த முகத்துடன் "இளவரசே! உண்மையில் அத்தகைய பெரும் பொறுப்பை நானும் இனி வகிக்க முடியாது. தங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரு கணமும் தங்களை நான் இங்கு வைத்திருக்க விரும்பவில்லை. இக்கணமே தாங்கள் புறப்படலாம். கால்வாயில் படகு ஆயத்தமாய்க் காத்திருக்கிறது!" என்றார்.

"எங்கே போவதற்கு?"

"அது தாங்கள் தீர்மானிக்க வேண்டிய காரியம். தங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்த இருவரும் படகுடன் தங்களை அழைத்துப் போக வந்திருக்கிறார்கள்."

இளவரசன் சிறிது தடங்கினான். ஆச்சாரிய பிக்ஷுவின் முகத்தில் மர்மமான புன்னகை பொலிவதைக் கண்டு, 'இதில் இன்னும் ஏதேனும் சூழ்ச்சி இருக்கக் கூடுமோ?' என்று வியந்தான்.

"அவர்கள் இருவருமே திரும்ப வந்திருக்கிறார்களா? எதற்காக என்று சொல்ல வில்லையா?"

"சொன்னார்கள். இந்த விஹாரத்திலிருந்து ஒரு நாழிகை தூரத்தில், கால்வாயின் கரையில் நந்தி மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் தங்களைப் பார்ப்பதற்காக இரண்டு பெண்மணிகள் வந்து காத்திருக்கிறார்களாம்."

இளவரசன் அவசரமாகக் கட்டிலிலிருந்து இறங்கினான். "ஆச்சாரியரே! உடனே படகுக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்! இவ்வளவு தாமதம் ஆகி விட்டதே" என்றான்.

பிக்ஷு இளவரசனைக் கையினால் தாங்கிக் கொண்டு கால்வாய்க்கரை வரையில் சென்றார். ஆனால் இளவரசனுடைய நடையில், நாலு நாளைக்கு மேலாகக் கடுஞ் சுரத்தினால் பீடிக்கப் பட்டிருந்ததின் அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஏறுபோல் நடந்து பொன்னியின் செல்வர் கம்பீரமாக வருவதைக் கண்டு சேந்தன் அமுதன், பூங்குழலி இருவருடைய முகங்களும் மலர்ந்தன.

அருள்மொழிவர்மன் படகில் ஏறி உட்கார்ந்ததும் பிக்ஷு அவனைப் பார்த்து, "ஐயா! தங்களுக்கு ஏதேனும் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதை இந்தச் சூடாமணி விஹாரத்துப் பிக்ஷுக்கள் அனைவரும் பெரும் பாக்கியமாகக் கருதுவோம். தாங்கள் திரும்பவும்

இங்கு வந்து ஒரு வாரம் தங்கி உடல் வலிவு பெற்றுப் போவது நலம்!" என்றார்.

"குருதேவரே! நான் திரும்பி வருவேன் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. இல்லாவிடில் இவ்வாறு மற்ற பிக்ஷுக்களிடம் சொல்லிக் கொள்ளாமல் அவசரமாய்ப் புறப்பட்டிருக்க மாட்டேன்!" என்றான் இளவரசன்.

படகு நகரத் தொடங்கியதும் சேந்தன், பூங்குழலி இருவரையும் மாறி மாறிப் பார்த்து, "இக் கால்வாயின் வழியாக நீங்கள் என்னை அழைத்துக் கொண்டு வந்தபோது, நீங்கள் தேவலோகத்தவர்கள் என்றும், சொர்க்கத்துக்கு என்னை அழைத்துப் போகிறீர்கள் என்றும் எண்ணியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள். சந்நியாசி மடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தீர்கள். போனால் போகட்டும். கடலில் நீந்திக் கை சளைத்து நினைவிழந்து போனதிலிருந்து நடந்ததையெல்லாம் உங்களிடம் கேட்க வேண்டும். அதற்கு முன்னால், நந்தி மண்டபத்தில் எனக்காகக் காத்திருப்பவர்கள் யார் என்று சொல்லுங்கள்!" என்றார் இளவரசர்.

இருவரையும் பார்த்து அருள்மொழிவர்மர் கேட்ட போதிலும் பூங்குழலி வாய் திறக்கவில்லை. சேந்தன் அமுதன்தான் மறுமொழி கூறினான். குந்தவைப் பிராட்டியும் கொடும்பாளூர் இளவரசியும் ஆனைமங்கலத்துக்கு வந்திருப்பதையும், அங்கிருந்து நந்தி மண்டபத்துக்கு வந்து காத்திருப்பதையும் தெரிவித்தான்.

"ஆகா! எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் அந்தப் பெண்ணை எதற்காக இளையபிராட்டி இங்கேயும் அழைத்து வந்திருக்கிறார்?"

சேந்தன் அமுதன் "ஐயா! தமிழ் நாட்டுப் பெண்களிடையே இப்போது ஒரு சுரம் பரவிக் கொண்டிருக்கிறது. புனிதமான சைவ சமயத்தை விட்டு விட்டுப் புத்த மதத்தைச் சேர்ந்து பிக்ஷுணிகள் ஆகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

"அப்படி யார் யார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்?"

"கொடும்பாளூர் இளவரசி அவ்விதம் சொல்லிக் கொண்டிருக்கிறாராம். இதோ இந்தப் பெண்ணரசியும் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறாள்!"

"இரண்டு பேர்தானே, அமுதா! அதனால் சைவ சமயத்துக்கு நஷ்டம் வந்து விடாது! இலங்கையில் பிக்ஷுணிகள் தவவாழ்க்கை நடத்தும் மடங்கள் பலவற்றை நான் அறிவேன். வேண்டுமானால் நானே இவர்களை அழைத்துப் போய்ச் சேர்த்து விடுகிறேன்!" என்று பொன்னியின் செல்வர் கூறவும், சேந்தன் அமுதன் நகைத்தான்.


பின்னர், கடலிலிருந்து இளவரசனும் வந்தியத்தேவனும் கரையேறியதிலிருந்து நிகழ்ந்தவற்றையெல்லாம் சேந்தன் அமுதன் தான் அறிந்தவரையில் கூறினான். பொன்னியின் செல்வர் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டு வந்ததுடன், தன்னுடைய ஞாபகங்களையும் ஒத்துப் பார்த்துக்கொண்டு வந்தார்.

"அதோ நந்தி மண்டபம்!" என்று பூங்குழலி கூறியதும், இளவரசர் அவள் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினார்.

## அத்தியாயம் 44


# நந்தி வளர்ந்தது!

படகு அப்போது சென்று கொண்டிருந்த இடத்தில் கால்வாயின் கரைகள் இருபுறமும் ஓங்கி உயர்ந்திருந்தன. பூங்குழலி சுட்டிக் காட்டிய இடத்தில் கால்வாயின் ஓரமாகப் படித்துறை மண்டபம் ஒன்று காணப்பட்டது. படிகள் முடிந்து மண்டபம் தொடங்கும் இடத்தில் இரண்டு ஓரங்களிலும் இரண்டு நந்தி விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிறந்த வேலைப்பாட்டுடனும் ஜீவகளையுடனும் விளங்கிய அந்த நந்தி பகவானுடைய சிலைகளை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். இந்தச் சிலைகளின் முக்கியம் பற்றியே அம் மண்டபத்துக்கு 'நந்தி மண்டபம்' என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. வருஷத்துக்கு ஒரு முறை வஸந்த உற்சவத்தின் போது திருநாகைக் காரோணத்துக் காயாரோகண சுவாமியும் நீலாயதாட்சி அம்மனும் அந்த மண்டபத்திற்கு விஜயம் செய்து கொலுவீற்றிருப்பது வழக்கம். அப்போது மக்கள் திரள் திரளாக அங்கே வந்து சேர்வார்கள். உற்சவம் பார்த்து விட்டு, நிலா விருந்தும் அருந்தி விட்டுத் திரும்பிச் செல்வார்கள். நகரத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்தபடியால், மற்ற சாதாரண நாட்களில் இங்கே ஜனங்கள் அதிகமாக வருவதில்லை.



படகு மண்டபத்தை நெருங்கியது. மண்டபத்தில் இருந்த இரு பெண்மணிகளையும் பார்த்த பிறகு இளவரசருக்கு வேறு எதிலும் பார்வையும் செல்லவில்லை; கவனமும் செல்லவில்லை.

படகு நெருங்கி வந்தபோது இளைய பிராட்டி குந்தவை படிகளில் இறங்கிக் கீழ்ப் படிக்கு வந்தாள். வானதியோ மண்டபத்திலேயே தூண் ஒன்றின் பின்னால் பாதி மறைந்தும் மறையாமலும் நின்று கொண்டிருந்தாள்.



படித்துறை அருகில் வந்து படகு நின்றது. இளவரசர் இறங்குவதற்குப் படகிலிருந்தபடி சேந்தன் அமுதனும் படியில் நின்றபடி இளைய பிராட்டியும் உதவி செய்தார்கள்.


சேந்தன் அமுதனும் பூங்குழலியும் படகைப் பின்னோக்கிச் செலுத்திக் கொண்டு போய்ச் சிறிது தூரத்தில் நிறுத்தினார்கள்.

"தம்பி! எப்படி மெலிந்து விட்டாய்?" என்று குந்தவை கூறியபோது, அவளுடைய கனிந்த குரலிலே கண்ணீர் கலந்து தொனித்தது.

பொன்னியின் செல்வன் "என் உடல் மெலிவு இருக்கட்டும், அக்கா! உன் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது? என்னைக் கண்டதும் உன் முகம் தாமரை போல் மலருவது வழக்கமாயிற்றே? இன்றைக்கு ஏன் உன் முக சந்திரனை மேகம் மறைத்திருக்கிறது? உன் கண்கள் ஏன் கலங்கி யிருக்கின்றன? ஆகா! உன் உள்ளத்தைப் புண்படுத்தி வேதனை யளித்த எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் எனக்கு அவ்வளவு அவசரமான ஓலை அனுப்பியிருக்க மாட்டாய்!" என்றான்.

"ஆம், தம்பி! எத்தனையோ அவசரமான விஷயங்கள் சொல்ல வேண்டும்; கேட்க வேண்டும். இலங்கையின் தங்கச் சிம்மாசனத்தை வேண்டாமென்று தள்ளிய வள்ளலே! இந்தக் கருங்கல் சிம்மாசனத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து கொள்!" என்றாள்.

பொன்னியின் செல்வன் உட்காரும் போது தமக்கையின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டான். குந்தவை அவனுடைய தலையைக் கரத்தினால் தொட்டு, உச்சி மோந்தாள், அவளுடைய கண்களில் மேலும் கண்ணீர் ததும்பியது.



இருவரும் உட்கார்ந்த பிறகு குந்தவை, "தம்பி! உன்னை இன்றைக்கு நான் இங்கு வருவித்திருக்கவே கூடாது. சூடாமணி விஹாரத்தின் தலைவர் உனக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விட்டது




என்று செய்தி அனுப்பினார். அது சரியல்ல; சுரம் உன்னை வாட்டி எடுத்திருக்கிறது. ஆனால் உன்னைப் பார்க்காமலிருக்கவும் என்னால் முடியவில்லை. ஆனைமங்கலம் வந்த பிறகு ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகச் சென்று கொண்டிருந்தது!" என்றாள்.

"அக்கா! என்னை இங்கு வருவித்தது பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீ மட்டும் படகு அனுப்பாமலிருந்தால் நான் இத்தனை நேரம் பழையாறைக்கே புறப்பட்டிருப்பேன். கடுமையான சுரத்திலேயுங்கூட உன்னுடைய ஓலைதான் என் மனதை வருத்திக் கொண்டிருந்தது. அந்த ஓலையை ஒருவரிடம் அனுப்பியிருந்தாயே? அந்த வாணர் குலத்து வந்தியத் தேவரைப் போன்ற தீரரை நான் பார்த்ததேயில்லை. எத்தனையோ விதமாக அவரைச் சோதித்தேன். எல்லாவற்றிலும் தேறி விட்டார். அவர் இப்போது எங்கே, அக்கா!"

குந்தவையின் முக சந்திரனை மறைத்திருந்த மேகத்திரை சிறிது அகன்றது. பவள இதழ்கள் திறந்து முத்துப் பற்கள் தெரியும்படி புன்னகை பூத்து. "தம்பி! அவரைப் பற்றி இப்போது என்ன கவலை? வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன!" என்றாள்.

"என்ன அப்படிப் பேசுகிறாய், அக்கா! உனக்கு அதிருப்தி அளிக்கும்படி நடந்து கொண்டாரா?"

"இல்லை, இல்லை! நான் ஏன் அதிருப்தி அடைய வேண்டும்? உன்னை அழைத்துக் கொண்டு வந்து சேர்ப்பதாக வாக்களித்தார். அந்த வாக்கை அவர் நிறைவேற்றி விட்டார்..."

"அதற்காக அவர் செய்த தந்திர மந்திரங்களையும் கைக்கொண்ட சூழ்ச்சி வித்தைகளையும் நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவர் எங்கே, அக்கா! நீ இங்கு வந்திருக்கிறாய் என்று தெரிந்ததும், வந்தியத்தேவரும் உன்னுடன் வந்திருப்பார் என்று எண்ணினேன். எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் இந்தப் பெண்ணரசி அல்லவா வந்திருக்கிறாள்!"

"இவள் எவ்வளவு தைரியசாலி ஆகி விட்டாள் என்பது உனக்குத் தெரியாது, தம்பி! நேற்று நமது முதன் மந்திரியின் யானை இவளைத் தன் துதிக்கையால் தூக்கி எறிந்தது. மேலே அம்பாரியில் இருந்த என் மடியிலே தான் எறிந்தது. ஆனால் அது அவளுக்குத் தெரியாது! அப்போது எவ்வளவு தைரியமாக இருந்தாள் என்பதை நீ பார்த்திருந்தால்..."

"போதும், உன்னுடைய தோழியின் புகழை நிறுத்திக் கொள். என் நண்பரைப் பற்றிச் சொல்!"

"அவரைப் பற்றி என்ன சொல்வது? அவர் வந்த காரியம் ஆகிவிட்டது. திரும்பி அவருடைய எஜமானன் ஆதித்தகரிகாலனிடம் போய்விட்டார்."

"அப்படியானால், அவர் வாக்குத் தவறி விட்டார். தான் காஞ்சிக்குப் போகப்போவதில்லை யென்றும், சோழ நாட்டிலேயே இருந்துவிடப் போவதாகவும் கூறினாரே?"

"அது எப்படிச் சாத்தியம்? சோழ நாட்டில் இருந்து அவர் என்ன செய்வது? இங்கே உள்ளவர்களின் கதியே நாளைக்கு என்ன ஆகும் என்று தெரியாமலிருக்கிறது, அவர் பேரில் உனக்கு அவ்வளவு பிரியமிருந்தால், சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவருடைய முன்னோர்கள் ஆண்ட சிற்றரசை அவருக்குத் திருப்பிக் கொடுக்கும்படி செய்து விட்டால் போகிறது!"

"சிற்றரசை வைத்துக்கொண்டு அந்த மகாவீரர் என்ன செய்வார், அக்கா?"

"எல்லாச் சிற்றரசர்களும் என்ன செய்கிறார்களோ, அதை அவரும் செய்கிறார்! நீதான் இலங்கா இராஜ்யம் வேண்டாம் என்று மறுத்தாய்; அது போல் அவரும் வேண்டாம் எனச் சொல்லுவார் என நினைக்கிறாயா?"

இளவரசன் இளநகை புரிந்த வண்ணம், "அக்கா! இலங்கை இராஜ்யம் வேண்டாம் என்று நான் சாட்சிகள் வைத்துக் கொண்டு மறுத்திருக்கிறேன். அப்படியிருந்தும் என்மீது குற்றம் சாட்டிச் சிறைப் படுத்திக் கொண்டு வரத் தந்தை கட்டளை யிட்டிருக்கிறார்......"

"தம்பி! நீ இராஜ்யத்தை ஒப்புக் கொண்டிருந்தால் உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டுவரக் கட்டளை பிறந்திருக்காது! நீ சுதந்திர மன்னன் ஆகியிருப்பாய்! அப்போது உன்னை யார் சிறைப் படுத்த முடியும்?"

"தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக அவ்விதம் நான் நடந்து கொண்டிருக்க வேண்டுமா?"

"பொன்னியின் செல்வா! நீ இலங்கை இராஜ்யத்தை ஒப்புக் கொண்டிருந்தால் தந்தை மகிழ்ச்சி அடைந்திருப்பார்! மிச்சமுள்ள சோழ சாம்ராஜ்யத்தை உன் தமையனுக்கும் மதுராந்தகனுக்கும் பிரித்துக் கொடுத்து மன நிம்மதி அடைந்திருப்பார். இப்போதும் அதற்குத்தான் முயற்சி நடக்கிறது, தம்பி! கொள்ளிடத்துக்கு வடக்கே ஒரு ராஜ்யமாகவும் தெற்கே ஒரு ராஜ்யமாகவும் பிரித்து விடப் பிரயத்தனம் நடக்கிறது. நீ வந்தால் இது விஷயத்தில் தந்தைக்கு உதவியாயிருப்பாய் என்று அவருக்கு நம்பிக்கை. முன்னால் உனக்குச் சொல்லி அனுப்பி நீ வராதபடியால் இப்போது சிறைப் படுத்திக் கொண்டு வரச் சொன்னார். இலங்கை ராஜ்யத்தை நீ மறுத்து விட்டாய் என்பது சக்கரவர்த்திக்கு நன்றாய்த் தெரியும்."

"இராஜ்யத்தைப் பிரிப்பதற்கு நான் ஒரு நாளும் உதவியாயிருக்க மாட்டேன். அதைப்போல் பெரிய குற்றம் வேறொன்று மில்லை. அதைவிடச் சித்தப்பா மதுராந்தகருக்கே முழு ராஜ்யத்தையும் கொடுத்து விடலாம்."

"அப்படியானால் முதன் மந்திரியும் நீயும் ஒரேமாதிரி அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்!"

"ஆம்; முதன் மந்திரியும் அப்படித்தான் கருதுகிறார். இலங்கைக்கு அவர் வந்ததே இதைப் பற்றி என்னுடன்

கலந்து பேசுவதற்காகத்தான். அக்கா! இலங்கை ராஜ்யத்தை நான் வேண்டாம் என்று மறுத்ததின் உண்மைக் காரணத்தைச் சொல்லட்டுமா?"

"என்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வாய், தம்பி!"

"ஆம்; என் அந்தரங்கத்தைச் சொல்வதற்கு வேறு யாரும் இல்லைதான். இலங்கைக்குப் போவதற்கு முன்னால் அந்நாட்டைப் பற்றிப் பிரமாதமாக எண்ணியிருந்தேன். போன பிறகு தான் அது எவ்வளவு சிறிய நாடு என்று தெரிந்தது. குதிரையில் அல்லது யானையில் ஏறிப் புறப்பட்டால் ஒரே நாளில் அந்நாட்டின் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற் கரைக்குப் போய் விடலாம்."

"சோழ நாடு மட்டும் அதை விடப் பெரிதா, தம்பி? இந்த நாட்டையும் அப்படி ஒரே நாளில் குதிரை ஏறிக் கடந்து விட முடியாதா?"

"சோழநாடும் சிறியது தான். ஆகையினால் சோழ நாட்டுக் கிரீடத்தை எனக்கு யாரேனும் அளித்தாலும் வேண்டாம் என்று தான் சொல்லுவேன். இந்தத் தெய்வத் தமிழகத்தைச் சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு என்று பிரித்தார்களே! அவர்கள் பெரிய குற்றம் செய்தார்கள். அதனாலேயே தமிழகத்தில் வீராதி வீரர்கள் பிறந்தும், இந்த நாடு சோபிப்பதில்லை. வடநாட்டிலே சந்திரகுப்தர் என்ன, அசோகர் என்ன, சமுத்திரகுப்தர் என்ன, விக்ரமாதித்யர் என்ன, ஹர்ஷவர்த்தனர் இப்படி மகா சக்கரவர்த்திகள் தோன்றி மகா சாம்ராஜ்யங்களை ஆண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அவ்விதம் யாரேனும் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆண்டது உண்டா? காஞ்சி பல்லவர் குலத்தில் மகேந்திர சக்கரவர்த்தியும் மாமல்லரும் இருந்தார்கள். பிறகு அந்தக் குலமும் க்ஷீணித்து விட்டது. அக்கா! நான் இராஜ்யம் ஆளுவதாயிருந்தால், இந்தமாதிரி சின்னஞ் சிறு இராஜ்யத்தை ஆளமாட்டேன். இலங்கை முதல் கங்கை வரையில் பரவி நிலைபெற்ற இராஜ்யத்தை ஆளுவேன். மாலத் தீவிலிருந்து சாவகத் தீவு வரையில் தூர தூர தேசங்களில் புலிக்கொடி பறக்கும் மகா சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பேன்!...... என்னைப் பைத்தியக்காரன் என்றுதானே எண்ணுகிறாய்?"

"இல்லை, அருள் வர்மா! என்னைப் போல் ஆகாசக் கோட்டைகள் கட்டுவதற்கும் கற்பனைக் கனவுகள் காண்பதற்கும் நீயும் ஒருவன் இருக்கிறாயே என்று எண்ணி மகிழ்கிறேன். நீ பைத்தியக்காரனாயிருந்தால், நான் உன்னை விடப் பெரிய பைத்தியக்காரி. நம்முடைய தந்தையின் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி அப்படியெல்லாம் மனோராஜ்யம் செய்திருந்தார் என்பதை நான் அறிவேன். அவர் காலத்தில் அது பூரணமாய் நிறைவேறவில்லை. ஆனால் என்னுடைய ஆயுட்காலத்தில் நான் அதைப் பார்க்கப் போகிறேன். சோழ சாம்ராஜ்யம் இலங்கை முதல் கங்கைவரையிலும் மாலத் தீவு முதல் சாவகம் வரையிலும் பரந்து விஸ்தரிப்பதைப் பார்த்து விட்டுத்தான் நான் சாகப் போகிறேன். இந்த என் எண்ணம் நம் தமையன் ஆதித்த கரிகாலனால் நிறைவேறும் என்று ஒரு காலத்தில் நம்பினேன். அந்த நம்பிக்கை எனக்கு இப்போது போய்விட்டது. ஆதித்த கரிகாலன் மகா வீரன்; ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவனிடம் இல்லை. அதனால் அவன் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது. என் மனோரதம் உன்னால் நிறைவேறும் என்ற ஆசை எனக்கு இன்னும் இருக்கிறது. ஒருவேளை அதுவும் கைகூடாமல் போகலாம். அதனாலும் நான் நிராசை அடையமாட்டேன். உன்னால் கைகூடாவிட்டால் உனக்குப் பிறக்கும் பிள்ளையினால் கைகூடும் என்று உறுதி கொண்டிருக்கிறேன். உனக்குப் பிறக்கும் புதல்வனை, பிறந்த நாளிலிருந்து நானே எடுத்து வளர்ப்பேன். அவனை இந்த உலகம் கண்டறியாத மகாவீரன் ஆக்குவேன். அற்ப ஆசைகளில் அவன் மனத்தைச் செலுத்த விடாமல் அற்புதங்களைச் சாதிக்கக் கூடிய புருஷ சிங்கமாக்குவேன்......"

"அக்கா! நீ என்னைவிடப் பெரிய பைத்தியம் என்பது நிச்சயம். எனக்குக் கலியாணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லை. எனக்குப் பிறக்கப் போகும் புதல்வனைப்பற்றி நீ பேச ஆரம்பித்து விட்டாய். நீ செல்லம் கொடுத்து வளர்க்கும் தோழிகளில் யாருக்காவது அத்தகைய எண்ணமிருந்தால், என்னை மணந்து கொண்டு மணி மகுடம் சூடிச் சிம்மாதனத்தில் வீற்றிருக்கலாம் என்ற ஆசை இருந்தால், அது ஒரு நாளும் நிறைவேறப் போவதில்லை. இதை நிச்சய

மாய் அவர்களுக்குச் சொல்லி விடு!" என்று பொன்னியின் செல்வன் கூறிய போது அவனுடைய பார்வை ஒரு கணம், மண்டபத்தின் தூணுக்குப் பின்னால் நின்றிருந்த வானதியின்பால் சென்றது. மறு கணம் அவன் திரும்பிய போது, அவனுக்கெதிரே இருந்த படித்துறை நந்தி விக்கிரகத்தைப் பார்த்தான்.

"அக்கா! ஒரு செய்தி! இலங்கை சிறிய இராஜ்யமாயிருந்தாலும் அந்த இராஜ்யத்தை முற்காலத்தில் ஆண்ட மன்னர்கள் மகா புருஷர்கள். பெரிய உள்ளங்களைப் படைத்தவர்கள். அவர்கள் பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுப் பெரிய பெரிய காரியங்களைச் சாதித்தார்கள். செங்கல்களைக் கொண்டு மலை போன்ற மேக மண்டலத்தை அளாவிய புத்த ஸ்தூபங்களை நிர்மாணித்தார்கள். ஆயிரம் இரண்டாயிரம் அறைகள் உள்ள புத்த விஹாரங்களைக் கட்டினார்கள். பதினாயிரம் தூண்கள் உள்ள மண்டபங்களை எழுப்பினார்கள். புத்த பகவான் எவ்வளவு பெரியவர் என்பதைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளும்படியாக, அதோ அந்தத் தென்னைமர உயரமுள்ள புத்தர் சிலைகளை அமைத்தார்கள். அக்கா! இதோ நமக்கு முன்னாலிருக்கும் நந்தி விக்கிரகத்தைப் பார்! எவ்வளவு சின்னஞ் சிறியதாயிருக்கிறது! அடியும் முடியும் காண முடியாத மகாதேவரின் வாகனமாகிய நந்தி இவ்வளவு சிறியதாகவா இருக்கும்? கைலாசத்தில் பரமசிவனுடைய பரிவாரங்களோ பூதகணங்கள். அந்தப் பூதகணங்கள் அடிக்கடி வந்து தொந்தரவு செய்யாமல் கைலாசத்தின் வாசலில் நின்று காவல் புரிகிறவர் நந்தி தேவர். அவர் இவ்வளவு சிறிய உருவத்துடன் இருந்தால் பூதகணங்களை எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அதோ பார், அக்கா! என் கண் முன்னால் இதோ இந்த நந்தி வளர்கிறது. வளர்ந்து, வளர்ந்து, வளர்ந்து பெரிதாகிறது. பிரம்மாண்ட வடிவம் பெற்று இம் மண்டபத்தின் மேற் கூரையை முட்டுகிறது. மேற் கூரை இப்போது போய்விட்டது. நந்தி பகவான் வானமளாவி நிற்கிறார்! பூதகணங்கள் வருகிறார்கள்! நந்தி பகவானைப் பார்த்துப் பயபக்தியுடன் நின்று சிவனைத் தரிசிக்க அநுமதி கேட்கிறார்கள்! நந்தி பகவான் அவ்வளவு பெரியவராயிருந்தால் சிவபெருமான் வீற்றிருக்கும் ஆலயம் எப்படியிருக்க வேண்டும்? தக்ஷிண மேரு என்று சொல்லும்படி வானை அளாவிய கோபுரம் அமைக்க வேண்டாமா? அதற்குத் தக்க படி பிரகாரங்கள் இருக்க வேண்டாமா? இப்போது சோழ நாட்டில் உள்ள கோயில்கள் அகஸ்திய முனிவர் கோவில் கொள்வதற்குத்தான் ஏற்றவை. சிவபெருமானுக்கு உகந்தவை அல்ல. எனக்கு இராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். சோழ சிம்மாசனத்தில் யார் அமர்ந்தாலும் ஆலயத் திருப்பணி அதிகாரியாக என்னை நியமிக்கும்படி கேட்டுக் கொள்வேன்......"

"தம்பி! நம் இரண்டு பேரில் பைத்தியம் யாருக்கு அதிகம் என்று போட்டி போட வேண்டியது தான். தற்சமயம் இந்தச் சோழ நாட்டைப் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உட்பகைவர்களாலும் வெளிப் பகைவர்களாலும் சிநேகிதர்கள் போல் நடிக்கும் பகைவர்களாலும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சில காலமாக நான் அடிக்கடி ஒரு பயங்கரமான கனவு காண்கிறேன். மின்னலென ஒளி வீசும் கூரிய கொலை வாள் ஒன்று என் அகக் கண் முன்னால் தோன்றுகிறது. அது யார் மேலேயோ விழப் போகிறது. அது யார் என்பது எனக்குத் தெரியவில்லை. சோழ குலத்தைச் சேர்ந்த யாராவது அந்தக் கொலை வாளுக்கு இரையாகப் போகிறார்களா அல்லது இந்தச் சோழ ராஜ்யத்தை இரண்டாகத் துண்டு செய்து நாசமாக்கப் போகும் கொலை வாளா அது என்று தெரியவில்லை. நீயும் நானும் யோசித்து முயற்சி செய்துதான் அத்தகைய அபாயம் இந்நாட்டுக்கு ஏற்படாமல் தடுக்க வேண்டும்!" என்றாள் இளையபிராட்டி.

"ஆம், அக்கா! வல்லவரையர் கூறிய விவரங்களிலிருந்து எனக்கும் அவ்வாறு தான் தோன்றுகிறது. முக்கியமான அபாயம் சோழ குலத்துக்கு யாரிடமிருந்து வரப் போகிறது என்பதை அறிவாயல்லவா?" என்றான் இளவரசன்.

"பழுவூர் இளையராணி நந்தினியைத் தானே குறிப்பிடுகிறாய், தம்பி!"

"ஆம், அக்கா! அவள் யார் என்பதையும் அறிவாய் அல்லவா?"

"வந்தியத்தேவர் கூறிய விவரங்களிலிருந்து அதையும் அறிந்து கொண்டேன். ஆகையினாலேயே இவ்வளவு அவசரமாக உன்னைப் பார்க்க வந்தேன்!" என்றாள் குந்தவை. (தொடரும்)




ஓர் உயர்ந்த வர்ணப்
படக் காவியம்
நட்சத்திரங்கள்
திலீப் குமார்
நிம்மி · ப்ரேம்நாத்
புதுமுகம்
நாதிரா
மெஹ்பூப்
ப்ரொடக்ஷன்ஸ்
லிமிடெட்
ஆன்
தமிழ்
டெக்னிகலர்
டைரக்ஷன் மெஹ்பூப்
M0/58
சங்கீதம் நௌஷாத் காமிரா பெர்தூன் ஏ. இரானி
பாட்டு: கம்பதாஸன் : வசனம்: பி. எஸ். ராமையா
மதராஸ்: சித்ரா & ஸ்ரீ கிருஷ்ணாவிலும்
மற்றும் தென்னாடெங்கும் அமோக வெற்றியுடன் நடைபெறுகிறது
ஆல் இந்தியா பிலிம் கார்ப்பொரேஷன் ரிலீஸ்



# அத்தங்காள் அலமு

கி.ரா.



காரியாலயத்தின் கடிகாரத்தில் மணி ஐந்து ஆகிவிட்டதா என்று மற்றைய குமாஸ்தாக்கள் பார்த்துக் கொண்டிருந்ததற்கும் சுந்தரேசன் பார்த்துக்கொண்டிருந்ததற்கும் வித்தியாசம் இருந்தது. சுந்தரேசன், தான் அருமையாகக் காதலித்து மணம் செய்து கொண்ட தன் அத்தங்காள் அலர்மேலு மங்காளுடன் தனிக்குடித்தனம் ஆரம்பித்துச் சரியாக ஒரு வாரம்கூட ஆகவில்லை என்றால் அவனுடைய மன நிலையை நாம் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

நமக்குப் புரிந்து போன இந்தச் சாதாரண விஷயம் சுந்தரேசனுடைய காரியாலய மானேஜருக்குப் புரியாமற் போனதை என்ன வென்பது? சரியாக ஐந்தடிக்க ஐந்து நிமிஷமிருக்கும்போது அவர் சுந்தரேசனைக் கூப்பிட்டு, "மிஸ்டர் சுந்தரேசன்! இந்த ஸ்டேட்மெண்ட் நாளைக் காலை பத்து மணிக்கு என் மேஜை மீது தயாராக இருக்க வேண்டும். மணி ஆறு ஆனாலும் இருந்து, சரிபார்த்து விட்டுப் பிறகு வீட்டுக்குப் போங்கள்," என்ற உத்தரவைப் போட்டு விட்டுப் போய் விட்டார். அடுத்த மாதம் 'இங்க்ரிமென்'டும், அதற்கடுத்த மாதம் போனஸும் வர இருக்கும்போது மானேஜருடைய உத்தரவை மீற முடியுமா?

அவனுடைய மூளையும் கையும் இயந்திரம் போல் கூட்டிக் கழித்து 'ஸ்டேட்மென்'டைத் தயாரித்துக் கொண்டிருந்தாலும் அவனுடைய மனம் மாத்திரம் வீட்டில் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் அலமுவை நினைத்துக் கொண்டிருந்தது. "சரியாக ஐந்தரை மணிக்கெல்லாம் ஆபீஸிலிருந்து வந்து விடுவேன். உடனே டிபனை முடித்துக் கொண்டு ஆறு மணி ஆட்டம் ஒன்றுக்குப் போகலாம்" என்று மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான். தனிக்குடித்தனம் வைத்த முதல் வாரத்திலேயே தன்னுடைய மனைவிக்கு ஏமாற்றம் அளிக்க வேண்டியிருக்கிறதே என்பதை நினைக்க, சுந்தரேசனுக்கு என்னமோ செய்தது.

ஆனால், இரவு ஏழு மணி சுமாருக்கு வீடு திரும்பின சுந்தரேசனுக்குத்தான் ஏமாற்றம் காத்திருந்தது. வீட்டின் முன் கட்டில் குடியிருந்த முனிரத்னமய்யர், "மிஸ்டர் சுந்தரேசன்! உங்கள் மனைவி சினிமாவுக்குப் பின் கட்டு பிரேமாவுடன் போயிருக்கிறாள். உங்களுக்காக ஐந்தே முக்கால் வரை காத்துக் கொண்டிருந்தாள். நீங்கள் வராமற் போகவே பிரேமாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போனாள்: சிறுசோன்னோ அப்படித்தான் இருப்பாள்! இந்தாருங்கள், உங்கள் வீட்டுச் சாவி," என்று விஷயத்தை விளக்கினார்.

சுந்தரேசனுக்கு முதலில் மிகவும் ஆத்திரமாக இருந்தது. 'சிறுசோன்னோ' என்ற முனிரத்னமய்யரின் அடைமொழி அவனுடைய ஆத்திரத்தை ஓரளவுக்கு அடக்கி வைத்தது.

இரவு ஒன்பதரை மணி சுமாருக்குத் திரும்பி வந்த அலமுவைச் சுந்தரேசன் கோபிக்கவில்லை. "உங்களுக்காக எவ்வளவு நாழிகை நான் காத்திருந்தேன் தெரியுமா? பின்கட்டு மாமி துணைக்கு வர ஒப்புக் கொள்ளாமல் இருந்தால் நான் இன்று சினிமா பார்த்திருக்கவே முடியாது" என்று அலமுதான் குரோதமாக அவனிடம் பேசினாள்.

சில நாட்களுக்குப் பிறகு, காரியாலயத்தினின்றும் திரும்பி வந்த சுந்தரேசன், "அலமு! நான் பக்கத்துத் தெரு பரமசிவம் வீடுவரை போய்விட்டு எட்டு மணிக்குள் வந்துவிடுகிறேன்; பிறகு ஒன்றாகச் சாப்பிடலாம்," என்று சொல்லிவிட்டு வெளியே போனான்.

பரமசிவம் சுந்தரேசனுடைய ஒரு சாலை மாணவன். இருவரும் வெகு நேரம் அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். எட்டு மணி சுமாருக்கு, சுந்தரேசன் எழுந்திருந்து, "நேரமாகிறது. வரட்டுமா?" என்றான். "இத்தனை

நான் கழித்து வந்திருக்கிறாய். உன்னைப் பார்த்து ஒரு யுகம் ஆகியிருக்கும் போலிருக்கிறது. என் வீட்டில் நீ சாப்பிடாமல் போகக் கூடாது. ஆமாம்!'' என்று கண்டிப்பாகச் சொன்னான் பரமசிவம். ''சாப்பாடெல்லாம் இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம், பரம சிவம்! வீட்டில் அலமு தனியாக எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்'' என்றான் சுந்தரேசன். பரமசிவமோ, ''ரேஷன் தான் போய் விட்டதே இன்னமும் சங்கோசப்பட வேண்டியதில்லை,'' என்றான்.



பரம சிவத்துடன் வெகு நேரம் வாதாடி அவனிடமிருந்து விடுதலை பெற்று எட்டரை மணி சுமாருக்கு அவசர அவசரமாக வீட்டுப் படியேறின சுந்தரேசனை எச்சில் இலையும் கையுமாக அலமு எதிர்கொண்டழைத்தாள்! ''அதற்குள் சாப்பிட்டு விட்டாயா?'' என்று சுந்தரேசன் கேட்கும்போது துக்கம் அவன் தொண்டையை அடைத்துக் கொண்டது. ''உங்கள் சிநேகிதர் வீட்டில் நீங்கள் சாப்பிட்டுவிட்டு விதானமாக வருவீர்கள் என்று நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. நீங்கள் வைத்த கெடு வரை காத்திருந்தேன். அதற்குமேல் என்னால் காத்திருக்க முடியவில்லை. பசித்தது. சாப்பிட்டு விட்டேன்'' என்றாள் சுந்தரேசனின் அருமை அந்தரங்காளான ஸ்ரீமதி அலர்மேலு மங்கா்ள்.

பக்கத்துத் தெரு பரமசிவத்துக்கு ரேஷன் காலத்திலேயே அடிக்கடி நண்பர்களுடன் விருந்து சாப்பிட வேண்டுமென்ற ஆவல் உண்டு. ஆகையினால் ரேஷன் தொல்லை தீர்ந்த வைபவத்தை ஒரு பெரிய விருந்து வைத்துக் கொண்டாடி விட அவன் தீர்மானித்துச் சுந்தரேசன் உள்பட ஐந்தாறு நண்பர்களை ராத்திரி சாப்பாட்டிற்கு அழைத்திருந்தான். விருந்து முடிய இரவு ஒன்பது மணியாகி விட்டது. வெற்றிலைப் பாக்கை மென்ற படியே துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு செருப்புகளை விட்டிருந்த மூலையை நோக்கி முன்னேறிய சுந்தரேசனை ஐந்து நண்பர்களும் வழி மறித்து இன்றிரவு ஒரு மணி வரை சீட்டுக் கச்சேரி போட்டு விட்டுத்தான் வீடு திரும்ப வேண்டும் என்றனர். சுந்தரேசன் எவ்வளவு தடுத்தும் மறுத்தும் அவனை அவர்கள் விடவில்லை. '''சாப்பாட்டால் ஆயபயன் என் கொல்! சகாக்களுடன் சீட்டாட்டம் போடா தபோது!' என்ற 'பிடியாட்டப் பெருந்தகையார்' அருளிய குறளை நீ கேட்டதில்லையோ?'' என்று பரமசிவம் அந்தக் குறளைப் பாட்டாகப் பாட ஆரம்பித்து விட்டான். ஏழு சீர்களை கொண்ட குறளை ராகமாலிகையில் (அதாவது ஒரு ராகத்திலும் சேராத பல ராகங்களில்) பாடலாம் என்பதைச் சுந்தரேசன் அப்பொழுது தான் அறிந்தான். ''சரி, ஆனால் பத்தேகால் வரையில் தான் ஆடுவேன். அதன்பிறகு எழுந்து போக எனக்கு அனுமதி கொடுக்க வேண்டும்'' என்ற நிபந்தனையுடன் ஆட இசைந்தான். பத்தரை மணிக்குள் சீட்டுக்கச்சேரி கலைந்தது.

தனக்காகத் தன் மனைவியை அநாவசியமாகக் கண் விழிக்க வைக்கக் கூடாது என்பதுதான் சுந்தரேசனுடைய எண்ணம். கதவைத் திறப்பதற்கென்று அவள் தூங்காமல் காத்திருப்பாள் என்று சுந்தரேசன் நினைத்திருந்ததற்கு மாறாக அலமு கதவைத் தாளிட்டுக் கொண்டு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். முதலில் கதவை மெதுவாகத் தட்டின சுந்தரேசன் பிறகு சற்றுத் துரித காலத்தில் கதவின் மீது தாள வாத்தியக் கச்சேரி


## கல்கி

(வாரப் பதிப்பு)

### சந்தா விவரம்

| | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா<br>சிலோன் | ரூ. 13-0-0 | 6-8-0 |
| பர்மா<br>மலேயா<br>வெளிநாடு | ரூ. 14-10-0 | 7-5-0 |

குறிப்பு:—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவுசெய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை

செய்தான். பலனில்லை. வெளியே போயிருக்கிற கணவன் வீடு வராமல் இருக்கும்போது இவளுக்கு எப்படி இப்படித் தூக்கம் வருகிறது என்று அவன் அதிசயித்தான். இவள் இப்படிக் கும்பகர்ண உபாசனை செய்வாள் என்று தெரிந்திருந்தால் வீட்டுக் கச்சேரியையாவது விடியவிடிய நடத்தியிருக்கலாமே என்று அவன் நினைத்ததில் வியப்பில்லை.

மறுநாள் காலை சுந்தரேசன் பீரோவில் ஏதோ தேடிக் கொண்டிருக்கும் போது நான்கு வருஷங்களுக்கு முன்பு அலமு எழுதின கடிதம் ஒன்று அவன் கண்ணில்பட்டது. அவனுக்குத்தான் அலமுவைக் கொடுப்பது என்பது தீர்மானமாகி இருந்தாலும் சுந்தரேசன் வேலை ஒன்றுமில்லாமல் இருந்தது தான் கல்யாணத்துக்குத் தடையாக இருந்தது. அப்பொழுது பணக்காரக் கதாநாயகியை மணம்புரிந்து கொள்ளக் கூடிய தகுதியைப் பெறுவதற்காக ஏழைக் கதாநாயகன் பொருள் சம்பாதிக்கப் பம்பாய் கல்கத்தா போவதாக நாம் பார்த்திருக்கும் சினிமாக் காட்சிகளை நினைவு படுத்தும் முறையில் சுந்தரேசன் இப்பொழுது பம்பாய்க்குப் புறப்பட இருந்தான். நல்ல உத்தியோகத்தில் அமர்ந்து கையில் சிறிது பணமும் சேர இரண்டுமூன்று வருஷங்களாவது ஆகும் என்று அப்பொழுது எதிர்பார்க்கப்பட்டது. அந்த நிலையில் அலமு தன் அம்மான் சேய்க்கு எழுதியிருந்த கடிதம்தான் அது. அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை ரஸித்துப் படித்து வந்த சுந்தரேசனுக்கு அந்தக் கடிதத்தின் முக்கிய கட்டத்துக்கு வந்ததும் ஒரே வியப்பாயிருந்தது.

"..........நீங்கள் பம்பாய் சென்று நல்ல உத்தியோகத்தில் அமர்ந்து கையில் சிறிதாக சேர்த்ததும்தான் அடியாளை மணந்து கொள்ள முடியும் என்று எழுதியிருக்கிறீர்கள். தங்களுடைய தீர்மானத்துக்கு நான் எதிர் சொல்லப் போவதில்லை. ஆனால் தங்களுடைய மனத்துக்குத் தைரியம் அளிப்பது என்னுடைய கடமை அல்லவா? நீங்கள் சௌக்கியமாகத் திரும்பி வந்து என்னை ஏற்றுக் கொள்ளும் வரையில் இந்த அடியாள் தங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்; கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது என்ற உறுதியைத் தங்களுக்கு நான் தர முடியும். நீங்கள் என்னுடன் இல்லாத ஒவ்வொரு கணமும் எனக்கு ஒரு யுகமாகத்தான் இருக்கும். நீங்கள் இல்லாமல் தனியாகச் சாப்பிடும்போதோ, நீங்கள் இல்லாமல் மற்றவர்களுடன் வெளியே பீச்சுக்கோ அல்லது சினிமாவுக்கோ போக நேரும் போதோ எனக்கு என்னமோ செய்யும். நான் என்ன செய்வேன்! என் மனத்திலுள்ளதை உங்களுக்கு எப்படி எடுத்துச் சொல்லுவது என்பதே தெரியவில்லை. இந்த ஜன்மத்தின் முடிவு வரையில் நான் தங்களுக்காகக் காத்திருக்க நேரினும் நான் தயங்கமாட்டேன்......

தங்கள் அன்புள்ள
அலமு (அத்தங்காள்)

கடிதத்தைப் படித்து முடித்ததும் சுந்தரேசனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி அவன் கடிதத்தைப் பிரித்து அலமுவின் கண்ணில் படக்கூடிய ஒரு இடத்தில் வைத்துவிட்டு, "அலமு, இன்று மாலை சரியாக 5-30 மணிக்கு வந்து விடுகிறேன். இரண்டு பேரும் ஒன்றாகச் சினிமாவுக்குப் போகலாம். 'ரெடி'யாக இரு," என்று சொல்லி விட்டுக் காரியாலயம் போய்விட்டான். ஆனால் சுந்தரேசன் அன்று வேண்டுமென்றே காரியாலயத்தில் (மானேஜர் இருக்கச் சொல்லாமல் இருந்தபோதும்) ஆறு மணி வரை இருந்துவிட்டு மெள்ள ஏழுமணிக்கு வீட்டுக்கு வந்தான். அவன் எதிர்பார்த்த ஆச்சரியம் அவனுக்குக் காத்திருந்தது. அலமு நன்றாக டிரஸ் செய்துகொண்டு அவனுக்காக உண்மையில் காத்துக் கொண்டே இருந்தாள். "என் அலமு, பின்கட்டு பிரேமா இன்றுகூட வரமாட்டேன் என்று சொல்லி விட்டாளா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் சுந்தரேசன். "நீங்கள்......என்னை மன்னிக்க வேண்டும். உங்களுக்காக இனிமேல் எத்தனை மணி நேரமானாலும் காத்துக் கொண்டிருப்பேன். இந்தக் கடிதம் என் கடமையை ஞாபகப் படுத்தி விட்டது!" என்றாள் அலமு. அவள் வார்த்தைகளில் உறுதி தொனித்தது.


## திருச்சி பைன் ஆர்ட்ஸ் (Regd.) திருச்சிராப்பள்ளி

15 - 8 - 52 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு


★ திருச்சி தேவர் ஹாலில் ★

**ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி** ... பாட்டு
ஸ்ரீ ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி ... பிடில்
ஸ்ரீ கிருஷ்ணன் குட்டி நாயர் ... மிருதங்கம்
ஆலங்குடி ஸ்ரீ ராமசந்திரன் ... கடம்

டிக்கெட்டுகள்

ரிஸர்வ்ட் ரு. 15. முதல் வகுப்பு ரு. 10. இரண்டாம் வகுப்பு ரு. 3. மூன்றாம் வகுப்பு ரு. 1-8-0

V. K. ரங்கநாதன், காரியதரிசி




# இடுப்பொடியும் வேலையைத் தவிர்க்கின்றது

*நூதனம் — சிக்கனம் — திறமை*

உங்கள் வீட்டு சம்பந்தமான எல்லா சுத்தமாக்கும் அலுவல்களுக்கும் கோத்ரெஜ் சவுக்காரத் தூள்களை உபயோகியுங்கள். துணிமணிகள், தளங்கள், ஜலதாரைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் ஒரு துடைப்பிலேயே சுத்தப்படுத்தப் படுகின்றன.

இதுதான் சகல வேலைகளுக்கும் பொருத்தமான சலவை சோப். புதிது, கெட்டியானது, பொருத்தமான அளவு. குறைந்த உழைப்பில் மிகுந்த சுத்தத்தைத் தரவல்லது.



1 பவுண்டு, 3 பவுண்டுகள் கொண்ட அட்டைப் பெட்டிகளிலும், 56 பவுண்டுகள் கொண்ட கோணிப் பைகளிலும் கிடைக்கும்.

**கோத்ரெஜ்** சோப்ஸ், லிட்.

*மதராஸ்: 164, பிராட்வே. கொச்சின்: 6|30, கல்வத்தி.*

# ஆயுட் காலத்துக்கு

# பென்ஷன்

நீங்கள் பென்ஷன் பெறமுடியாத உத்தியோகத்திலோ, வியாபாரத்திலோ, தொழிலிலோ இருக்கிறீர்களா? நீங்கள் கூட இந்த சுலபமான 'சுய உதவி' முதலீட்டு திட்டத்தின் பிரகாரம் உங்கள் ஆயுட்காலத்திற்கும் பென்ஷன் பெறமுடியும்.

இப்போதே தொடங்குங்கள். அடுத்த 12 வருடங்களுக்கு மாதாமாதம் விடாமல் ஒரு பன்னிரண்டு வருஷ நேஷனல் சேவிங்ஸ் ஸர்டிபிகேட் வீதம் வாங்குங்கள். தொகை ரூ. 150 என்று வைத்துக்கொள்வோம். இந்த ஸர்டிபிகேட்டுகள் 1984 முதல் ஒவ்வொரு மாதத்திலும் காலாவதியாகி வரும். மாதம் ஒரு ஸர்டிபிகேட் வீதம் மாற்றி ரூ. 75 போனஸ் பெறுங்கள். அசல் தொகை ரூ. 150ஐ திரும்ப முதலீடு செய்து விடுங்கள். இப்படியாக 1984 முதல், உங்களுக்கு மாதாமாதம் முழுவதாக ரூ. 75 வருமானம் கிடைக்கும்.


இதனுடன் அசல் தொகையின் மொத்தம் ரூபாய் 21,600 உங்கள் வாரிசுதாரர்களுக்கும் வைக்கலாம். இன்றே ஆரம்பித்து மாதம் ஒரு ஸர்டிபிகேட் வீதம் அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு வாங்குங்கள்.

**நேஷனல்**
**சேவிங்ஸ்**
**ஸர்டிபிகேட்டுகள்**

எதிர்கால நலனை உத்தேசித்துப்
பார்ப்பவர்களுக்குப் பாதுகாப்பு.

இந்த ஸர்டிபிகேட்டுகள் 1944 நேஷனல் சேவிங்ஸ் ஸர்டிபிகேட் விதிகளுக்கும், அவ்வப்போது செய்யும் திருத்தங்களுக்கும் உட்பட்டு வெளியிடப்படும். இதர விபரங்களுக்கு நேஷனல் சேவிங்ஸ் கமிஷனர், [illegible] 3. என்கிற விலாசத்திற்கு எழுதவும்.

AC 399 TM



# அதிர்ஷ்டம்

ராமப்பிரியா

எங்கள் கல்லூரியின் கட்டிட நிதிக்காக ஒரு நாடகம் போட்டு வசூல் செய்ய ஏற்பாடெல்லாம் செய்திருந்தோம். டிக்கட் விற்பனையில் முனைந்திருந்த உபாத்தியாயினிகளில் நானும் ஒருத்தி. நகரத்திலுள்ள பெரிய மனிதர்களையெல்லாம் பார்த்து டிக்கட் விற்பதில் உற்சாகமாய் ஈடுபட்டிருந்தேன். இப்பொழுது புதிதாக வந்துள்ள ஜில்லா கலெக்டர் மனைவியை அறிமுகப்படுத்திக் கொண்டால் அதிகமாக டிக்கட் விற்பனையாகும் என்று நினைத்து நானும் எனது சகாக்களுமாக அவர்கள் வீட்டிற்குப் போனோம். கலெக்டர் அவர்களே எங்களை ரொம்ப மரியாதையுடன் வரவேற்று உபசரித்துவிட்டு, "உட்காருங்கள்! என் மனைவி குளித்துக் கொண்டிருக்கிறாள். வந்து விடுவாள்!" என்றார். பதினைந்து நிமிஷம் காத்துக் கொண்டிருந்தோம். கலெக்டரின் மனைவி வந்தவுடனே அவளைப் பார்த்து அப்படியே திகைத்து ஸ்தம்பித்துப் போய்விட்டேன்.

"அடேடே சாந்தாவா! கலெக்டரின் மனைவியைப் பார்க்க வேண்டுமே. அவள் எப்படி யிருப்பாளோ! நம்மை லட்சியம் செய்து பேசவேண்டுமே என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டு வந்தால், இங்கு எனது ஆருயிர்ச் சிநேகிதியை அல்லவோ எதிர்பாராமல் சந்திக்கிறேன்! உனக்கு எப்போது கலியாணம் ஆயிற்று? என்னை அழைக்கக் கூட மறந்து விட்டாயே!" என்று என்னை மீறிய சந்தோஷத்தில் கலெக்டர் இருப்பதைக்கூட மறந்து பொரிந்து தள்ளினேன்.


கலெக்டர், "ஓகோ! உங்களுக்குள் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் கூட இல்லையோ? சாந்தா, நீ இவர்களைக் கவனித்துக் கொள். என் வேலையைக் கவனிக்கப் போகிறேன்!" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். சாந்தா நாங்கள் வந்த காரியத்தைக் கேட்டு டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டாள். அவளும் என்னைப் பார்த்ததில் மிகவும் சந்தோஷமடைந்தாள். "நீ இங்கிருப்பது எனக்குத் தெரியாதே, சரளா! ஞாயிற்றுக்கிழமை வா! சாவகாசமாகப் பேச வேண்டும்" என்றாள். என்னுடைய ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளைத் தனியே அழைத்து, அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "சாந்தா, நான் கேட்பதற்காகக் கோபித்துக் கொள்ளாதே. நீ இந்த நல்ல நிலைமையில் இருக்கும்போது கேட்கக் கூடாத கேள்விதான். எனினும் உன்னுடைய பாலிய சிநேகிதி என்ற உரிமையில் நான் கேட்கிறேன்" என்று இழுத்தாற்போலக் கூறித் தயங்கியபடியே அவளைப் பார்த்தேன்.

சாந்தா கலகல வென்று சிரித்தவாறு, "என்ன சரளா! நீ என்ன கேட்டாலும் நான் சொல்லத் தயார். ஆனால் நீ என்ன கேட்கப் போகிறாயென்று எனக்குத் தெரியும். 'உபகார சம்பளத்தில் படித்துக் கொண்டு ஏழைப் பெற்றோர்களின் ஐந்தாவது பெண்ணாகிய நீ எப்படி கலெக்டரின் மனைவியானாய்?' என்று கேட்க விரும்புகிறாய். இல்லையா? அதுதான் அதிர்ஷ்டமென்பது. அது பெரிய கதை. இப்பொழுது உன் சகாக்

ளுடன் நீ வந்திருக்கிறாய். அந்தக் கதையைச் சொல்ல இப்பொழுது அவகாசமில்லை. ஞாயிற்றுக்கிழமையன்று காலையிலேயே வந்துவிடு. அன்று முழுதும் என்னுடன் இருந்து எல்லா விஷயங்களையும் மனம் கொண்ட மட்டும் பேசிவிடலாம். வருகிறாயா?" என்றாள். நானும் சரியென்று சொல்லி விட்டு விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன்.

சாந்தாவும் நானும் வேலூரில் ஆறாவது பாரம்வரை சேர்ந்து படித்தவர்கள். சாந்தா ஒரு எளிய குமாஸ்தாவின் ஐந்தாவது பெண். அவள் தகப்பனார் முதல் நான்கு பெண்களையும் ஒருவிதமாகக் கலியாணம் செய்து கொடுத்து ஒப்பேற்றி விட்டார். சாந்தாவின் முறை வந்தபோது குடும்பமே ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. அவளுக்கு இரண்டாம்தார வரனுக்குமேல் கிடைப்பது அரிதாயிருந்தது. சாந்தா பார்ப்பதற்கு நன்றாக இருப்பாள். வெகு குடிகையான பெண். படிப்பில் ரொம்பக் கெட்டிக்காரி. தனக்குக் கலியாணமே வேண்டாமென்று உபகார சம்பளம் பெற்றுப் படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்திலேயே சாந்தாவிடம் எல்லாருக்கும் தனிப் பிரியம் உண்டு. ஸ்கூல் பைனல் வரையில் இருவரும் ஒன்றாகப் படித்தோம். பிறகு நான் கலாசாலையில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்று உபாத்தியாயினி ஆன பிறகு கோவையில் எனக்கு உத்தியோகம் ஆகிவிட்டது. எட்டு வருஷங்களுக்குப் பிறகு வறுமையில் வாடின சாந்தாவை ஒரு ஜில்லா கலெக்டரின் மனைவியாகப் பார்த்தவுடன் என்னுடைய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. அது எப்படி அவளுக்கு அத்தனை அதிர்ஷ்டம் உண்டாயிற்று என்பதைக் கேட்க ஆவலோடு ஞாயிற்றுக்கிழமை எப்போது வருமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஞாயிற்றுக்கிழமை வந்தது. அன்று வெகு குஷியாகச் சாந்தாவின் வீட்டிற்குக் கிளம்பி விட்டேன். அவளும் என்னை மிகுந்த அன்போடு வரவேற்று உபசரித்தாள். வீட்டை யெல்லாம் ஒவ்வொரு இடமாக அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தாள். ஒவ்வொரு இடத்திலும், சாமான்களிலும் செல்வத்தின் சாயை தெரிந்தது. எல்லா இடங்களையும் பார்த்து விட்டுக் கடைசியாக அவளுடைய அறைக்குப் போய் உட்கார்ந்தோம். அறையை ரொம்ப நேர்த்தியாகவும், துப்புரவாகவும் வைத்துக் கொண்டிருந்தாள். ஒரே மாதிரி மகாத்மா காந்தி, நேரு, ராஜாஜி முதலிய தலைவர்களின் படங்கள் மாட்டப் பட்டிருந்தன. அவைகளின் பக்கத்தில் ஒரு யுவதியின் படமும் மாட்டப் பட்டிருந்தது. "இந்தப் படம் யாருடையது சாந்தா? தேசத் தலைவர்களுக்குச் சமமாக மாட்டி யிருக்கிறாயே?" என்றேன். "இவளால்தான் நான் இன்று இந்த நிலையில் இருக்கிறேன். சாப்பிட்டு விட்டு எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்" என்றாள். நான் மிகவும் ஆவலால் தூண்டப்பட்டு, "சாப்பாட்டுக்கு இப்பொழுது என்ன அவசரம் சாந்தா? நீ போடும் பீடிகையை யெல்லாம்



பார்த்தால் ஒரு சுவாரஸ்யமான கதை சொல்லப் போகிறாயென்று தோன்றுகிறது. முதலில் அதைக் கேட்டு விட்டுச் சாப்பிட்டுக்கொள்ளலாம். நீ முதலிலிருந்து விவரமாகச் சொல்லு" என்று அவசரப் படுத்தினேன். சாந்தாவும் என்னுடைய வேண்டுகோளுக் கிணங்கி விவரமாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

"வேலூரில் பிரபல பாங்கரும் தனவந்தருமான கணபதி ஐயரின் பங்களாவைச் சேர்ந்த சிறு வீட்டில் நாங்கள் குடியிருந்து வந்தது உனக்குத் தெரிந்த விஷயமே. கணபதி ஐயர் பெரிய பணக்காரர்; பல நற்குணங்களுக்கு இருப்பிடமானவர்; தாராள சிந்தை யுடையவர். சமயம் வாய்க்கும் போதெல்லாம் எனக்கும் என் பெற்றோர்களுக்கும் உதவி செய்யத் தவறினதே யில்லை. அவருடைய பெண் விலாவும் நானும் உயிர்த் தோழிகள். எனக்கு ஸ்கூல் பைனல் பரீக்ஷை பாஸானவுடனே காலேஜில் படிக்க உதவி புரிந்தார் கணபதி ஐயர். அப்பொழுது விலாவுக்கு வரன் பார்ப்பதில் முனைந்திருந்தார். எத்தனையோ வரன் வந்ததில் ஒருவருக்குத் திருப்தியிருந்தால் இன்னொருவருக்குத் திருப்தியிராது.

"கடைசியாகத் தஞ்சாவூரிலிருந்து ஒரு வரன் வந்தார். ராஜதானியிலேயே எம். ஏ. பட்டம் பெற்றதில் முதலாவதாகத் தேறியிருந்தாராம். கண்ணுக்கும் ராஜாமாதிரி இருந்தார்; ஒரு கம்பெனியில் வேலையில் இருப்ப

தாகவும் அவரைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் ரொம்ப நல்ல மனிதர்களென்றும் தகவல் வந்தது. அவர்கள் எல்லாரும் வந்து லீலாவைப் பார்த்து விட்டுப் போனார்கள். இருதரப்பினருக்கும் பிடித்துக் கலியாணம் நிச்சயமாகி முகூர்த்த நாளும் குறிப்பிட்டாகி விட்டது. எனது சிநேகிதிக்குக் கலியாணம், மேலும் என்னைப் படிக்க வைத்து ஆதரிப்பவரின் ஒரே மகளுக்குக் கலியாணமென்பதில் எனக்குத்தான் ரொம்ப சந்தோஷம். மாப்பிள்ளையைப் பார்த்தவுடனே லீலா அதிர்ஷ்டசாலி என்று என்னையறியாமல் என் வாய் முணுமுணுத்தது. கணபதி ஐயர் கலியாண ஏற்பாடுகளையெல்லாம் ரொம்பவும் தடபுடலாகச் செய்வதில் முனைந்திருந்தார். பணத்தைப் பணம் என்று பாராமல் தண்ணீராக வாரி யிறைத்துச் செலவு செய்தார்.

“என் பெற்றோர்களுக்கும் கலியாணத்தில் உதவி செய்ய வேண்டிய பொறுப்பு வந்தது. கலியாண தினம் நெருங்க நெருங்க லீலாவும் நானும் இணை பிரியாமல் இருக்கலானோம். கணபதி ஐயரைச் சேர்ந்தவர்களெல்லாரும் வந்து விட்டார்கள். கலியாணத்திற்கு முதல் நாள் சம்பந்தி வீட்டவர்கள் வந்து விட்டார்கள். சம்பந்தி வீட்டிற்கு அடிக்கடி எல்லாம் சரிவர வந்திருக்கிறதா என்று கவனிக்க நான்தான் போய் வருவேன். மாப்பிள்ளையின் தாயாருக்கு என்னை ரொம்பப் பிடித்து விட்டது. ‘ஏண்டியம்மா, நீ யார்? லீலாவுக்கு என்ன உறவு?’ என்று என்னைக் கேட்டாள். ‘நான் அவளுக்கு உறவு ஒன்றுமில்லை, மாமி. அவளுடன் சிறு வயது முதல் பழகிய சிநேகிதி!’ என்று சொன்னேன்.



“‘உனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லையோ?’ என்று கேட்டாள் அந்த அம்மாள். ‘இன்னும் இல்லை மாமி! இந்தக் காலத்தில் பணம் இல்லாதவர்களுக்கு மதிப்பேது? நானோ ஏழை. பணம் இல்லையென்றால் மூன்றும் தாரமாக எனக்குத் தாத்தாவின் ஸ்தானத்திலிருக்க வேண்டியவர்கள்தான் மனமுவந்து மணக்க முன் வருகிறார்கள். அதனால் எனக்குக் கலியாணமே வேண்டாமென்று தீர்மானம் செய்து விட்டேன். நான் படித்து வேலை பார்த்து என் பெற்றோர்களைக் காப்பாற்றப் போகிறேன்!’ என்றேன் பெருமையாக.

“என் குட்டிப் பிரசங்கத்தைப் பார்த்துப் பிரமித்து விட்டாள் அந்த அம்மாள். ‘கண்ணுக்கும் இனிமாதிரி இருக்கிறாய்! இத்தனை சமர்த்தாக இருக்கிறாய்! உன்னைக் கலியாணம் செய்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லையென்றால் அது ஆச்சரியம்தான்!’ என்றாள்.

“‘எல்லாரும் பிறருக்குத்தான் உபதேசம் செய்வார்களே தவிர, தன் விஷயம் என்றால் ஒதுங்கிப் போய் விடுவார்கள். ஏன் மாமி! நான் உங்களையே தைரியமாகக் கேட்கிறேன். உங்களுக்கு இன்னொரு பிள்ளையிருந்தால் இந்த ஏழைப் பெண்ணை உங்கள் நாட்டுப் பெண்ணாக்கிக் கொள்ளச் சம்மதிப்பீர்களா? ஊஹூம், கனவில்கூடக் கருத மாட்டீர்கள். நான் தப்பிதமாக ஏதாவது சொன்னால் மன்னித்துக் கொள்ளுங்கள். படபடப்பில் வாய் அறியாது பேசி விட்டேன். நாழியாகிறது. போய் வருகிறேன்!’ என்று சொல்லி விட்டு விடுவிடென்று வந்து விட்டேன். அறைக்கு வெளியே மாப்பிள்ளை நின்று கொண்டிருந்தார். நான் பேசியவைகளையெல்லாம் அவர் கேட்டிருப்பாரோ வென்று நினைக்க ரொம்ப வெட்கமாகப் போய் விட்டது.

“அன்றிரவு மாப்பிள்ளை எதிர்கொண்டழைப்பு மிக மிக விமரிசையாக நடந்தேறியது. லீலாவும் ஒரே ஆனந்தத்தில் இருந்தாள். மறு நாள் காலையிலிருந்து பூர்வாங்கச் சடங்குகளெல்லாம் கிரமமாக நடந்து கொண்டிருந்தது. காசி யாத்திரை புறப்படும் கட்டம் வந்தது. நாங்கள் (பெண் வீட்டுக்காரர்கள்) மாப்பிள்ளையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

நாழிகையாகி விட்டதே. முகூர்த்த வேளை நெருங்கி விட்டதே என்று இங்கு எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் சம்பந்தி வீட்டிலிருந்து கசமுச வென்று ஏதோ வதந்தியைப் பரப்பி வந்தார்கள். சில வதந்திப் பிரியர்கள் தைரியமாக கணபதி ஐயரிடம் போய், “கேட்டீர்களா சமாசாரத்தை! மாப்பிள்ளை பூட்ஸைக் கழற்றவே மறுக்கிறார். காசியாத்திரை வரும் பொழுது பூட்ஸ் இருக்கக் கூடாதென்றோம். அவர் கண்டிப்பாக பூட்ஸை கழற்ற மறுக்கிறார். காலில் ஏதோ ஊனம் போலிருக்கிறது. இதை யெல்லாம் முன்னமே விசாரித்திருக்க வேண்டிய விஷயமல்லவோ!” என்று சொன்னார்கள்.

“கணபதி ஐயர் அப்படியே இடிந்து போய் விட்டார். லீலா என்னவோ ஏதோவென்று கண் கலங்க ஆரம்பித்து விட்டாள். கணபதி ஐயர் என்ன வென்று விசாரிக்கப் பிள்ளை வீட்டுக்குப் போனார். அங்கு ஒரே அமர்க்களமாயிருந்தது. பெண் வீட்டுக்காரர்களின் பிடிவாதத்தின் பேரில் மாப்பிள்ளை பூட்ஸைக்

# நீரிழிவு

## ஏழு நாட்களில் குணமாகும்!

எவ்வளவு நாட்பட்டதாயினும் மிகக் கடுமையாக இருப்பினும் நவீன ரஸாயன முறைத் தயாரிப்பான **வீனஸ் சார்ம் நீரிழிவு** (DIABETES) வியாதியை முற்றிலும் குணமாக்கி விடும். அடங்காத பசி, மரண தாகம், அடிக்கடி சிறுநீர் பிரிதல், சொறி சிரங்கு ஆகிய இவைகளே இவ்வியாதியின் முக்கிய அறிகுறிகள். இதை கவனிப்பின்றி விட்டு விட்டால் கட்டி, பிளவை, கண் கோளாறுமுதலிய உபத்திரவங்களில் முடியும். **வீனஸ் சார்ம்** ஆயிரக்கணக்கானவர்களை மரிப்பினின்றும் பிழைக்க உதவியுள்ளது. உபயோகித்த மறுதினமே நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து இதமளிக்கும். இரண்டு மூன்று தினங்களில் பாதி குணமடைந்ததாக நீங்களே உணர்வீர்கள். ஆகார நிபந்தனை கிடையாது. இலவசமான விபரங்கள் அடங்கிய ஆங்கில காட்லாகிற்கு எழுதவும்.

**50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 6-12-0**

(தபால் செலவு இலவசம்)

**வீனஸ் ரிஸர்ச் லாபரடரி (K.M.)**
**தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா**


கழற்றினர். வலது காலில் ஒரே வெள்ளையாக இருந்தது. இரண்டு வருஷத்திற்கு முன் அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த எண்ணெய் கொட்டியதால் ஏற்பட்ட வடு என்றார்கள், பிள்ளை வீட்டவர்கள். 'இல்லவே இல்லை. இது அசல் வெண் குஷ்டம் தான். இல்லாவிட்டால் கடைசி சந்தர்ப்பம் வரையில் மறைப்பானேன்?' என்று சாதித்தார்கள், பெண் வீட்டார்கள்.

"கணபதி ஐயருக்கும் பிள்ளையின் தகப்பனாருக்கும் பெரிய தகராறு நடந்தது. லீலாவோ தன் தாயாரைக் கட்டிக் கொண்டு, 'ஐயோ, அம்மா! நான் என்ன செய்வேன்! என் தலையில் இப்படித்தான் எழுதியிருக்கிறதா" என்று அழ ஆரம்பித்து விட்டாள். தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் பணத் திமிர் பிடித்த பெண் வீட்டுக்காரர்கள் அவமானப் படுத்தி விட்டார்களென்று சொல்லி மாப்பிள்ளையும் அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் ரயிலடிக்குக் கிளம்பிப் போய் விட்டார்கள். அமர்க்களமாக நடக்க வேண்டிய கலியாணம் அரை நொடியில் நின்று போய் விட்டது.

"இவ்வளவு தூரம் ஏற்பாடுகளெல்லாம் செய்து கடைசி நிமிஷத்தில் கலியாணம் நின்று போனதில் கணபதி ஐயர் மனமுடைந்து பிரமை பிடித்தவர் போல் ஆகி விட்டார். அவருக்கு ஏற்பட்ட அவமானம், பண நஷ்டம், மனக் கஷ்டம் எல்லாமாகச் சேர்ந்து தென்னிந்தியாவிலேயே இருக்க விரும்பாதவராய்த் தம் சொத்துக்களையெல்லாம் விற்று எடுத்துக் கொண்டு வட இந்தியாவுக்குக் குடும்பத்துடன் நிரந்தரமாகப் போய் விட்டார். லீலாவை விட்டுப் பிரிய எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது. அவளுடைய ஞாபகார்த்தமாக அவளுடைய போட்டோவை மட்டும் வாங்கிக் கொண்டேன். நாங்கள் பழையமாதிரியே அந்த சின்ன வீட்டிலேயே இருந்து கொண்டிருந்தோம். ஒரு வருஷம் எவ்வித சலனமுமின்றிச் சென்றது. நான் இண்டர்மீடியட்டில் இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்தேன்.

"ஒரு நாள் நான் காலேஜிலிருந்து வீட்டிற்குத் திரும்பும் பொழுது அங்கே எனக்கு ஒரு அதிசயம் காத்துக் கொண்டிருந்தது. உள்ளே என் பெற்றோர்களோடு யாரோ அன்னியர் பேசும் குரல் கேட்டது. யாராக இருக்கலாம் என்று யோசித்தவாறு உள்ளே தயங்கியபடியே போனேன். என்ன அதிசயம்! லீலாவுக்கு மாமியாராக வந்திருக்க வேண்டிய அம்மாள் என் தாயாரோடு சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

"என்னைக் கண்டவுடனே அந்த அம்மாள் ரொம்ப சுதந்திரத்தோடு 'வா, அம்மா, சாந்தா! சௌக்கியமாக இருக்கிறாயா? என்னை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?' என்று கேட்டாள். 'இல்லாமல் என்ன மாமி! நீங்கள் எங்கே இந்த ஊருக்கு வந்தீர்கள்!' என்றேன். அந்த அம்மாள் மள மள வென்று

# அவர்கள் வணங்கும் தெய்வம்!




ஐக்கிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர் மது விலக்குச் சட்டத்தை எடுத்து விட்டு மது அரக்கன் ஆட்சியைத் திரும்பக் கொண்டுவரப் பாடு படுகிறார்கள்.

---

ஆரம்பித்து விட்டான். 'என் பிள்ளைக்கு இங்கு கலியாணம் நின்று போனதிலிருந்து எங்களுக் கெல்லாம் ரொம்ப அவமானமாகவும் வருத்தமாகவும் போய்விட்டது. வாஸ்தவத்தில் என் பிள்ளை வேணுவுக்கு ஒரு விதமான வியாதியும் கிடையாது. மூன்று வருஷங்களுக்கு முன்னால் எண்ணெயை நன்றாகக் காய்ச்சி அடுப்பிலிருந்து இறக்கியவுடன் குளிக்கும் அறைக்குக் கொண்டு போய், தேய்த்துக் கொள்வதற்காக வைத்து விட்டு வந்தேன். அப்பொழுதுதான் தூங்கி எழுந்த வேணு எண்ணெய்க் கரண்டியைக் கவனிக்காமல் அதன் பக்கத்திலிருந்த பல்பொடி சீசாவை எடுத்திருக்கிறான். சீசா தடுக்கி அந்த எண்ணெய் முழுவதும் அவன் காலில் கொட்டி விட்டது. வேணு மூன்று மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அதனால் காலில் தோல் உரிந்து போய் வெள்ளையாகப் போய் விட்டது. நாளடைவில் சரியாகப் போய்விடும் என்று டாக்டர் சொன்னார். காலில் வெள்ளையாக இருப்பதால் பூட்ஸைக் காலை விட்டுக் கழற்றவே மாட்டான் வேணு.

"'கணபதி ஐயர் வீட்டவர்கள் ஒரே ஆத்திரமாகப் பேசியதால் கலியாணமே நின்று விட்டது. எங்கள் குல தெய்வத்தின்மேல் ஆணையாகச் சொல்கிறேன். இதைத் தவிர எங்கள் வேணுவுக்கு ஒரு விதமான கெட்ட நோயும் கிடையாது. வேணுவுக்கும் ரொம்ப வெறுப்பேற்பட்டு எனக்கு இனிக் கலியாணமே வேண்டாம் என்கிறான். ஐ. ஏ. எஸ். பரீக்ஷைக்கும் போய் எழுதியிருக்கிறான். அப்படி வாஸ்தவத்தில் அவனுக்கு வியாதி இருக்கும் பக்ஷத்தில் ஐ. ஏ. எஸ். பரீக்ஷை எழுதுவானா? வைத்தியப் பரிசோதனையில் வெற்றி கிட்டுமா? நாங்களெல்லாரும் கலியாணம் செய்து கொள்ளத்தான் வேண்டும் என்ற நச்சரிப்பைப் பொறுக்க மாட்டாமல் நாலு நாளைக்கு முன் வேணு என்னிடம், 'ஏனம்மா, வெறுமனே என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்? அப்படிக் கலியாணம் செய்துகொண்டாலும் கணபதி ஐயரைப் போன்ற பணக்காரக் கர்விகளின் சம்பந்தம் எனக்கு வேண்டவே வேண்டாம். முன்பு வேலூர் போன போது அங்கே சாந்தா என்ற பெண் சொல்லியது நினைவிருக்கிறதா? 'ஏன் மாமி! உங்களுக்கு இன்னொரு பிள்ளை யிருந்தால் ஏழைப் பெண்ணாகிய என்னைக் கலியாணம் செய்து கொள்ள முன் வருவீர்களா!' என்று கேட்டாளல்லவா? அவள் சொன்னதைச் செய்து காட்டேன். அவளுக்கும் சம்மதம் இருந்து சரியென்றால் நான் செய்து கொள்கிறேன். இல்லாவிட்டால் பிரம்மச்சாரியாகவே காலங் கழித்துவிடுகிறேன்' என்கிறான். எனக்கும் தான் உன்னை மருமக

ளாக்கிக் கொள்ளக் கசக்கிறதா? இத்தனை நேரம் பேசினதில் உன் பெற்றோர்களும் நீ சம்மதித்தால் சரியென்கிறார்கள். நீயும் சம்மதித்து என் பிள்ளையை வீடும் விளக்குமாக வைக்க வேண்டும்!' என்று உருக்கமாக மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

"என் விவாகம் இவ்வளவு சுலபத்தில் நிச்சயமாகிவிடும் என்னும் நம்பிக்கை எனக்கு அணுவளவும் இருந்ததில்லை. அந்த மாமி சொல்லி வந்ததெல்லாம் கனவில் கேட்டோமோ என்று கூட எனக்குப் பிரமை உண்டாயிற்று. ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைத் தானே வலிய மணந்து கொள்கிறேன் என்று யாராவது முன் வருவார்களா? என் கல்யாணம் நிச்சயம் ஆன கதையை யாரிடமாவது சொன்னால் கூட நம்பமாட்டார்கள். வாஸ்தவத்தில் எனக்கு இவ்வளவு அதிர்ஷ்டமா என்று பிரமித்துப் போய் விட்டேன். கதையை வளர்த்துவானேன்? ஒரு சுப முகூர்த்தத்தில் எங்களுக்குத் திருநீர் மலையில் வெகு எளிய முறையில் விவாகம் நடந்தேறியது. ஐ. ஏ. எஸ். ஸில் இவர் பாஸ் செய்து விட்டார். எடுத்தவுடனே கலெக்டராகப் போட்டு விட்டார்கள். எல்லாம் என் அதிர்ஷ்டத்தினால் தான் என்று என் மாமியார், மாமனார் எல்லாரும் சொல்லி என்னைத் தாங்குகிறார்கள். இவரும் என்மேல் அன்பைச் சொரிகிறார். என் பெற்றோர்கள், என் மாமனார், மாமியார் எல்லாரும் இங்கு என்னுடனேயே வெகு சந்தோஷமாக இருக்கிறார்கள். இப்பொழுது சொல் சரளா! லீலாவின் கலியாணம் நின்று போனது என் அதிர்ஷ்டத்தினாலா, லீலாவின் துரதிர்ஷ்டத்தினாலா?" என்று கேட்டுக் கதையை முடித்தாள் சாந்தா.

"எல்லாம் பிராப்தம் போலத்தான் நடக்கும். யார் யாருக்குப் பகவான் முடி போட்டிருக்கிறாரோ அதை மாற்ற முடியுமா? சாந்தா! உன் கதையைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. சாதாரணமாக எல்லோரும் தங்கள் துரதிர்ஷ்டத்தைத்தான் முழங்கி முழங்கிச் சொல்லுவார்கள். உன் மாதிரி, அதிர்ஷ்டத்தைச் சொல்லி மகிழும் இனிய சுபாவம் எல்லோருக்கும் வராது!" என்று சொல்லி அவளை அன்போடு தழுவிக் கொண்டேன். சாந்தாவின் முகம் ரோஜாமாதிரி சிவந்து மலர்ந்தது.

"அப்புறம் வேதாந்தம் பேசலாம். முதலில் சாப்பிட்டு விட்டு வருவோம். நானும் பேச்சு மும்முரத்தில் நீ எங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி என்பதையே மறந்து விட்டேன்!" என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றாள் சாந்தா. என் மனம் அவளுக்குத் திடீரென்று அடித்த அதிர்ஷ்டத்தைச் சீர் தூக்கிப் பார்ப்பதிலேயே மூழ்கியிருந்தது. அங்கே தேசத் தலைவர்களுக்கு அருகிலிருந்த படமும் லீலாவினுடையது என்பதைச் சாந்தா சொல்லாமலே புரிந்து கொண்டேன்.



# ரிஸல்ட் வந்தது!

வி. சித்ரா

(மாணவர் கட்டுரைப் போட்டி)

இரண்டாம் பரிசு

அன்றைக்குத்தான் பத்திரிகைகளில் பரீட்சை ரிஸல்ட் வந்தது. பாஸ், டபாஸ் செய்கிறவர்கள் கூட எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பா, அம்மா கூட ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்; தங்கள் குழந்தைகள் எப்படி எழுதி இருக்கிறார்கள் என்பதை அறியத்தான். அப்பாடா வந்து விட்டது ரிஸல்ட். பாஸா? டபாஸா? இரண்டிலே ஒன்று.

படத்திலே இருக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாமா? நடுப்பையன் நளினன் (வேஷ்டியைக் கையில் பிடித்துக் கொண்டு கண்ணைத் துடைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறானே அவன்தான்) பெயிலாய் விட்டான். அவன் முகத்தைப் பார்த்தாலே 'பாவம்'ன்னு தெரிகிறதே. அவன் மிகவும் கெட்டிக்காரன். வகுப்பிலே முதல். அப்படி இருக்கிறதனாலே பெயில்னு தெரிஞ்சவுடன் அழுகையாய் வருகிறது. அவன் அப்போது நினைத்திருப்பான்: 'அதிருஷ்டம்னு ஒண்ணு இருக்கிறதாமே. நமக்கு அது இல்லை போலிருக்கிறது. இல்லாவிட்டால் அந்தக் குண்டுமணி பாஸாயிருப்பானா?' அவன் அவ்வளவு கவலைப்படுவதற்குக் காரணம், அவன் ஒரு ஏழை வீட்டுப் பையனாயிருந்ததுதான். வீட்டுக்குப் பெரிய பையன். அம்மா கஷ்டப்பட்டுப் படிக்க வைத்திருக்கிறாள். அவன் மனசுக்குச் சந்தோஷம் தரமுடியாமல் போய் விட்டதே என்றுதான் வருத்தப்படுகிறான்.

ஸ்போர்ட்ஸ் பனியன் போட்டுக் கொண்டு குஷியாக இருக்கும் குண்டுமணி பணக்கார வீட்டுப் பிள்ளை. படிப்பில் சுத்த மோசம். பாஸும், பெயிலும் ஒன்றுதான் அவனுக்கு. பாஸ் பண்ணி விட்டால் மோட்டார் சைக்கிள் வாங்கித் தருவதாக அப்பா சொல்லியிருந்தார். பாஸ் பண்ணி விடவே குஷி பிறந்து விட்டது. அவனைப் பாருங்கள்! 'அடேடே நாம் கூடப் பாஸ் பண்ணி விட்டோம்' என்று சொல்லுகிற மாதிரி அவனுக்கு இல்லை? ஆனால் நாளைக்குப் பேப்பர் வரப் போகிறது. அதிலே நளினன் பாஸ், குண்டுமணி டபாஸ் என்று வந்துவிடும். எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. அப்படி வரவேண்டும் என்று எனக்கு ஆசை.

ஓஹோ, குண்டுமணி மாதிரி குண்டாகத் தலைமட்டும் தெரிகிற குப்புசாமி கூடப் பாஸ்தான். அவனுக்குச் சந்தேகம் அதிகம். பாஸோ, பெயிலோ என்று சந்தேகப்படுவான். பாஸ் என்று தெரிந்தவுடன் கும்மாளம் போட ஆரம்பித்து விட்டான்.

குப்புவுக்குப் பக்கத்திலே இருக்கிற குருசாமி ரிஸல்ட்டைத் தனக்குப் பார்க்கிறானா அல்லது அவன் அண்ணாவுக்குப் பார்க்கிறானா என்று தெரியவில்லை. ஏனென்றால், அவன்தான் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறானே. குடுமியை இறுக்கி முடிஞ்சிருக்கிறதைப் பார்த்தால் 'ஆசாமி மகா அழுத்தம் ஸார்' என்று பேசிக் கொள்வார்களே அப்படி எண்ணத் தோன்றுகிறது.

நளினன் பக்கத்திலே சோடா புட்டிக் கண்ணாடி போட்டுக்கொண்டு, பரட்டைத் தலையாக இருக்கிறானே, அவன்தான் சோதா பக்கிரிசாமி. 'அதிருஷ்டம்தானே வேண்டும்? அது நம்மிட்டே கதறிக்கொண்டு வந்துவிடும்! நிச்சயம் நாம் பாஸ்' என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் பெயிலாகி விட்டான். முகத்தைத் தூக்கிக் கொண்டிருப்பதிலிருந்து தெரியவில்லையா? அவன் சோதா இல்லையா? அதனாலே

பத்திரிகையை வேறு ஒளித்து விட்டான். அப்பாதான் முதுகிலே தராப் போகிறாரே அதிலே கொஞ்சம் இதிலேதான் காட்டலாமே என்று அப்படிப் பண்ணி விட்டான்.




ஆறு பேராகச் சேர்ந்து ஒரு பேப்பரைப் பார்க்கிறார்களே. அதிலே நடுவிலே இருக்கிற நடராஜன் பாஸ் இல்லாவிட்டால் பெயில், இரண்டிலே ஒன்று என்கிற மாதிரி பார்க்கிறான். அவன் பாஸானால் என்ன? பெயிலானால்தான் நமக்கென்ன? ஒன்றும் இல்லை. பின்னாலே இருக்கிற பஞ்சுவும், சுந்துவும் பயப்படுவதிலிருந்து தெரியவில்லையா, அவர்கள் இரண்டு பேரும் டபாஸ் என்று! நடராஜனுக்குப் பக்கத்திலே இருக்கிற மணிக்கும் பாலுவுக்கும் நடராஜனுடைய காற்று அடித்து விட்டது. அதாவது பாஸாகி விட்டால் மேல் வகுப்பிலே படிக்க வேண்டும். பெயில் என்றால் அதே வகுப்பிலே படிக்க வேண்டும். எப்படி இருந்தாலும் இந்த இழவெடுத்த பாட புத்தகங்களைக் கட்டிக்கொண்டு அழ வேண்டும். பெயிலாகி அதே வகுப்பிலே படித்தாலாவது போன வருஷத்தைவிட ஒரு 'ரேங்'காவது முன்னாலே வந்துடலாம். 25, 26 இருந்தவர்கள் 23, 24-வது ரேங்காக வரலாமே என்கிற மாதிரி இருக்கிறார்கள். பின்னாலே யிருந்து பார்க்கிற இன்னொரு குடுமி குருமூர்த்தி நடராஜனைப் பற்றி வீட்டிலே கோள் சொல்லத் தயாராய்க் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் நிற்கிறதைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையா?

ராமுவும், கோபுவும் அவர்கள் அக்கா கமலியும், விமலியும் பாஸ் செய்துவிட்ட சந்தோஷத்தில் பேப்பரைத் தூக்கிப் போட்டு விளையாட ஆரம்பித்து விட்டார்கள். ஏனென்றால் அவர்கள் பாஸ் செய்த பிறகு அவர்கள் இரண்டு பேரும் விரும்பிய அந்தப் பேனாவைக் கொடுத்து விடுவதாகச் சொல்லி யிருந்தார்கள். அந்தப் பேனாவே கிடைத்து விட்ட மாதிரி இருவருக்கும் மிகக் குஷி வந்து விட்டது.

பேப்பரைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறானே ஒருத்தன், அவன்தான் சோவி சுப்பு. வீட்டிலே முரட்டு அப்பா கிட்டே அடி வாங்கி வாங்கி ஒல்லியாகி விட்டான் போலிருக்கிறது. பாவம்! அவன் பேப்பரை எடுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்தால் அப்பா கிட்டே தான் பாஸ் என்று நிரூபிக்கப் போகிற மாதிரி தோன்றுகிறது; இல்லையா? அவன் அப்பா கோப குணம் உள்ளவர்; சந்தேகப் பேர்வழியாகக்கூட இருப்பார் போல் இருக்கிறது. பேப்பரிலே போட்டது தப்பு என்றால் அப்புறம் அவன் மார்க் புத்தகத்தைக் காட்ட வேண்டும். அதையும் பார்த்த பிறகு 'இது உன் மார்க் இல்லை, எந்த மடையண்டா உன் பேப்பரைத் திருத்தினது' என்று சொல்லி விட்டால் உதைவாங்கி இன்னும் ஒல்லியாய்ப்போவதைத் தவிர வேறு வழியில்லை. பாவம்!

நாலைந்து பையன்கள் முதுகுப்புறத்தைக் காட்டிக்கொண்டு பேப்பர் பார்க்கிறார்களே. அவர்கள் எல்லாம் ஒரு 'செட்'. வகுப்பிலே கடைசி பத்து 'ரேங்கை'க் குத்தகை எடுத்தவர்கள். பெயிலாகிவிட்டால் ஹோட்டலிலே டிபனைச் சாப்பிட்டு, சினிமா பார்த்துவிட்டு வீட்டிலே பட்டினி கிடப்பதாகப் பாசாங்கு செய்பவர்கள். சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் படிப்பில் ஊக்கம் ஏற்படுவதற்காகப் பாஸ் பண்ணினால் ஏதாவது வாங்கித் தருகிறேன் என்று சொல்வார்கள். தப்பித் தவறிப் பையன்கள் குருட்டாம் போக்கில் பாஸ் பண்ணி விட்டிருந்தால் பெற்றோர்களுக்குத்தான் கஷ்டம். உடனே வாங்கித் தந்தால்தான் ஆயிற்றென்று பிடிவாதம் பிடிப்பார்கள். மற்ற பையன்கள் சரியாகவே தெரியவில்லை. ஒரு பஸ் வேறு மறைத்துக் கொண்டிருக்கிறது. எப்படி என் கட்டுரை?




## 7. சகோதரத் துரோகம்

சகோதரர்கள் ஒருவரை யொருவர் வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்ததில் எவ்வளவோ சந்தோஷ மடைந்தார்கள். பிறகு சூரியகுமாரனுடைய தமையன்மார்களான விஜய குமாரனும், நிர்மல குமாரனும் தங்களுக்கு நேர்ந்த இடையூறுகளைப் பற்றிக் கூறினார்கள். இப்படிப் பேசிக் கொண்டே சகோதரர்கள் மூவரும் தலை நகரத்தை நோக்கிச் சென்றார்கள். வழியில் சூரியகுமாரன் தனக்கு நேர்ந்த இடையூறுகளையும் கடைசியில் ஜீவரசத்தைப் பெற்று வந்ததையும் பற்றி வெகு விஸ்தாரமாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும் முதலில் அவர்கள், "என்ன! ஜீவரசம் கொண்டு வந்து விட்டாயா?" என்று ஆச்சரியம் மேலிட்டுக் கூறினார்கள். பிறகு நாழிகை ஆக ஆக, ஜீவரசத்தைக் கொண்டு வந்து கொடுத்துத் தந்தையினிடமும் மக்களிடமும் பாராட்டுதல்களைப் பெறும் பேறு தங்களுக்கின்றிச் சூரியகுமாரனுக்கல்லவா வாய்த்தது என்று மூத்த சகோதரர்கள் இருவரும் பொறாமைப் படலாயினர்.

உச்சி வேளை, வெப்பம் தாங்கக் கூடியதாக இல்லை. இரவு பகல் பாராமல் வெகு தூரம் பிரயாணம் செய்ததால் சூரியகுமாரன் மிகவும் களைத்திருந்தான். எங்கேயாகிலும் சற்று நேரம் படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். அந்த வேளை சற்று தூரத்தில் ஒரு பாழ் மண்டபம் தெரிந்தது. அதைப் பார்த்ததும், "அண்ணா! நாம் இங்கு சற்று நேரம் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டால் என்ன? எனக்கு ரொம்பவும் அலுப்பாக இருக்கிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

விஜய குமாரன், "நாங்கள் என்ன சொல்ல இருக்கிறது? நீ இளைப்பாற வேண்டியது தான்! வா, போவோம்" என்று சற்றுக் குத்தலாகவே பதில் சொன்னான்.

சூரியகுமாரன், 'அண்ணா ஏன் இப்படிப் பேசுகிறான்' என்று நினைத்தபடியே படுத்தான். சற்று நேரத்தில் தூங்கியும் போனான். சூரியகுமாரன் அயர்ந்து தூங்குவதைக் கண்ட அண்ணன் மார்கள் இருவரும் வெகு நேரம் ஏதோ ரகசியமாகப் பேசினார்கள். பிறகு, சூரியகுமாரன் கொண்டு வந்திருந்த பொருள்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். அதில் பள பள வென்று மின்னும் தாமிரப் பாத்திரத்தைக் கண்டார்கள். அவ்வளவுதான். அந்தப் பாத்திரத்தி லிருப்பது ஜீவரசம் என்று தெரிந்து கொண்டார்கள். உடனே விஜயகுமாரன் பக்கத்திலிருந்த ஊருக்குள் நுழைந்து ஏதோ ஒரு பாத்திரம் கொண்டு வந்தான். உடனே நிர்மல குமாரன் தாமிர பாத்திரத்தைத் திறந்து, அதிலுள்ள ஜீவரசம் முழுவதையும் விஜயகுமாரன் கொண்டுவந்த பாத்திரத்தில் விட்டான். பிறகு தாமிரபாத்திரத்தில், பக்கத்திலிருந்த குட்டையிலிருந்த நீரை நிரப்பி, பழையபடி சூரியகுமாரனது சாமான்களுடன் வைத்து விட்டான்.

இப்படித் தமையன்மார்கள் இருவரும் தம்பி சூரியகுமாரனை ஏமாற்றினார்கள். தன் நிலை மறந்து தூங்கிக் கொண்டிருந்த சூரிய குமாரனுக்கு இவை ஒன்றும் தெரியாது. பாவம்!

சூரியகுமாரன் கண் விழித்தபோது சூரியன் மலைவாயில் விழும் நேரமாகிவிட்டது. ஆனால் சூரியகுமாரனுக்குக் காலையா மாலையா என்பது தெரியாமல், "சூரியோதயமாகி இத்தனை நேரமாகிவிட்டதா?" என்று கேட்டான்.

அண்ணன் மார்கள் இருவரும் இடி இடி என்று சிரித்து விட்டு, "தம்பி, இது சாயங்காலம். இனிமேல்தான் இருட்டப் போகிறது. பாவம், நல்ல அயர்வு. உடம்பு தெரியாமல் தூங்கி விட்டாய்!" என்று அன்பு கனியக் கூறினான் நிர்மல குமாரன்.

முதலில் அவன் குரலில் தொனித்த கடுப்பும் பொறாமையும் மாறி அன்பு கனிவதைக் கண்டு சூரியகுமாரன் ஆச்சரியமடைந்தான்.

விஜயகுமாரன் சொன்னான்: "தம்பி, நாம் இப்பொழுதே புறப்படுவோம். இன்

றைய இரவெல்லாம் பிரயாணம் செய்தால் பொழுது விடியும் தறுவாயில் நம் தலை நகரத்தை அடைந்துவிடலாம். மேலும், நீ இவ்வளவு சிரமப்பட்டு ஜீவரசம்கொண்டு வந்திருக்கிறாய். அதைக் காலா காலத்தில் கொடுத்துத் தந்தையின் நோயைத் தீர்க்க வேண்டியது நமது கடமையல்லவா?"

"ஆமாம், அண்ணா! இன்னும் தாமதப் படுத்தக் கூடாது. இப்பொழுதே புறப்படுவோம்" என்றான் சூரிய குமாரன்.

மூன்று ராஜகுமாரர்களும் குதிரை மீது ஏறிக் கொண்டு மிக வேகமாகத் தங்கள் தேசத்தை நோக்கிப் பிரயாணம் செய்யலாயினர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம், அவர்களுக்கு இருட்டில் வெளிச்சம் காண்பிக்க வேண்டி வந்தது போல் வானில் சந்திரன் உதயமானான். நிலாவைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் மகிழ்ச்சி இன்னும் அதிகமாயிற்று. சூரியகுமாரன் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டுத் தவிக்கும் தன் தகப்பனாருக்கு ஜீவரசத்தைக் கொண்டு போய்க் கொடுக்கப் போகிறோம் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு போனான். மற்ற இரண்டு சகோதரர்களும் சூரியகுமாரன் அரண்மனைக்குப் போனதும் ஏமாந்து போகப் போவதை நினைத்து மனசுக்குள் சந்தோஷப் பட்டுக் கொண்டு போனார்கள்.



"ஆகா! எந்த நிமிஷமும் தயார்" என்றான் சூரியகுமாரன்.

பின்னர், மந்திரிகள் பிரதானிகள், ராஜகுமாரர்கள் யாவரும் அரசன் படுத்திருக்கும் படுக்கை அறைக்குச் சென்றனர். முதல் மந்திரி, மகாராஜா! தங்கள் மூன்றாவது புதல்வர் சூரியகுமாரன் தங்கள் நோயைக் கணத்தில் தீர்க்கும் ஜீவரசம் வெகு பிரயாசைப் பட்டுக் கொண்டு வந்திருக்கிறார். தங்கள் நோய் இன்னும் ஒரு சில நிமிஷங்களில் தீர்ந்துவிடப் போகிறது. தாங்கள் பழைய தேக ஆரோக்யத்தை அடையப் போகிறீர்கள். இனி, தாங்கள் நீடூழி வாழ்ந்து செங்கோல் செலுத்தப் போகிறீர்கள். ஆகவே, சற்று வாயைத் திறவுங்கள்" என்று சொன்னார்.

படுத்தபடியே மன்னரும் வாயைத் திறந்தார். சூரியகுமாரன் தன் தாமிரச் செம்பில் இருந்த தண்ணீரை ஊற்றினான். அவ்வளவு தான். அதன் துர்க்கந்தத்தைத் தாங்க முடியாமல் "சை, அட பாவி, துரோகி! இதுவா ஜீவரசம்" என்று மன்னர் இரைந்தார். பிறகு அவரை இருமல் பிடித்துக் கொண்டு அரை மணி நேரத்துக்குமேல் உலுப்பித் தள்ளி விட்டது. இதைப் பார்த்த சூரியகுமாரன் அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். "நான் கொண்டு வந்தது ஜீவரசமே அல்லவோ? நான் ஏமாற்றப் பட்டேனா?" என்று பல பல கேள்விகள் அவன் உள்ளத்தில் எழுந்தன.

"பாருங்கள்! அவன் துரோகி. அவன் அப்பாவைக் கொன்று விடச் சூழ்ச்சி செய்திருக்கிறான்! ஆனால் உண்மையான ஜீவரசம் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்? இவன் சூழ்ச்சியை அவிழ்த்து விடத்தான் இத்தனை நேரமும் நாங்கள் பிரயாசைப் பட்டுக் கொண்டு வந்த ஜீவரசத்தைப் பற்றிக் கூறாதிருந்தோம்! நாங்கள்தான் ஜீவரசத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்தக் கணமே நிரூபிக்கிறோம்" என்று சொல்லி மன்னரின் வாயில் கொஞ்சம் உண்மை ஜீவரசத்தை ஊற்றினார்கள்.

* * *

பொல பொலவென்று பொழுது விடியும் வேளை தலை நகரத்தை அடைந்தார்கள். ராஜ குமாரர்கள் மூவரையும் கண்ட மாத்திரத்தில் தேச ஜனங்களின் மகிழ்ச்சிக்கு ஒரு எல்லை இல்லை. ஒரே ஆரவாரம் செய்தனர். வாத்ய கோஷங்கள் செய்தனர். இப்படி உற்சாகத்துடன் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ராஜ சபை கூடியது. மந்திரி பிரதானிகள் கூடினர். அவர்கள் முன்னிலையில் மூத்த ராஜகுமாரர்கள் இருவரும், "சூரியகுமாரன் தான் ஜீவரசம் கொண்டு வந்திருப்பதாகக் கூறுகிறான். அதை உடனே மன்னருக்குக் கொடுக்க வேண்டும்" என்றார்கள்.

"அதற்கென்ன இப்பொழுதே கொடுத்தால் போகிறது. என்ன சூரியகுமாரா, உன் அபிப்பிராயம் என்ன? நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார் முதல் மந்திரி.

மன்னர் உதடுகளில் ஜீவரசத்துளி பட்ட மாத்திரத்திலேயே புத்துணர்ச்சி பெற்றார். கண்களில் புதுப் பிரகாசம் வந்தது. உடலில் புது வலி ஏற்பட்டது. உள்ளத்தில் புது உற்சாகம் ஏற்பட்டது. 'என் ஆருயிர்க் கண்மணிகளா' என்று மன்னனும் தம் மூத்த புதல்வர்களைத் தழுவினார். (தொடரும்)

# அன்பின் கேள்வி




மாடியில் அப்பாவின் அறையில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். சிறு குழந்தைகளாக இருந்த போது அப்பாவின் அறை என்பது ஒரு விநோதமான இடம் என்று நானும் என் சகோதரியும் எண்ணுவோம். அதற்குக் காரணம் அப்பாவும் அம்மாவும் எங்களை அந்த அறைக்குள் தாராளமாகப் போகாத படி தடுத்ததுதான். நாங்கள் அந்த அறைக்குள் போனால் ஒன்று, படித்துக் கொண்டிருக்கும் அப்பாவின் அமைதியைக் கெடுப்போம், அல்லது சாமான்களைத் தாறுமாறாகக் கலைத்துப் போடுவோம். எங்களை அவ்வறைக்குள் அனுமதிக்காததில் தவறில்லையே!

எப்போதாவது ஒரு சமயம் அப்பா ஏதேனும் எடுத்து வரத் தம்முடைய அறைக்குள் போகச் சொல்லுவார். அப்பொழுது எங்களுக்கு உண்டாகும் சந்தோஷத்தைச் சொல்லி முடியாது.

அப்பா 'ஷெல்பி'ல் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்திருப்பார். மேல் தட்டில் அவருடைய பெற்றோரின் படங்களும் அவருக்குக் கல்வி புகட்டிய சில ஆசிரியர்களின் படங்களும் இருக்கும். அப் படங்கள் எல்லாம் பழைய முறையில் பிடிக்கப் பட்டவை. வீட்டின் மற்ற இடங்களில் நவீன முறையில் பிடிக்கப்பட்ட படங்கள் பல இருந்தாலும் அவற்றைவிட அந்தப் பழைய படங்கள் அதிசயமாகத் தோன்றியதற்குக் காரணம் அவை அப்பாவின் அறை என்னும் விநோத இடத்தில் இருப்பதுதான் போலும்! ஜன்னலில் வைக்கப்பட்டிருக்கும் பூந்தொட்டிகள் முதல் மேஜை மேலிருக்கும் குண்டூசிகள் தைக்கப்பட்ட காகிதம் வரையில் அப்பாவின் அறையில் எல்லாமே எங்களுக்கு அதிசயமாக இருக்கும். அவற்றை எடுத்துப் பார்ப்பதில் எங்களுக்குத் தனி ஆர்வம்.

ஒரு தடவை மாடி வராந்தாவில் ஒரு ஒடிந்த சீப்புக் கிடந்தது. அப்பா உபயோகித்து எறிந்தது அது. அதை யார் எடுத்துக் கொள்வது என்பதைப் பற்றி எனக்கும் என் சகோதரிக்கும் பெரிய சண்டை உண்டாகி விட்டது. அப்பாவின் அறையில் திருட்டுத்தனமாக நுழைந்து, பல தடவை எடுத்துப் பார்த்து மகிழ்ந்த சீப்பல்லவா அது? அவ்வளவு சீக்கிரத்தில் அதை விட்டுக் கொடுத்து விடுவோமா?

அப்படிப்பட்ட அறையில் பயமின்றி உட்கார்ந்து சுதந்திரமாகப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். நான் இப்போது சிறு பெண் அல்லவே! கலியாணமாகிப் பிறந்தக வாசத்திற்கு வந்திருக்கும் பெரிய பெண் அல்லவா? வாசக சாலையிலிருந்து அப்பாவே புஸ்தகம் தேர்ந்தெடுத்து வந்து தந்து, "நல்ல இலக்கியம், கீழே ஒண்டுக் குடித்தனக்காரர்களின் தொந்தரவில் நன்றாகப் படிக்க முடியாது. என் அறையில் உட்கார்ந்து நிம்மதியாகப் படி, அம்மா!" என்று சொல்லியிருக்கும்போது எனக்கு என்ன பயம்?

சலுகைகள் நிறைந்த பிறந்தக வாழ்க்கையை அணு அணுவாகச் சுவைத்துக்கொண்டிருந்தேன் நான். இங்கே வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. இன்னும் இந்த வாழ்க்கை எனக்குச் சலிக்கவில்லை.

இரண்டு வருஷங்களாகப் பார்க்காமல் இருந்த பெற்றோரையும் சகோதர சகோதரிகளையும் சந்தித்து அளவளாவுவதில் எத்தனை ஆனந்தம் இருக்கிறது! இரண்டு வருஷத்துச் சமாசாரங்களை அல்லவா பேசித் தீர்க்க வேண்டும்! சின்ன விஷயங்கள்கூட அப்போது பிரமாதமான முக்கியத்வம் பெற்று விடும்! சற்றும் வேடிக்கை இல்லாத விஷயங்கள்கூட, எல்லோருமாகச் சேர்ந்து பேசுவதால் மிக மிக ஹாஸ்யமாகத் தோன்றும்! இரண்டு வருஷங்கள் பார்க்காமல் இருந்ததாலேயே மிகப் பெரியவர்களாகி விட்டதாகத் தோன்றும் தம்பிகள் பண்ணும் உபசாரம், எந்தப் பொருளானாலும் நல்லதையே எனக்குத் தேர்ந்து கொடுக்கும் தங்கைகளின் பரிவு, பெற்றோரின் அபரிமிதமான வாத்ஸல்யம் இவற்றால் பிறந்தகம் சொர்க்கமாகவே ஆகிவிட்டது. சினிமா, மாலை உலாவல், விலாச் சாப்பாடு எல்லாம் ஜமாளம் அடித்துக் கொண்டிருந்தேன். கணவர் வீடு என்று இருக்கிறது, அங்கே திரும்பிப் போக வேண்டும் என்ற நினைவே இல்லை.

கீழே கலகலப்பான பேச்சுக் குரல் கேட்டது. என் தங்கைகளும் தம்பிகளும் மத்தியான உணவுக்காகப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து விட்டார்கள் போலிருக்கிறது. புத்தகத்தை மூடி விட்டு மேஜையையும் சற்று ஒழுங்கு பண்ணி விட்டு நான் மாடிப் படியில் இறங்கும் சமயம் என் தம்பி தடதடவென்று மேலே ஏறி வந்தான், "அக்கா, உனக்கு ஒரு கடிதம்!" என்று கத்தியபடியே.

என் கணவர்தான் கடிதம் போட்டிருந்தார். நான் கவரை உடைப்பதற்குள் எல்லோரும் என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டனர்.

"அக்கா, நீ கேட்ட பாட்டை எழுதிக் கொண்டு வந்து விட்டேன். அப்பப்பா, அதை

"எழுதித் தருவதற்கு என்ன பிகு பண்ணிக் கொண்டாள் தெரியுமா அந்தப் பெண்!" என்றாள் ஒரு தங்கை.


"கட்டுரைப் போட்டியில் நான்தான் முதல்! இதோ பார், என் கட்டுரையை!" என்று என் முன் ஒரு 'நோட் புக்'கை நீட்டினான் ஒரு தம்பி.

இதற்குள் அங்கே வந்த என் அம்மா "ஏண்டா அவளை நச்சரிக்கிறீர்கள், வந்த கடிதத்தைக் கூடப் படிக்க விடாமல்!" என்று அவர்களைக் கண்டித்தாள். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு இரண்டடிகள் எடுத்து வைப்பதும், திரும்பவும் ஏதோ நினைத்தவர்களாய், "அக்கா, இன்று வகுப்பில்......" என்று சொல்லிக் கொண்டு வருவதுமாகச் சில நிமிஷங்கள் சென்றன. என் அம்மா "போய்ச் சாப்பிடத் தட்டு வைத்துக் கொள்ளுங்கள்!" என்று ஒரு அதட்டல் போட்டதும் சமையலறையைப் பார்க்க ஓரே ஓட்டமாக ஓடி விட்டார்கள்.

நான் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். என்னை நச்சரிக்கக் கூடாதென்று அம்மா குழந்தைகளை அதட்டினாளே தவிர, தான் சில வரிகள் படிப்பதற்குள் தானே என்னை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். "என்ன எழுதியிருக்கிறார்? சௌக்யம் தானே? விசேஷமாக ஒன்றும் இல்லையே? கடிதம் நீளமாக இருக்கிறதே!" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருந்தாள்.

என் கணவரின் கடிதம் நீளமாகத்தான் இருந்தது. ஆனால் அதில் விசேஷமாக ஒன்றும் இல்லை. தம் வாழ்க்கை ரொம்ப அலுத்து விட்டதாகவும் நான் கூடிய சீக்கிரம் திரும்பினால் தேவலை என்றும் எழுதியிருந்தார். கடைசியில் எழுதியிருந்த சில வரிகள்தான் என் உள்ளத்தில் சற்று பலமாகப் பட்டன.

"......முன்பு பொட்டலாகக் கிடந்த பள்ளத்தை இப்போது அழகான 'பார்க்'காகப் பண்ணியிருக்கிறார்கள். அதன் நடுவே அமைக்கப் பட்டிருக்கும் பாதை நேரே நம் பழைய வாய்க்கால் கரையைப் போய்ச் சேருகிறது. மாலை வேளைகளில் இரு பக்கமும் மலர்ச் செடிகளுள்ள அந்தப் பாதை வழியாக வாய்க்கால் வரை உலாவப்போனால் மிகவும் குஷியாக இருக்கும். ஆனால் கடற்கரையை அனுபவிக்கும் வசதியில் நீ இப்போது இருப்பதால் இதை ஒரு பொருட்டாக மதிப்பாயா என்பது தான் சந்தேகம். வசந்த காலம் முடியப் போகிறது. அதற்குள் சில நாட்களாவது நாம் இருவருமாகப் 'பார்க்'கையும் வாய்க்காலையும் அனுபவித்துவிட வேண்டுமென்பது என் விருப்பம். இதற்காக நீ அவசரப்பட்டுக் கொண்டு உன் இஷ்டத்திற்கு மாறாகப் புறப்பட்டு விடாதே! இரண்டு வருஷங்கள் உன்னை உன் பெற்றோரிடமிருந்து பிரித்து வைத்தது எத்தனை கொடுமையான செயல் என்பதை, அன்று நாம் உன் வீடு சேர்ந்ததும் நீ கண்ணீருடன் உன் சகோதர சகோதரிகளிடம் பாய்ந்து ஓடியபோது உணர்ந்தேன். உன் ஆசை தீர அங்கே இருந்து விட்டு வா."



எத்தனை தங்கமான உள்ளம் படைத்தவர்! நான் இல்லாமல் அவருக்குக் கஷ்டமாக இருந்தாலும் என் சந்தோஷத்திற்காக அதைச் சகித்துக் கொள்ளத் தயாராக இருந்தார். அன்று சாப்பிடும்பொழுது அவர் நினைவாகவே இருந்தது. அம்மாவின் பேச்சுக் கூட எனக்குச் சுவாரஸ்யப்படவில்லை.

மறு நாளிலிருந்து எனக்கு எல்லாம் மறந்து போய்விட்டது. பழையபடி அரட்டையடிப்பதும் மாலையில் எல்லோருடனும் வெளியே போய் வருவதுமாக இருந்தேன். விவாகமான பின் நானும் என் அக்காளும் சேர்ந்து எங்கள் வீட்டில் இருந்ததே இல்லை.

அப்பா அவளை வரச் சொல்லிக் கடிதம் போட்டார். அவளும் வருவதாக இருந்தாள். வரும் தேதியைப் பின்னுல் தெரிவிப்பதாக அவளிடமிருந்து கடிதம் வந்ததும் என் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. நாங்கள் எல்லோருமே அவள் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் மத்தியானம் நாங்கள் எல்லோருமாக வாசற் திண்ணையில் உட்கார்ந்து 'ஐஸ் கிரீம்' சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். 'ஐஸ் கிரீ'மைப் போலவே எங்கள் உள்ளங்களும் குளிர்ந்து இனித்திருந்தன. நாங்கள் அன்பு நிறைந்த சகோதர சகோதரிகள் சேர்ந்திருக்கும் பொழுது மன நிறைவுக்கு என்ன குறைச்சல்!

தூரத்தில் தபால்காரன் வருவது தெரிந்தது. அவன் எங்கள் வீட்டை நோக்கித் திரும்பியதைப் பார்த்த நான், "அதோ தபால்காரன் வருகிருன். நான் சொல்கிறேன். அக்காளின் கடிதம் இருக்கும்" என்றேன்.

"இல்லை. அத்திம்பேரின் கடிதமாகத் தான் இருக்கும்" என்ருள் என் தங்கை.

"பார்க்கலாமா?" "என்ன பந்தயம்?" என்ற பேச்சுக்களிடையே தபால்காரன் எங்கள் வீட்டை அடைந்து இரண்டு கடிதங்களைக் கொடுத்து விட்டுச் சென்ருன். பந்தயம் கட்டிய யாருக்கும் தோல்வி இல்லை. என் அக்காளிடமிருந்து ஒரு கடிதமும் என் கணவரிடமிருந்து ஒரு கடிதமும் வந்திருந்தன.

என் தங்கை என் அக்காளின் கடிதத்தைப் பார்த்து விட்டு, "அக்கா அடுத்த திங்கட்கிழமை வருகிருளாம்!" என்று கூவினுள்.

என் கணவரின் கடிதம் சுருக்கமாக இருந்தது. அதே அடுத்த திங்கட்கிழமை அவருடைய அண்ணுவும் மன்னியும் அங்கே வரப் போகிருர்களாம். இரண்டே நாட்கள்தான் தங்குவார்கள் என்று எழுதியிருந்தார். என் மனம் அலை பாய ஆரம்பித்தது. என் மனநிலை என்ன என்பது எனக்கே தெரியவில்லை.

என் கணவரின் கடிதத்தைப் பற்றி என் தாயாரிடம் சொல்லி விட்டு, "எனக்கு ஒன்றும் செய்வதென்றே தெரியவில்லை" என்றேன்.

"ஏன், என்ன?" என்ருள் அம்மா.

"அவர்கள் வருகிருர்களாமே, நான் போக வேண்டாமா? அக்காளைப் பார்க்காமல் நான் எப்படியம்மா போவேன்?" என்றேன் குரல் தழுதழுக்க.

"நீ எதற்கடி போக வேண்டும்? வீட்டிற்குப் பெரியவராக மாமியார் இருக்கிருரே! நீ போய்த்தான் ஆகவேண்டும் என்று இல்லையே!"

"இல்லை, அம்மா! அபூர்வமாக அவர்கள் எங்கள் வீட்டிற்கு வருகிருர்கள். அப்போது நான் அங்கே இல்லாவிட்டால் நன்ருயிராது. மாமியார் கவனித்துக் கொள்வார் என்ருலும் எல்லோருமாக இருக்கும்பொழுது நான் மாத்திரம் இல்லா விட்டால் அவருக்குக் குறையாக இருக்கும்" என்றேன் நான்.


மூன்று கடிகார ஆர்டருக்கு ஒன்று இனாம்!

உயர் ரக மிவர் வாட்சுகள், ஸ்விஸ் தயாரிப்பு. 5 வருஷ உத்தரவாதம். இதுவரை இக் குறைந்த விலைக்குக் கொடுத்ததில்லை. கிடைக்குமன் போதுமே உள்ளன.

இலவசம்

No. 1. Size 6¾"



15 ஜுவல்ஸ் ஸ்டீல்பேக் கேஸ் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

No. 2. Size 6¾"



15 ஜுவல்ஸ் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

No. 3. Size 9¾"
Water Proof



15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 48/-
15 ஜுவல்ஸ் க்ரோம் உயர் ரகம் ரூ. 52/-
17 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 55/-

No. 4. Size 8¾"



5 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 32/-
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

No. 5. Size 6¾"



13 சைஸ் க்ரோம் கேஸ் ரூ. 19/-
5 ஜுவல்ஸ் பிரத் ரோல்டுகோல்டு ரூ. 25/-
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-



அலாரம் டைம்பீஸ் ரூ. 19/-
உயர் ரகம் ரூ. 21/-
பாக்கெட் வாட்ச் ரூ. 13/-

PIONEER WATCH COMPANY
Post Box No. 11428, CALCUTTA-6

# இடம் உண்டா?




சென்னை மிருகக் காட்சிச் சாலையில் மிருகங்களை அதிகப்படுத்தச் சென்னைக் கார்ப்பொரேஷன் நிர்மானித்திருக்கிறதாம். இந்த மிருகங்களுக்கும் இடம் கிடைக்குமா?

---

"போகத் தீர்மானித்து விட்டாற் போலல்லவா இருக்கிறது உன் பேச்சு?" என்றாள் என் தாய் சற்றுக்காரமாக. பிறகு, "போனால் மறுபடியும் இப்படித்தானே? இரண்டு வருஷங்கள் ஆகுமோ மூன்று வருஷங்கள் ஆகுமோ உன்னைப் பார்க்க? வீட்டில் யாருமில்லையென்றால் நீ போய்த்தான் ஆக வேண்டும். மனுஷர்கள் இருக்கிறார்களே!" என்றாள்.

என் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. பிறந்த வீட்டை விட்டுப் போக இஷ்டமேயில்லை. ஆனால் கணவர் வீட்டிற்குப் போகவும் விருப்பமாக இருந்தது. எதையும் நிச்சயிப்பது என் கையில்தான் இருக்கிறது. முன்பு ஒரு சமயம் கணவருக்கு ஆபீஸில் 'இன்ஸ்பெக்ஷன் டைம்' என்ற காரணத்தால் அவரை ஹோட்டல் சாப்பாட்டிற்கு விட முடியாமல் அக்காவின் சீமந்தத்திற்குப் போகாததுகூட எனக்கு இவ்வளவு குறையாகத் தோன்றவில்லை. போக வேண்டும் என்று அப்போது நான் துடிக்கவில்லை. இதை நினைத்து நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். அப்பாவும் என் தங்கை தம்பிகளும் அம்மாவின் கட்சியாகவே பேசினார்கள். "அக்கா வந்தபின் எல்லோருமாக 'க்ரூப் போட்டோ' எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூடப் பேசிக் கொண்டோமே, அக்கா! நீ இப்படித் திடீரென்று புறப்படுகிறாயே!" என்றான் என் சின்னத் தம்பி. ஆனால் என் கட்சியை எடுத்துச் சொன்னதும் அப்பா ஒப்புக் கொண்டார்.

புறப்படுவது நிச்சயமானதும் என்னால் துக்கத்தை அடக்கவே முடியவில்லை. இந்த அன்பு நிறைந்த குழந்தைகளைப் பிரிந்து எப்படிப் போவது? திங்கட்கிழமை எனக்காகவே இங்கே வரும் அக்கா நான் இல்லாததைக் கண்டு என்ன நினைப்பாள்? மறுபடியும் நான் இங்கே வருவது எப்பொழுதோ!

புறப்படுவதற்கு முதல் நாள் மாலை எல்லோருமாக வெளியே உலாவி விட்டு இரவு வீட்டுக்கு வந்தோம். சமையலறையிலிருந்து 'கமகம'வென்று வாசனை வந்தது. அம்மா எனக்குப் பிடித்தமான சமையலைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். என் தங்கை 'ரயில்வே கை'டைக் கையில் வைத்துக் கொண்டு நான் போகும் வழியில் என்னென்ன ஸ்டேஷன் இருக்கின்றன என்பதைச் சொல்லி வந்தாள்.

"நீ போகும் வழியெல்லாம் நல்ல இயற்கைக் காட்சிகள்தான். உங்கள் ஊருக்கு முதல் ஸ்டேஷன் மிக அழகாக இருக்கும் இல்லையா? அங்கேயே இறங்கி விடலாமா என்றுகூடத் தோன்றும். ஆனால் அது முடியுமா?" என்றான் என் தம்பி.

நான் மனசுக்குள் சிரித்துக் கொண்டேன். தம்பியின் கேள்வி என் மன நிலைக்குச் சரியான பதில் தந்ததுபோல் ஆகிவிட்டது.

அடுத்த ஸ்டேஷனில் இறங்க வேண்டியிருக்க, இந்த ஸ்டேஷன் அழகாக இருக்கிறதென்று இங்கேயே இறங்கிவிட முடியுமா? பிறந்தக வாழ்க்கை என்னதான் சலுகை நிறைந்ததாக இருந்தாலும் அங்கேயே தங்கிவிட முடியுமா? என்றைக்காவது கணவர் வீட்டுக்குப் போய்த்தானே ஆக வேண்டும்?

# விசைச் சக்தியின் வேகம்



நீங்களும் பெறுக



## வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சிரமமான வேலை நிலையிலும், சளைக்காமல் உணர்ச்சியிருக்கும் போதுதான் நீங்கள் திடமான ஆரோக்கியம் உள்ளவரென்பதைக் குறிக்கும். சளைக்காத உணர்ச்சி பெறுவதற்கு, பிரதி தினமும் போஜனத்தின் அங்கமாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதைத்தவிர சிறந்த வேறொன்றுமில்லை. தேக வலுவூட்டுவதற்கு அத்யாவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட், வேலை செய்வதற்கான திராணியை பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் இதர நிலைமைகளுக்கு இடம் கொடாதபடி தேகத்திற்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

உங்கள் குடும்பம் முழுவதற்கும் இப்பொழுதே வாங்கி விடுங்கள்.




# WATERBURY'S COMPOUND

## வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் தெம்புடன் வைத்திருக்கும்

NAS 739

குழந்தையும் நாளும் வற்புறுத்திக் கேட்பது

# கால்கேட் பேபி பௌடர்

கால்கேட் பொரேடெட் பேபி பௌடரை உபயோகித்த பிறகு நீங்களும் இதையே கூறுவீர்கள். இப்பௌடரில் மிகவும் நேர்த்தியான டால்க்,போரிக் ஆஸிட் அடங்கியிருக்கின்றன. குழந்தையின் மென்மையான சருமத்திற்கு உற்சாகத்தையும்,சுகத்தையும்கொடுத்து எரிச்சலையும்,வேர்க்குருவையும் வரவொட்டாமல் தடுக்கிறது.




ஓர் கால்கேட்
உயர்ந்த ரகச் சரக்கு!

## பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடேர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதி யுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடேர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக்கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்கள்.

### ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும்போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தைத் தாக்குகிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிப்பு, எரிப்பு வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப்போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

### விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடேர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரமாக வேலை செய்கிறது. தமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர். நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக தமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பலமருந்துக்குப் பிறகு நிக்ஸோடேர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் தமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தில் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரிய மடைந்தனர்."




### திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடேர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக்கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் கவர்ச்சிகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள் இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். அந்த களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.

# கார்த்திகை வாணம்

ரா. வெங்கடேசுவரன்



''உங்கள் தங்கைக்குக் கார்த்திகைக்கு என்னவெல்லாம் பண்ண வேண்டும் என்று தெரியாதாம். முதல் கார்த்திகையாகவும் இருக்கிறது. நீங்கள் வந்தால் அவளுக்கும் உதவியாக இருக்கும். எல்லோரும் இந்த முதல் கார்த்திகையை இங்கேயே உற்சாகமாகக் கொண்டாடலாம்'' என்று ரகு எழுதியிருந்தான். எனக்கும் போய்விட்டு வந்தால் என்ன என்று தோன்றியது. ஆகவே, உடனே புறப்பட்டு விட்டேன்.

கல்யாணமான பிறகாவது அவர்கள் மாறியிருப்பார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் லவலேசமும் மாறவில்லை. ரகுவும் சீதாவும் இன்னும் குழந்தைகளாகத் தானிருந்தார்கள். பாருங்களேன்! இன்னும் கார்த்திகை வாணம் பண்ணப் புருஷனும் பெண்டாட்டியும் விளையாடுகிறார்கள். அவர்களைப் பற்றி நான் என்ன சொல்வது! இதோ அவன் வெடி உப்பைப் பொடி பண்ணுகிறான். அவள் கரிப்பொடி தயார் செய்கிறாள். இப்படியும் ஒரு நூதன தம்பதிகள் எங்கேயாவது உண்டா!

''ரகு, உனக்கு வயதாக வில்லையா!''

''மன்னி, வாணம் எனக்கில்லை. என் இஷ்ட தேவதைக்கு!'' என்றான் ரகு குறும்பாக.

அவன் இஷ்ட தேவதை என்று சொன்னவுடன் சீதா வெட்கம் கலந்த ஒரு முறுவல் பூத்தாள்.

''இப்படி 'இஷ்ட தேவதை, இஷ்ட தேவதை' என்று ஸ்மரித்துக் கொண்டிருக்கிறாயே, அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அல்லவா வாணம் கட்டப் பாந்தமாயிருக்கும்!'' என்றேன்.

அப்பொழுது பழைய நினைவுகள் என் நெஞ்சிலே மலர்ந்தன. குத்து விளக்கை ஏற்றி வைத்து விட்டு நமஸ்காரம் செய்துகொண்டிருந்தாள் சீதா. ''கையோடு இரண்டு கை விளக்குகளுக்கும் எண்ணெய் விட்டு ஏற்றி, வாசலில் கொண்டு போய் வை; நான் கை வேலையை முடித்துக் கொண்டு வருகிறேன்'' என்று உள்ளிருந்தபடியே சொன்னேன் நான்.

சற்றுக் கழித்து வந்து பார்த்தால் குத்து விளக்குக்கு அருகே கைவிளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வாசலில் கொண்டு வைக்கக்கூட முடியாதபடி அப்படி என்ன அலுவல் அவளுக்கு வந்துவிட்டது என்று எண்ணிய எனக்குச் சற்று எரிச்சலும் வந்தது. ஆனால் தோட்டத்துப் பக்கமாக இருந்த ஜன்னலில் பார்வை சென்றதும் எனக்கு விஷயம் விளங்கி விட்டது. ரகுவுடன் வாணம் கட்டிவிடச் சென்று விட்டாள் சீதா. அந்த உற்சாகத்தில் தீபங்களைக்கூட உரிய இடத்தில் கொண்டு வைக்க மறந்து விட்டாள்!

சட்டப் பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளை. அவனுக்கு வயசாக வில்லையா! இன்னும் குழந்தை மாதிரி விளையாடுகிறானே! என் கணவருக்கு அவன் ஒரு விதத்தில் அம்மாஞ்சி ஆக வேண்டும். ஏழாவது வயதிலேயே தாய்தந்தையர்களை இழந்து விட்டான். சொத்து ஒன்றுதான் இருந்ததே ஒழிய மற்ற விஷயங்களில் அவன் அதிக பாக்கியம் செய்யவில்லை. என் கணவர்தான் அவன் சொத்தையும் மேற்பார்வை பார்த்துக்கொண்டு அவனையும் படிக்க வைத்துக் கொண்டிருந்தார். பெற்றோர்கள் இல்லாத பிள்ளை என்று என் கணவரும் அவனுக்கு அதிகச் சுதந்திரம் கொடுத்திருந்தார். எனக்கும் அவனிடம் பாசம் வளர்ந்தது. சதா சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டு, 'மன்னி, மன்னி' என்று ஒட்டுதலாக இருப்பான்.

முன் இருட்டு. ரகு வாணத்தைச் சுற்றிக் கொண்டிருந்தான். தூரத்தி லிருந்து கொண்டு பார்ப்பதோடு திருப்தி யடைந்து நின்றாள் சீதா. அவன் அவளிடம் வாணத்தை நீட்டினான். அதற்கு அவள் துணியவில்லை. ''சுற்றத் தெரியாது'' என்றாள் அவள். ''சரி, நானே சுற்றுகிறேன்.

நீ என் பக்கத்தில் வந்து நில்லு, போதும்'' என்றான் அவன். தயங்கித் தயங்கி நடந்து தடுமாறிக்கொண்டே அவள் அவனருகில் சென்றாள்.

அவன் வாணம் சுற்றினான். பயத்தினால் அவள் அவனிடம் ஒண்டிக் கொண்டாள். "வாணத்தைக் கண்டு இப்படிப் பயப்படுகிறாயே, அடுப்புப் பற்ற வைப்பதற்கும் இப்படித்தான் பயப்படுவாயோ !'' என்று ரகு அவளைப் பரிகாசம் பண்ணினான். "ஐயோ வேண்டாமே, ஐயோ, வேண்டாமே'' என்பதைத் தவிர அவளால் வேறொன்றும் சொல்ல முடியவில்லை. அவள் அவஸ்தைப் படுவதைக் கண்டு ரகு சிரித்தான்.

சீதா எப்படியோ திமிறி விடுவித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அந்தக் காட்சியைக் கண்ட என் உள்ளத்தில் ஒருவிதத் திருப்தி மட்டும் ஏற்பட்டது. ஆனால் அப்பொழுது, சற்றுக் கடுகடுப்பை வருவித்துக் கொண்டு, "சீதா !'' என்று அழைத்தேன். அவள் அருகில் வந்ததும் ஒன்றும் அறியாதவள் போல் "ரகு, என்னடி செய்கிறான் !'' என்று கேட்டேன். "வாணம் விட்டுக் கொண்டிருக்கிறார்'' என்றாள். இதுவரை 'அவன் இவன்' என்று பேசிக் கொண் டிருந்தவள் "விட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று கூறியது எனக்கு அதிசயமாக இருந்தது.

சீதாவுக்கு அப்பொழுது பதின்மூன்று வயது தான். இருந்தாலும் அவளுக்கு அதிகச் சுதந்திரம் கொடுப்பதில் எனக்குப் பிரியமில்லை.

அடுத்த நாளும் வாணம் கட்டி ஆடினான் ரகு. 'ரகு, உனக்கு வயதாக வில்லையா ! இவ்வளவு வயதுக்கு மேல் நீ வாணம் கட்டி விளையாடினால் நாலு பேர் சிரிக்க மாட்டார்களா !'' என்று நான் அவனைக் கேலி செய்தேன். "பின் எதைக் கட்டி விளையாடுவது, மன்னி !'' என்றவன் தன் கேள்வியைச் சமாளித்துக் கொள்பவன் போல், "நான் விளையாட வில்லை மன்னி ; சீதாவுக்காகவல்லவோ நான் கட்டித் தருகிறேன் !'' என்றான்.

"சீதாவும்தான் என்ன குழந்தையா, வாணம் கட்டி விளையாடுவதற்கு !''

"அவள்தானே நம் வீட்டில் எல்லோரையும் விட வயதில் சின்னவள்! அவள் குழந்தைதானே!''

"கல்யாணம் பண்ணிப் புக்ககத்திற்கு அனுப்ப வேண்டிய வயதாகி விட்டது. இன்னும் அவள் எப்படிக் குழந்தையாக இருக்க முடியும் !''

"போ, மன்னி! புக்ககம் போவது வரையிலாவது விளையாடி விட்டுப் போகட்டுமே !''

"ஆமாம் ரகு, நாளை இவளைக் கட்டிக் கொள்ள வரப் போகிறவன் 'வாணம் கட்டி விளையாடத் தெரியுமா !' என்றுதானே கேட்கப் போகிறான் !''

"இந்தக் காலத்தில் அப்படித்தான் மன்னி கேட்பார்கள். உண்மையில் நான் பெண் பார்க்கப் போனால் அப்படித்தான் கேட்பேன்'' என்றான். பிறகு ஏதோ தன்னை மறந்து வார்த்தையைக் கொட்டி விட்டவன் போல் விழித்து விட்டுச் சீதாவை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கு விளையாடச் சென்று விட்டான்.

ரகுவுக்குச் சீதாவின் மேலும் சீதாவுக்கு ரகுவின் மேலும் ஒருவித அன்பு வளர்ந்து வருவதை நான் அறிந்தேன் ; ஆமோதித்தேன்.

ஒரு வருஷத்திற்கு முன் என் தந்தைக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணை இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சீதாவின் கல்யாணத்தைப் பற்றி அவர் மிகுந்த கவலையுடனிருந்தார். அவள் கல்யாணத்துக்குக் குறைந்தது ஐயாயிரம் ரூபாயாவது வேண்டும். ஆனால் என் தந்தையிடமோ ஐயாயிரம் பைசா கூடக் கிடையாது. என்ன செய்வார் ! ஆகவே சீதாவை என்னிடம் அனுப்பினால் ரகுவுக்கு அவள்மேல் ஆசை பெருகச் சந்தர்ப்பமுண்டு. அதைப் பயன்படுத்திக் கொண்டு கல்யாணத்தைச் சுலபமாக நடத்தி விடலாம் என்று எண்ணினார். அவர் மேலும் குற்றமில்லை. இல்லாமைதானே இத்தகைய எண்ணங்களுக் கெல்லாம் மூல காரணம் !

இச்சந்தர்ப்பத்தில்தான் என் உடல் நலம் கெட்டது. எப்படியோ வீட்டு நிர்வாகத்தைப் பலஹீனமான உடம்புடன் சமாளித்து வந்தேன். என் கணவர் 'யாரையாவது அழைத்துக் கொண்டால் உதவியாக இருக்குமே !' என்று சொன்னார். அவர் அதை அடிக்கடி வற்புறுத்தவே, நானும் அதைச் சாக்காக வைத்துக் கொண்டு, "உங்கள் மாமனாருக்கு ஒரு காகிதம் போடுங்கள். அவர் சீதாவை அனுப்புவார். எனக்கும் உதவியாக இருக்கும். அவளுக்கும் ஒரு புது ஊருக்கு வந்த மாதிரி இருக்கும்'' என்றேன்.

சீதா வந்தாள். என் கல்யாணத்தின் போது தான் ரகு சீதாவைப் பார்த்திருக்கிறான். அப்பொழுது அவள் சின்னவளாக, பாவாடை சட்டை போடும் பாலிகையாகத் திகழ்ந்தாள். இப்பொழுதோ மேலாக்குடன் நாணம் என்னும் ஆபரணத்துடன் புத்தம் புதிய மலராகக் காட்சியளித்தாள் ! அவள் வருவதற்கு முன் அவளைப் பற்றி அவ்வளவு கேள்விகள் கேட்ட ரகு அவள் வந்த பிறகு அவளை ஏறிட்டுப் பார்க்கக்கூட வெட்கப்பட்டான். இப்படியே இரண்டு நாட்கள் கழிந்தன. ரகு பழைய ரகுவாகவேயில்லை. எனக்கும் அது பிடிக்கவில்லை. ஆகவே, ஒரு நாள் அவனிடம், "ரகு, நீ பழைய ரகுவாகவே இருந்தால்தான் எனக்கு உற்சாகமாயிருக்கிறது'' என்றேன். "மன்னி, நான் இருக்கத் தயார். ஆனால் அவள் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறாளே என்று தான் பயப்படுகிறேன்'' என்றான் ரகு. "ஓஹோ, வந்தாயா வழிக்கு ! அவளிடம் நல்ல பெயர் சம்பாதிக்கப் பார்க்கிறாயா !'' என்றேன் கேலியாக. இரண்டு பேரும் சிரித்தார்கள். அதிலிருந்து அவளும் அவனும் சகஜமாகப் பழக ஆரம்பித்து விட்டார்கள். கார்த்திகையின்போது இருவரும் சேர்ந்து வாணம் கட்டி விளையாடத் தொடங்கி விட்டார்கள் என்றால் அதிகம் சொல்வானேன் ! ரகு அவளுடைய ரம்யமான நட்பில் தன்னை இழந்து விட்டான் என்பதையும் நான் நன்கு கண்டு கொண்டேன்.

ரகுவுக்கு அவள்மேல் விருப்பம் ஏற்பட்டிருப்பது போலவே, சீதாவுக்கும் அவன்மேல் விருப்பம் ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும் என்பது அவளுடைய நடத்தையிலிருந்து ஊர்ஜிதமாயிற்று. மேலும் அப்பாவுக்கு ரகுவை விடச் சிறந்த மாப்பிள்ளை கிடைக்கவே முடியாது. ஈச்வரா ! என் இஷ்டங்களுக்கு நல்லபடியான முடிவு ஏற்பட வேண்டுமே என்று வேண்டிக்கொண்டேன். என் இடது கண் துடித்தது. இடது கண் துடிப்பது நல்ல சகுனம்தானே !

இதே சமயம், "என்ன, யோசனை பலமாயிருக்கிறது !'' என்று கேட்டுக்கொண்டே என் கணவர் உள்ளே நுழைந்தார்.

"ஒன்றுமில்லை. சீக்கிரமே சீதாவை அப்பா அழைத்துக் கொண்டு போய் விடுவாரே! முக்கால் வாசி வீட்டு வேலைகளை அவள் செய்யும்போதே எனக்குத் தள்ளவில்லையே ! அவளும் போய் விட்டால் என்ன செய்வது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றேன்.

"சீதாவா! அவள் எதற்காகப் போகவேண்டும்! இங்கேயேதான் இருக்கட்டுமே. அவள் இருப்பது நமக்குக் கஷ்டம் என்று சொன்னால்தானே உன் அப்பா அவளை அழைத்துக் கொண்டு போவார்! உன் அப்பா வந்து கூப்பிட்டால்கூட நான் அவளை அனுப்பப் போவதில்லை" என்றார் என் கணவர்.

"குழந்தைமாதிரி பேசுகிறீர்களே! சீதா என்ன குழந்தையா, அவளுக்கு வயதாக வில்லையா, யார் கழுத்திலேயாவது கட்டி வைத்தால்தானே அப்பா வுக்கு நிம்மதி!" என்றேன் நான்.

"அப்படி என்ன அவளுக்கு வயதாகி விட்டது! அதற்குள் என்ன கல்யாணத்திற்கு அவசரம்!"

"நீங்கள் ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து வைத்துக் கொண்டிருந்தீர்களானால் இப்படிப் பேச மாட்டீர்கள்" என்றேன். பிறகு அதைத் தொடர்ந்து, "அவர் கையோ ஓய்ந்து விட்டது. வருகிற பிள்ளை ஐயாயிரத்தைக் கொண்டுவா, பத்தாயிரத்தைக் கொண்டுவா என்று சொன்னால் அப்பாவால் எப்படிக் கொடுக்க முடியும்! எங்களுக்குச் செய்த அளவுக்குச் செய்ய இப்பொழுது அப்பாவுக்குச் சக்தி இல்லையே! அதனால்தான் அப்பா அவசரப்படுகிறார். அவளுக்குக் கல்யாணம் ஆனால்தான் அவருக்கு நிம்மதி ஏற்படும்."

"அது சரி! அவர் பாட்டுக்குப் பிள்ளையை நிச்சயம் செய்யட்டும். அதுவரை சீதா இங்கு இருந்தால் என்னவாம்!" என்றார்.

"நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்வது! வருகிறவனைப் பெண் பார்க்க இங்கேயா வரச் சொல்வது! அவன்தான் என்ன நினைத்துக் கொள்வான்!"

"என்ன நினைத்துக் கொள்வான்! இங்கேயே இருந்து கொண்டு ஒருவன் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறானே, அவன் என்ன நினைத்துக் கொள்வான் என்பதை நீ யோசித்தாயா!" என்றார் அவர் குறும்புச் சிரிப்புடன்.

"என்ன சொல்லுகிறீர்கள்! எனக்குப் புரிய வில்லையே!" என்றேன் நான். ஆனால் எல்லாம் எனக்குப் புரிந்தது!

"எல்லாம் புரியும். சீதா எப்பொழுதும் நம்மிடம் இருக்க வேண்டும். அல்லது ரகு சட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யும் வரையிலாவது நம்மிடம் இருக்க வேண்டுமென்றுதான் நான் திட்டம் போட்டிருக்கிறேன்" என்றார்.

என் மனம் நன்றியால் நிறைந்தது.

"ஆனால் சீதாவுக்கு இதில் இஷ்டமா என்று தெரிந்து கொள்ள வேண்டுமே!" என்றார் என் கணவர். அந்தச் சமயம் பார்த்துச் சீதா கூடத்திற்குள் நுழைந்தாள். நான் அவள் பக்கம் திரும்பி னேன். "ரகு எங்கேயடி இருக்கிறான்!"

"கொட்டிலில் இருக்கிறார்; கரியையும் வெடி உப்பையும் பொடி பண்ணிக் கொண்டிருக்கிறார்."

"எதற்கு!" என்று கேட்டார் என் கணவர்.

"தெரியாதா, உங்களுக்குச் சமாசாரம்! ரகு தினம் வாணம் கட்டுகிறான்."

"இவ்வளவு வயதாகியும் விளையாட்டுப் போக வில்லை, பார்!" என்று சிரித்தார் அவர்.

"இல்லை, அவன் விளையாடவில்லை. நம் வீட்டுக் குழந்தைக்கு அல்லவா கட்டித் தருகிறான்!"

"எந்தக் குழந்தைக்குக் கட்டித் தருகிறான்!"

"என்ன, ஒன்றும் தெரியாது மாதிரி பேசு கிறீர்களே! நம் வீட்டில் வேறு குழந்தை யார்! சீதாதான். அவள்தானே எல்லோரையும் விடச் சின்னவள்!"

"ஓகோ, அப்படியா! இப்பொழுதே பெண் டாட்டியோடு வாணம் கட்டி விளையாட ஆரம் பித்து விட்டானா!"



கடைக்காரர்:—தம்பி, இன்றைக்குப் பக்கத்துக் கடையிலிருந்து சாமான் ஒன்றும் வாங்கி விடாதே!

பையன்:—ஏன்?

கடைக்காரர்:—பக்கத்துக் கடைக்காரருக்கு நம்முடைய படி, தராசு, இவைகளை யெல்லாம் இரவல் கொடுத்திருக்கிறேன்! அதனால்தான்!

---

"போங்கோ, அத்திம்பேரே!" என்று சொல்லிக் கொண்டு சீதா உள்ளே ஓடினாள்.

"நான் போய் விடுகிறேன், அம்மா. ஆனால் ரகுவை அவள் இஷ்ட தேவதையிடம் சேர்த்து விட்டுப் போய் விடுகிறேன்; சம்மதந்தானே!"

'இல்லை' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் சீதா!

"என்ன, இஷ்டமில்லையா! பிடிக்காத தயிரைச் சலிப்போடு சாப்பிடுவாய் போலிருக்கிறதே!"

"இஷ்டம் என்று அவள் சொல்லுவாளா! சொன்னால் இன்று முழுவதும் நீங்கள் அவளைக் கேலி பண்ணித் தள்ளிவிட மாட்டீர்களா!" என்றேன் நான் நடுவில்.

சீதா என் பக்கம் திரும்பினாள். அவளுக்கு உதவிக்கு வந்ததற்கு அவள் பார்வையில் நன்றி நிறைந்திருந்தது. நிழல் தட்டுப்படவே என் கணவர் வாசல் பக்கம் திரும்பினார். "ரகு, உன் இஷ்ட தேவதையின் இஷ்டத்தைக் கேட்டாகி விட்டது. நீ என்ன சொல்லுகிறாய்!" என்றார் உள்ளே வந்த ரகுவைப் பார்த்து.

"அவன் என்ன சொலக் கிடக்கிறது! பிடிக்காத தயிரைச் சலிப்போடு சாப்பிடப் போகிறானே!" என்று நான் வட்டி சேர்த்து என் கணவருக்குக் கொடுத்தேன்.

அன்று முதல் எல்லோருமே சீதாவை 'இஷ்ட தேவதை' என்று அழைக்கத் தலைப்பட்டோம். ஆனால் ரகுவுக்குத்தான் பிரதான இஷ்ட தேவதையாக அவள் விளங்குகிறாள். இல்லாவிட்டால் கல்யாணமாகி இவ்வளவு நாட்களான பிறகும் அவளுக்குக் கார்த்திகை வாணம் கட்டிக் கொடுத்துக் கூத்தடிக்கிறானே! அவளை என்ன சொல்வது! என்ன இருந்தாலும் அவளை அப்படி அசடாக ஆக்கியவள் என் அருமைத் தங்கை சீதாதானே!


டாக்டர் உள்ளே ஆராய்ந்து பார்க்கிறார்
. . . துன்பப்படுத்தும்
வீச்சுள்ள இருமலுக்கு க்ளேகோடின்
—டெர்ப்—வசாகாவையே குறித்துக் கொடுக்கிறார். அது
ஓர் அலெம்பிக் சரக்கு.
க்ளேகோடின்-
டெர்ப்-வசாகா
Alembic
அலெம்பிக்கின் நம்பிக்கைவாய்ந்த இருமல் நிவாரணி
GTV. 2 T 52




## 7. கவி மண்டபம் ஒன்று

செங்கல்லும் சுண்ணாம்புமாய்க் கிடந்தால் அவைகளைக் கவனிப்பார் இல்லை.

அந்தச் செங்கல்லையும் சுண்ணாம்பையும் சேர்த்துக் கட்டி விட்டால் 'அடடா கோபுரம் அல்லவா!' என்று பார்த்து வியந்து நிற்கிறோம். அதாவது உருவமான பிறகு நம்முடைய உள்ளத்துக்கு உவந்த பொருளாக ஆகும்.

கோபுரத்துக்கு லக்ஷக் கணக்கான செங்கல் வேண்டும்.

ஆனால் ஏதோ நாலைந்து கருங் கல்லை வைத்து ஒரு அழகான விமானத்தைக் கட்டி முடித்து விடுகிறார்கள். (விமானம்: ஆர்ச்) நட்டுக் கற்களையும் கோப்புக் கற்களையும் பார்த்து ரொம்ப ரொம்ப அனுபவிக்கிறோம். நாலு கல்லை வைத்து உருவம் உண்டாய் விடுகிறது. உருவமே சிற்பியின் லக்ஷ்யம். நம்முடைய உள்ளத்துக்கும் லக்ஷ்யம் உருவம்தான்.



*
* *

கவி உருவம் என்றால் என்ன என்பதைப் பார்க்கலாம். இனி:

பண்டைக் காலத்துக் கவிஞர் ஒருவர் நாலு உண்மைகளைச் சேர்த்து வைத்துக் கவியை உண்டாக்கி விட்டார். அவருடைய மனசுக்கு அது உவந்த சிற்ப வேலையாய் இருந்தது. நாமும் அதை எவ்வளவோ அனுபவிக்கிறோம்.

நான்மணிக்கடிகை என்பதாக ஒரு பழைய நூல். பழைய நூல் என்பது செய்யுள்களின் அமைப்பில் இருந்து தெரிய வருவது தான். மற்றப்படி காலத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. பாடியவர் விளம்பி நாகனார் என்பது ஏட்டில் இருந்து தெரிய வருகிறது. ஆசிரியரைப் பற்றி வேறு விஷயம் நமக்கு ஒன்றும் தெரியாது. மொத்தம் நூறு வெண்பாக்கள் இருக்கின்றன நூலில். சில பாடல்கள் வெகு வாய்ப்பாய் ரஸமாய் இருக்கின்றன. கவி உருவம் பெற்றவைகளாகவே இருக்கின்றன.

### 2

உலகத்தில் எத்தனையோ தத்துவங்களைப் பார்க்கத்தான் செய்கிறோம். அன்பு என்பது எத்தனையோ விதத்தில் பிரம்ம சிருஷ்டியில் வெளிப்படத்தான் செய்கிறது. ஆனாலும் தாயன்பு மாதிரி வேறு ஒன்றும் இல்லை. தாயன்புக்கு குஞ்சோ குட்டியோ பிள்ளையோ இவைகள் தான் லக்ஷ்யம். அழகு அழகின்மை, நல்லது தீயது, இன்பம் கொடுப்பது துன்பம் கொடுப்பது என்ற வேறுபாடு எல்லாம் தாயின் முன் நிற்பதில்லை. அது காரணமாகவே தாயின் உள்ளத்தையும் சபலத்தையும் காரணமில்லாமல் பிறர் மேல் ஏற்படுகிற கோப தாப குணங்களையும் அறிய முடிவதில்லை. இவைகளை எடுத்துச் சொன்னாலும் தாய்க்கு விளங்காது. காரண காரிய தத்துவமெல்லாம் தாயிடம் செல்லாது. இது ஒரு உண்மை. இனி: நமக்கு ஐந்து இந்திரியங்கள் இருக்கின்றன. கை எட்



டக் கூடிய உலகம் இரண்டு முழந்தான். காது எட்டக் கூடிய உலகம் ஏதோ ஒரு காதம் என்று வைத்துக் கொள்ளுவோம். ஒரு காத தூரத்திலுள்ள இடிச் சத்தம் கேட்கத்தானே செய்கிறது. நாவுக்கும் நாசிக்கும் தூரமே கிடையாது. வஸ்து தன்னோடு ஒட்டினால்தான் ருசி ஏற்படும், வாசனை ஏற்படும்.

ஆனால் கண்ணுக்கு எட்டாத தூரமே இல்லை. கோடிக் கணக்கான மைலுக்கு அப்பாலுள்ள நட்சத்திர உலகத்தைப் பார்த்து விடுகிறோம். தூர திருஷ்டியை (டெலஸ்கோப்) உபயோகப் படுத்தினால் ஆயிரம்கோடி மைலுக்கும் எட்டிவிடுகிறது நமது கண்.

***"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை."***

## 3

ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்குத் தாய் தந்தையர், அண்ணன் தம்பி, அக்காள் தங்கை எல்லாரும் உண்டுதான்.

ஆனாலும் கலியாணம் ஆன உடன் புருஷன் தொலை தூரத்துக்குப் போக வேண்டி வரும். போர்னியோவுக்குப் போக வேண்டி வரும். பெண்ணானவள் புருஷனோடு போர்னியோவுக்கே போய் விடுகிறாள். மற்ற உறவினரை உறவினர் என்றே எண்ண முடியாது. இந்த ஆயுளில் திரும்பிப் பார்க்க முடியாது. புருஷனைப் போல நெருங்கிய உறவு கிடையாதுதான் பெண்ணுக்கு.

***"கொண்டானிற்***
***துன்னிய கேளிர் பிறரில்லை."***

## 4

செல்வவானாக இருக்கலாம் ஒருவன். அவனுக்கு நாலு பிள்ளைகள். வாழ்க்கைக்கு லக்ஷ்யம் தனக்குப் பிறகு அந்த நாலு பிள்ளைகளும் சௌகரியமாக வாழ வேண்டும் என்பதுதான். ஆனால் அந்த நாலு பிள்ளைகளும் தாறுமாறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். தனக்குப் பிறகு அவர்கள் ஆண்டியாய்ப் போய்விடுவார்கள் என்பது மனசுக்குப் படுகிறது. தந்தையின் மனசில் அமைதி உண்டா? செல்வவந்தனாய் இருந்து பிரயோசனம் என்ன?

வேறொரு சாமானிய மனுஷன். அவனுக்கும் நாலு பிள்ளைகள். அந்த நாலு பிள்ளைகளும் பொறுப்புணர்ச்சியோடு ஏதோ தொழில் செய்து சௌகரியமாகக் காலம் தள்ளி வருகிறார்கள். தந்தைக்கு வாழ்க்கையில் நிம்மதிதான். மனத்திலும் அமைதி இருக்கிறது. நாலு பிள்ளைகளும் செல்வத்தில் செல்வமாய் இருக்கிறார்களே.

***"மைந்தரில்***
***ஒண்மையவாச் சான்ற***
***பொருள் இல்லை"***

பலரும் பாராட்டக் கூடிய நிலையான செல்வம் வேறில்லை.

இனிப் பாடலுக்கு வரலாம்,

***கண்ணிற் சிறந்த***
***உறுப்பில்லை ; கொண்டானிற்***
***துன்னிய கேளிர்***
***பிறரில்லை ; மைந்தரில்***
***ஒண்மையவாய்ச் சான்ற***
***பொருளில்லை ; ஈன்றாளோ (டு)***
***எண்ணக் கடவுளும்***
***இல்.***

**பாவ புண்ணியங்களைக் கவனிக்கிறவர்தானே கடவுள். தாயின் அன்போ கவனிப்பதில்லை. என்ன : உவமித்துச் சொல்ல.**

நாலு உண்மைகளைக் கொண்டு ஒரு கவி மண்டபம் அமைத்திருக்கிறது. பார்க்கப் பார்க்க அழகாய் இருக்கிறது.



**"காலில் கத்தியால் அடித்துக் கொண்டு விட்டேன். என்ன பண்ணுவது என்று தெரியவில்லையடா!"**
**"'ஓ' வென்று நன்றாக அழு. எல்லாம் சரியாகப் போய் விடும்!"**




ACI N.T.N-47

# இருமல், உபாதையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி இவை மூன்றே நிமிஷங்களில் அகற்றப் படுகின்றன.

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா ! அதிகமாக இருமுவதால் பிராணாவஸ்தையாக இருக்கிறதா ! பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் சிற்சில உணவுகளையும் உட்கொள்ள முடியவில்லையா !

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கையை அளிக்கும். மயக்க மருந்து, புகை பிடித்தல், இஞ்சக்ஷன், ஆட்டோமைஸர் இவை தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின்போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக அகன்றுவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி கபத்தைக் கரைத்து சிரமம் இன்றி ஸ்வாஸத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவிலேயே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

## 2 ஆண்டுகளாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து சுவாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக மிஸ்டர் ஜே. ஆர். இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப் பட்டது. மெண்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. 2 வருஷங்களில் அத்தொந்தரவே அவருக்கு மீண்டும் ஏற்பட்டதில்லை.

## பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ (Mendaco) முதல் வேளை சாப்பிட்டதும் இரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ (Mendaco) விரைவில் பல வருஷ யௌவன உணர்ச்சியும் பலமும் அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தில் மெண்டாகோ (Mendaco) உபயோகித்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டு பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மெண்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறு நாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கிறது.

**Mendaco**
**மெண்டாகோ**

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது

# தாய்ப்பால் மறக்கும் சமயம் மிகுந்த கவனிப்பு அவசியம்




உங்கள் குழந்தையின் ஜீவியகால ஆரோக்யம் அது தன் சிறுவயதில் அடையும் பராமரிப்பை பொறுத்துள்ளது. அவ்வயதிலேயே கொடுமையான ஈரல், குலைநோய் ஆரம்பிக்கலாம். உடனே கவனித்து தக்க சிகிச்சை செய்தால் யாதொரு தீங்கும் கேடாது. கவனிக்காவிடில் குழந்தை நீண்டகால அவஸ்தைக்கு ஆளாகிவிடலாம்.

ஜம்மியின் "லிவர்க்யூர்" குழந்தைகளின் ஈரல் குலைநோய்களுக்கு தகுந்த பாதுகாப்பு. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான குழந்தைகளை இவ் வியாதியினின்று மீட்டு ஆரோக்கியத்தை அளித்து வருகின்றது.

ஜம்மி வெங்கட்டரமணய்யா அண்ட் ஸன்ஸ்
மைலாப்பூர் — மதராஸ்.

பிராஞ்சுகள் :
பெரியகடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி; பெரிய தெரு, கும்பகோணம்; ஆசாரி ஸ்ரீனிவாஸாசாரி தெரு, பெங்களூர் ஸிடி.

SISTA'S—J—276 A—TAM.



# Zam-Buk தசை நோவுகள்



## வலிகள், சுளுக்குகள் ஆகியவற்றை

## ஜாம்பக் எவ்வளவு விரைவாகக் குணப்படுத்துகிறது பாருங்கள்!



ஜாம்-பக் வலிகளை மாய மாய் மறையச் செய்கிறது.

ஜாம்-பக் மூலிகை ஆயின்ட்மென்டை உங்கள் தசைக்குள் நன்றாகத் தேய்த்து விடுங்கள். அங்கே உள்ள நோவு,வலி, பிடிப்பு இவை களை ஜாம்-பக்கிலுள்ள சிறந்த ஔஷதத் தைலங்கள் வெளியேற்றி விடுகின்றன. ...களுக்கிலிருந்து ஜாம்-பக் உங்களை விடுவிக்கிறது. ஜாம்-பக் உங்கள் தசைகளைக் கட்டாகவும், வலுவாகவும் இருக்கச் செய்கிறது. கமைச்சல், மற்றும் இதர சரும, மண்டை நோய்கள், மூலம் ஆகியவற்றிற்கு ஜாம்-பக் அதி அற்புதமான நிவாரணியாகும். வெட்டுக் காயங்கள், நெருப்புக் காயங்கள், சேற்றுப் புண், ரணங்கள், மண் டைச் சொறி, ஆறாத ரணங்கள், பூச்சிக்கடி முதலிய வற்றை ஜாம்-பக் விரைவாகக் குணப்படுத்துகிறது.




ஜாம்-பக் உலகத்தின் சிறந்த சரும ஆயின்ட்மென்ட் மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பது உத்தரவாதம்

FEY 2 மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தத்தா & கம்பெனி, பார்க் டவுன்



# இரகசியமும் லெட்டியும்

பரிசுக் கதை

ஆசிரியை: ஒரா வீல் (தென்னாப்பிரிக்கா) மொழிபெயர்ப்பு: வாஞ்சி

ரயில் வண்டி ஒரு சிறிய ஸ்டேஷனில் வந்து நின்றது. லெட்டி விழித்து உட்கார்ந்தாள். அவளுக்கு இருபது அல்லது இருபத்தொன்று வயது இருக்கலாம். அவள் இருந்த வண்டிக்குள் அவளைத் தவிர வேறு யாருமே இல்லை.

பிளாட்பாரத்தில் ஜனங்கள் வெகு வேகமாய்ப் போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

"கடவுளே! இந்த வண்டியில் யாரும் ஏறாமல் இருக்க வேண்டும். அப்படியே ஏறினாலும் என் கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது; எனக்குத் தெரிந்தவர்களாக இருக்கக் கூடாது. கடவுளே! கடவுளே!"

இவ்வாறு லெட்டி வண்டி நிற்கும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கடவுளை வேண்டிக் கொண்டாள்.

'வெள்ளையர் மாத்திரம்' என்று எழுதப்பட்டுள்ள வண்டியில் அவள் ஏறியிருப்பதை யாராவது கண்டு பிடித்துவிட்டால் என்ன செய்வது! இந்தப் பீதி அவளை மிகவும் வாட்டியது.

கேப்டவுனில் அவள் வண்டியில் ஏறியதிலிருந்து அதில் யாரும் இல்லை. அவளது சிந்தனைகளும் அவள் மனத்தில் ஏற்பட்ட பீதியுமே அவளுக்குத் துணையாக இருந்து வந்தன.

திடீரென்று அவள் உட்கார்ந்திருந்த வண்டியின் கதவை யாரோ திறக்கும் சப்தம் கேட்டது. அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"உங்களுக்கு ஏதாவது ஆகாரம் எடுத்துக் கொண்டு வரட்டுமா!" என்றான் ரயில் வண்டி ஹோட்டலைச் சேர்ந்த வெள்ளைச் சிப்பந்தி.

அவளுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே அவளுக்குத் தெரியவில்லை. அவன் லெட்டியின் முகத்தைப் பார்த்தான்.

"உங்களுக்கு என்ன உடம்பு! கேப் டவுனிலிருந்து புறப்பட்டது முதல் நீங்கள் ஒன்றுமே சாப்பிடவில்லையே! இப்போது ஏதாவது சாப்பிடுகிறீர்களா!" என்றான் அவன்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம். வந்தனம். என் உடம்புக்கு ஒன்றும் இல்லை. ஆனால், நான்... நான்......" என்று இழுத்தாள் லெட்டி.

அதற்குமேல் அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை. அவளது கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகத் தொடங்கியது.

இதைப் பார்த்த ஹோட்டல் சிப்பந்தி, "தங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டதற்காக வருத்துகிறேன். என்னை மன்னியுங்கள்" என்று கூறிக் கதவை மெதுவாகச் சாத்திக் கொண்டு வந்த வழியே சென்று விட்டான்.

அவன் கதவை மூடியதுதான் தாமதம், லெட்டி சட்டென்று எழுந்தாள். கண்ணாடிக்கு எதிரில் போய் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

தனக்கு ஒரு வெள்ளையர் ஆகாரம் கொண்டு வருவதை யாராவது பார்த்து விட்டால்......நிறத் தடைச் சட்டத்தின் கொடுமையைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள் அல்லவா! இருந்தாலும் அவளை யாரும் ஆங்கிலப் பெண் என்றுதான் சொல்லுவார்கள். அவளது குடும்பத்தை நன்கு அறிந்தவர்களுக்குத்தான் லெட்டியின் தாயாரும் தந்தையும் ஆப்பிரிக்கச் சுதேசிகள் என்பது தெரியும். ஆனால் லெட்டியின் முகம் நிறம், கூந்தல் எல்லாம் அவள் ஒரு சுத்த வெள்ளைப் பெண் என்று பறை சாற்றுவதாக இருந்தன. 'நான் ஆப்பிரிக்கச் சுதேசிகளின் பெண்' என்று அவள் கூறினால் கூட யாரும் நம்ப மாட்டார்கள்!

கேப்டவுனிலிருந்து புறப்பட்டது முதல் லெட்டி எத்தனை தடவை கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள், தெரியுமா!

சுத்த வெள்ளையர்களிடையில் கூட சூரிய வெப்பத்தினால் தோல் சிறிது கறுத்த எத்தனையோ ஆடவர்களும் பெண்களும் இருக்கிறார்கள். லெட்டியும் அதை அறிந்துதான் இருந்தாள்.

அவளுக்குத் திடீரென்று தன் கழுத்து முகத்தைப் போல் அவ்வளவு சுத்த வெள்ளையாக இல்லையோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவள் முகப் பவுடரில் கொஞ்சம் எடுத்துக் கழுத்தில் தடவிக் கொண்டாள்.

மறுபடியும் அவளை அறியாமல் கண்ணீர் பீறிட்டுக் கொண்டு வந்தது.

"நான் இப்படி அழக் கூடாது. கண்ணீரைக் கண்டாலே மெல்ரோஸுக்குப் பிடிக்காது" என்று அவள் வாய் முணு முணுத்தது.

அவளுக்கு அடிக்கடி அழுகை வந்து கொண்டிருந்தது. அத்துடன் அவள் இரவு முழுவதும் தூங்கவில்லை. எனவே அவளது கண்கள் சிவந்து முகம் வேறு பட்டிருந்தது.

• • •

லெட்டியின் வாழ்க்கை அமைதியாகத்தான் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அவளது வாழ்க்கையில் பியட் வந்து குறுக்கிட்டதிலிருந்து அவள் மன அமைதியை இழந்தாள். அதிலிருந்துதான் அவள் மனம் மாறி மாறி இன்பம் துன்பம் இரண்டுக்கும் இலக்காக நேர்ந்தது.

அதற்காக அவள் பியட்மீது சிறிதும் குறை கூற விரும்பவில்லை. பியட் அவளை மனப்பூர்வ

மாகக் காதலித்தான். அவளும் பியட்டினிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள்.

பியட் கேப்டவுனில் உள்ள ஒரு பண்ணையில் வேலை செய்து வந்தான். அவன் தன் கிராமத்திலிருந்து தினந்தோறும் ரயிலில் கேப்டவுனுக்கு வந்து போவான். அவன், லெட்டி வேலை பார்க்கும் ஹோட்டலுக்குக் குறித்த நேரத்தில் வர ஒரு நாள் கூடத் தவறுவதில்லை.

பியட் வந்ததும் இங்கிதம் தெரிந்த மற்றப் பெண்கள் அப்பால் சென்று விடுவார்கள். பியட்டுக்கு லெட்டி முதல் தரமான ரொட்டி, பழம், காப்பி எல்லாம் கொடுப்பாள். ஹோட்டல் எஜமானி இதைப் பார்த்தும் பாராததுபோல் இருந்து விடுவாள். ஏனெனில் லெட்டி தன் காதலனான பியட்டைத் தவிர வேறு யாருக்கும் முதல்தரமான பண்டங்களைக் கொடுக்கப் போவதில்லை அல்லவா! தவிர லெட்டியிடம் மாத்திரம் அவளுக்கு உள்ளூற அன்பு உண்டு.

ஒரு நாள் லெட்டியின் தோழியான அலீஸ் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"லெட்டி! நீ பியட்டைக் காதலிக்கிறாய் அல்லவா! ஆனால் அவன் சுதேசியைப் போல் அல்லவா இருக்கிறான்! கறுப்பு நிறம் உள்ளவர்கள் வெள்ளையர்களை இனிமேல் மணம் செய்து கொள்ளக் கூடாது என்று கண்டிப்பான சட்டம் ஏற்பட்டிருப்பது உனக்குத் தெரியாதா! நம் சமூகம் கலப்பின்றிச் சுத்தமாக இருப்பதற்காகவே அத்தகைய சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி வைத்தாள் அலீஸ்.

இதைக் கேட்டதும் லெட்டியின் முகத்தில் தோன்றிய பீதி அலீஸை ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

"லெட்டி! இப்படி ஏன் மனத்தைக் கஷ்டப்படுத்திக் கொள்கிறாய்! நான் விளையாட்டாக அவ்விதம் சொன்னேன். பியட் சுதேசி அல்ல, சுத்த வெள்ளையர் குடும்பத்தைச் சேர்ந்தவன் தான்" என்று சமாதானம் செய்தாள் அலீஸ்.

எனினும் மேற்படி விவரங்களைக் கேட்டதிலிருந்து லெட்டியின் மனம் அமைதியை இழந்து தவித்தது. பிறகு அவள் விசாரித்த போது புதிய சட்டத்தின்படி ஒவ்வொருவரும் பதிவுக் கார்டு வைத்துக் கொள்ள வேண்டும்; அதில் பெற்றோர்களின் பெயர்கள், ஊர் முதலிய உண்மையான விவரங்கள் குறிப்பிடப் பட்டிருக்கவேண்டும், என்றெல்லாம் தெரிந்தது.

* * *

லெட்டி ஓனட்க்ரால் என்ற கிராமத்தில் பிறந்தவள். அவளுடைய பெற்றோர்கள் அந்த ஊரில் தான் வசிக்கிறார்கள்.

அவளுக்கு ஏழு அல்லது எட்டு வயது இருக்கும். அவள் அக்காலத்தில் தன் வீட்டு ஆடுகளை ஊருக்கு அப்பால் ஓட்டிக்கொண்டு போய் மேய்த்துக் கொண்டு திரும்பி வருவது வழக்கம்.

அவ்வாறு ஒரு நாள் அவள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில், அவ்வழியாக அந்த ஊர்த் தலைமை அதிகாரியின் மனைவி சென்று கொண்டிருந்தாள். அவள் லெட்டியை உற்று உற்றுப் பார்த்தாள். அவள் தன்னை ஏன் அவ்விதம் கவனித்துப் பார்க்கிறாள் என்பது சிறுமியாக இருந்த லெட்டிக்குத் தெரியவில்லை.





சில நாட்கள் சென்றபின் மேற்படி ஊர்த் தலைமை அதிகாரியின் மனைவி மெல்ரோ லெட்டியின் வீட்டுக்கு வந்தாள். லெட்டியின் தாயார் அந்திரியுடன் இரகசியமாக வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

"வீணாகப் பொய் சொல்லாதே. லெட்டி உன் குழந்தை அல்ல. சுதேசியான உன் கணவன் ஹென்றிக்கிற்கு இந்தக் குழந்தை பிறந்தது என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். இவள் சுத்த வெள்ளையர்களின் குழந்தையாகத் தான் இருக்க வேண்டும். அவளுடைய முகத்தைப் பார், நிறத்தைப் பார், அழகைப் பார், கூந்தலைப் பார்!" என்றெல்லாம் சரமாரியாகப் பொழிந்தாள் மெல்ரோ.

மெல்ரோவின் கூற்றைக் கேட்ட அந்திரிக்கு ஆத்திரம் பொங்கியது. தலைமை அதிகாரியின் மனைவி அல்லாமல் வேறு யாராவது அவ்விதம் கேட்டிருந்தால், அவளை அந்திரி அடித்துக்கூட விரட்டி யிருப்பாள்.

எனினும், லெட்டி தன் குழந்தைதான் என்று அந்திரி கூறியதை மெல்ரோ நம்பவில்லை.

"இந்தக் குழந்தையை என்னுடன் அனுப்பிவிடு. கறுப்பு நிறம் உள்ள உன் குழந்தைகளுடன் இவள் வளருவது சரியல்ல. இதனால் பிறகு பல சிக்கல்கள் ஏற்படும். நான் லெட்டியை என் குழந்தையைப் போல் நடத்துகிறேன். நீ கவலைப்பட வேண்டாம்" என்று வற்புறுத்தினாள் மெல்ரோ.

அந்திரியின் மனம் மாறத் தொடங்கியது.

"இன்றிரவு ஹென்றிக்கையும் கலந்து யோசித்து உன் முடிவைச் சொல்லு. நான் நாளைக்கு வருகிறேன்" என்று சொல்லி விட்டு மெல்ரோ சில பர்லாங் தூரத்தில் உள்ள தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டாள்.

மேற்படி சம்பாஷணை முழுவதையும் லெட்டியும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். தன் தாயாரும் மெல்ரோவும் தன்னைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பது மாத்திரம்தான் அவளுக்குத் தெரிந்ததே ஒழிய, மற்ற விவரங்கள் அவள் அறிவுக்கு எட்டவில்லை.

அந்திரியும் ஹென்றிக்கும் அன்றிரவு வெகு நேரம் வரையில் அந்த விஷயத்தைப் பற்றி ஆலோசித்தார்கள். லெட்டி தங்களுடைய குழந்தைதான் என்றாலும், அவளை வீட்டில் வைத்துக் கொண்டால் தங்களுக்கு ஏதாவது விபரீதம் ஏற்படுமோ என்ற பயம் அவர்களுக்கு உண்டாயிற்று. நிறத் தடைச் சட்டத்தினால் பல சுதேசிக் குடும்பங்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டது அவர்கள் அறியாததல்ல. லெட்டியைக் காரணமாக வைத்துக் கொண்டு சுத்த வெள்ளையரான ஊர்த் தலைமை அதிகாரி ஏதாவது விஷமம் செய்யக் கூடும் அல்லவா!

தவிர ஹென்றிக் ஓர் ஏழை. அவனும் அவனது மனைவி அந்திரியும் ஏதாவது வேலை செய்தே ஜீவனம் செய்தனர். அந்திரி பணக்காரர்களின் உடைகளை எடுத்து வந்து சலவை செய்து திருப்பிக் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கமாக இருந்தது.

எனவே மெல்ரோவின் யோசனைக்கு இணங்க லெட்டியை அவளிடம் ஒப்புவித்து விடுவது என்று நிர்மானித்தனர். எப்படியாவது, எங்கேயாவது தங்கள் பெண் சௌக்கியமாக இருந்தால் போதும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம்.



கணவன் (காப்பியைக் கையில் வைத்துக் கொண்டு) :—இந்த மாதிரி இவ்வளவு ஸ்ட்ராங் 'காப்பியாகப் போட்டால் நமக்குக் குடித்தனம் கட்டி வராது' என்று எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறேன் உனக்கு?

மனைவி :—அடாடா! எனக்கு வைத்திருந்த காப்பியை உங்களுக்குக் கொடுத்து விட்டேன் போலிருக்கிறது. அதை இப்படிக் கொடுங்கள். உங்களுக்கு வேறே காப்பி 'டிகாக்‌ஷன்'க் கலந்து தருகிறேன்!

---

ஆகையால், அந்திஜி மறுநாள் காலையில் லெட்டிக்கு நல்ல உடை உடுத்தி அவளைத் தானே அழைத்துச் சென்று மெல்ரோவின் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டாள்.

மெல்ரோ லெட்டியை மிகவும் அன்புடன் பராமரித்து வந்ததால் அவளுக்கு நாளடைவில் மெல்ரோமீது ஒருவிதமான பாசமும் ஏற்பட்டது.

லெட்டி வீட்டுக்கு வந்ததும் மெல்ரோவின் கணவன் மெவீர் அவளுக்கு விலையுயர்ந்த ஓர் அருமையான பொம்மை வாங்கிக் கொடுத்தான். மெவீர் லெட்டியுடன் அதிகமாகப் பேசுவதில்லை என்பது உண்மையே. எனினும் அவன் லெட்டியை ஒரு வார்த்தை கூடக் கடிந்து கூறியதில்லை.

மெல்ரோ, தன் வீட்டுக்கு வந்தவர்களிடம் லெட்டியின் பெற்றோர்கள் சுத்த வெள்ளையர்கள் என்பது தனக்குத் தெரியும் என்று கூறிவந்தாள். இந்தக் கூற்றை லெட்டியே பல தடவைகள் தன் காதுகளால் கேட்டது உண்டு.

அவர்கள் லெட்டியைப் படிக்க வைத்தனர். லெட்டிக்கு வயது வந்ததும், அவள் தான் ஏதாவது ஒரு வேலையில் அமர்ந்து தன் ஜீவனத்தை நடத்த விரும்புவதாய்க் கூறினாள்.

இதை மெல்ரோ விரும்பவில்லை. எனினும், லெட்டியின் விருப்பப்படி விட்டு விடுவதே நல்லது என்று மெவீர் கூறிவிட்டான்.

அதன் பின்தான் லெட்டி கேப்டவுனில் உள்ள மேற்படி ஹோட்டலில் வேலைக்கு அமர்ந்தாள். அப்போதுதான் அவளுக்கும் பியட்டுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

தன் தந்தை ஒரு சுத்த வெள்ளையர் என்பதை நிரூபித்தாலன்றி, லெட்டி தன் காதலனான பியட்டை மணம் செய்துகொள்ள முடியாது. ஆனால் அவளுடைய பெற்றோர்களோ கறுப்பர்கள். லெட்டியின் பெற்றோர்கள் சுத்த வெள்ளையர்கள் என்று மெல்ரோ அடிக்கடி கூறியது உண்மைதான். இருந்தாலும் அதை நிரூபிப்பது எப்படி!

இதை நினைத்தபோது அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

லெட்டியின் பரிதாப நிலையை அறிந்துகொண்ட ஹோட்டல் எஜமானி ஒருநாள் இரவு அவளைத் தன் அறைக்குக் கூப்பிட்டாள். அவளிடம் லெட்டி தன் வரலாற்றைச் சிறிதும் மறைக்காமல் கூறவே, எஜமானிக்கு அவள் மீதிருந்த அபிமானம் பன்மடங்கு அதிகமாயிற்று.

"லெட்டி, வீணாக மனத்தைக் கஷ்டப்படுத்திக் கொள்ளாதே. உன் பெற்றோர்கள் யார் என்பது மெல்ரோவுக்குத் தெரியலாம் என்று தோன்றுகிறது. ஆகையால் அவளையே கேட்டுத் தெரிந்து கொண்டு வந்து விடு" என்று ஹோட்டல் எஜமானி யோசனை கூறினாள்.

அவளது யோசனைக்கு இணங்கவே லெட்டி ஊருக்குப் புறப்பட்டாள். தன் பெற்றோர்கள் யார் என்பது கூடத் தெரியாத துர்ப்பாக்கிய நிலைமையை நினைத்தே லெட்டி ரயில் பிரயாணத்தின்போது அடிக்கடி அழுது கொண்டிருந்தாள்.

* * *

மெல்ரோ, லெட்டிக்கு எவ்வித உதவியும் செய்வதற்குத் தயாராக இருந்தாள். ஆனால் லெட்டியைக் கண்டதும் மெவீர் திடுக்கிட்டான். அவன் ஏன் அப்படித் திடுக்கிட வேண்டும்! ஒரு வேளை லெட்டி மறுபடியும் தன் வீட்டுக்குத் திரும்பி வந்ததை அவன் விரும்பவில்லை போலும்.

மறுநாளே மெல்ரோ லெட்டியை அழைத்துக் கொண்டு அந்திஜியின் வீட்டுக்குச் சென்றாள். அப்போது அந்திஜி தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

மெல்ரோ ஊர்த்தலைமை அதிகாரியின் மனைவி அல்லவா! அவள் அந்திஜியுடன் மனம் விட்டுப் பேசுவதற்கு எதற்காகப் பயப்பட வேண்டும்!

"அந்திஜி! நீ உண்மையைச் சொல்லவேண்டிய சமயம் வந்திருக்கிறது. லெட்டியின் எதிர்கால வாழ்க்கை உன் பதிலையே பொறுத்திருக்கிறது. நீ அவளை வளர்த்த தாய் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவளுடைய உண்மையான தாயும் தகப்பனும் யார் என்பதைச் சொல்லி விடு" என்றாள் மெல்ரோ.

"அவசியம் சொல்லித்தான் ஆக வேண்டுமோ!" என்று கேட்டாள் அந்திஜி.

அந்திஜியின் முகம் அப்போது பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. இதைக் கவனித்த லெட்டி கலக்கம் அடைந்து மெல்ரோவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நீ சொல்லித்தான் ஆகவேண்டும். லெட்டி, பியட் என்ற வெள்ளை இளைஞனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள். தன் தந்தை வெள்ளையர்தான் என்பதை நிரூபித்தாலன்றி, அவன் அவளை மணப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்காது. லெட்டியின் முகத்தைப் பார். அழுது அழுது அவள் கண்கள் சிவந்து விட்டன. அந்திஜி, அவள் உன் சொந்தக் குழந்தை யில்லாவிட்டாலும் உன் வளர்ப்புக் குழந்தை அல்லவா!

- செடி, கொடி, மரங்கள் வளர்ச்சி பெருமல் நின்ருல் மடிவு காலம்.
- அதேபோல் வியாபாரம் வளர்ச்சி யின்றேல் மடிவுதான்.
- எங்கள் வியாபாரம் வருஷா வருஷம் வளர்ச்சி பெற்றுக்கொண்டே வந்திருக்கிறது.
- நியாயமான வர்த்தக முறை இன்றேல் வளர்ச்சி யிருக்க முடியாது.
- நாங்கள் சொல்வதும் எங்கள் வாடிக்கைக் காரர்கள் நினைப்பதும் சரிதானுவென்று, தங்களுக்கு பட்டு, நூல், கம்பளித் துணிகள் தேவையுள்ள பொழுது எங்களை விசாரியுங்கள்.
- **6, 8, 9 கஜம் உயர்ந்த பங்களூர், பனரீஸ், காஞ்சீவரம், பங்கால்,** பட்டுப் புடவை களுக்கு எங்கள் கடைகள் பெயர் போனவை.
- ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் எங்க ளிடம் கிடைக்கும்.

○●○

*Branch :*
"FANCY HALL"
சைனு பஜார்
**திருச்சிராப்பள்ளி**

**P. R. நாராயணசாமி அய்யர்**
ஜவுளி வியாபாரம்
**பெரிய கடை வீதி,**
**திருச்சிராப்பள்ளி**

Telegrams : "BONTEX"

Telephones : 26. 26-A

எனக்கே அவள்மீது இவ்வளவு பற்றுதலும் பாசமும் இருக்கின்றனவே! உனக்கு எவ்வளவு பாசம் இருக்க வேண்டும்!" என்று மிகவும் கெஞ்சினான் மெல்ரோ.

அவ்வளவுதான்! இதைக் கேட்டதும் அந்திரியின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

"மெல்ரோ! நீ கூறுவது போல் லெட்டி என் வளர்ப்புக் குழந்தை அல்ல, என் சொந்தக் குழந்தைதான். என் வயிற்றில் பிறந்த குழந்தைதான். ஆனால்... ...ஆனால்."



அந்திரி இவ்விதம் சொல்லிக் கொண்டே தன் வீட்டுக்குள் சென்று கீழ்க் கதவு இரண்டையும் படீரென்று சாத்தினாள்.

"இவ்விஷயமாக உண்மையைச் சொன்னால் என்னைக் கொன்று விடுவதாக ஏற்கெனவே உனக்குத் தெரிந்த ஒரு பெரிய மனிதர் பயமுறுத்தியிருக்கிறார்" என்றாள் அந்திரி தொடர்ந்து.

"உன்னை யாரும் கொல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். பயப்படாதே" என்று உறுதி கூறினான் மெல்ரோ.

"உண்மை தெரிந்தால் நீயே என்னைக் கொன்று விடுவாய்!"

இதைக் கேட்டதும் மெல்ரோவுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

"கிழவியான உன்னைக் கொல்லுவதால் எனக்கு என்ன லாபம்! எதுவாயிருந்தாலும் லெட்டியின் எதிர்கால க்ஷேமத்தை உத்தேசித்து நீ உண்மையைக் கூறித்தான் ஆக வேண்டும்" என்று வற்புறுத்தினான் மெல்ரோ.

அதே சமயத்தில் அந்திரியின் முகத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த லெட்டி, "அந்திரிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. நாம் போய் விடுவோம். இங்கு இருந்தால் ஏதாவது விபரீதம் நேரிடும்" என்று சொல்லிக் கொண்டே மெல்ரோவின் கையைத் தன் இரு கைகளாலும் பிடித்து இழுத்தாள்.

"லெட்டி, பயப்படாதே! எனக்குப் பைத்தியம் இல்லை. 'மெல்ரோஸ், நன்றாக ஞாபகப் படுத்திக் கொள். இருபது வருஷங்களுக்கு முன் நீ பல மாதங்கள் வரையில் உன் பிறந்த ஊருக்குப் போயிருந்தாய் அல்லவா! அப்போது நான் இங்கு உன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். இப்போது கிழவியாக இருக்கும் அந்திரி அப்போது யுவதியாக இருந்தாள். கொஞ்சம் அழகாகவும் இருந்தாள். அந்த வெள்ளையனை உன் கணவன்......"

அந்திரி இவ்விதம் சொல்லிய வண்ணம் ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்தாள். படீரென்று மேற் கதவுகள் இரண்டையும் சாத்தி விட்டாள்.

மெல்ரோவுக்குத் தன் ஹிருதயத்தில் ஓர் ஈட்டி பாய்வது போல் இருந்தது.

லெட்டியும் மெல்ரோவும் தள்ளாடிக் கொண்டே வீட்டுக்குத் திரும்பினர்.

# படித்துப் பாருங்கள்!

## பஜகோவிந்தம்

**வெ**யிலில் சிறு வாய்க்காலைத் தாண்டுவதுபோல் முடிவே இல்லாத மாபெரும் பிறவிக் கடலைக் கடந்தவர் ஸ்ரீ சங்கரர். அவர் தம் ஞானக் கண் கொண்டு பார்த்து அறிந்து எழுதி வைத்த நூல்கள் அனந்தம்.

ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் விளங்கக் கூடிய உயர்ந்த தத்துவ நூல்களை மட்டும் ஸ்ரீ சங்கரர் எழுதவில்லை. சாதாரண மக்களுக்கும் விளங்கும்படியான எளிய உபதேசங்களையும் அருளிச் செய்தார். அந்த உபதேசங்கள் அடங்கிய நூல்தான் பஜகோவிந்தம். முப்பத்தொரு ஸ்லோகங்கள் அடங்கிய உருவத்தில் சிறிய இந்தச் சிறு நூல், விஷயத்தில் மிக மிகப் பெரியது.

இந்நூலில் ஸ்ரீ சங்கரர் மனிதன் உயர் வாழ்க்கை நடத்துவதற்குப் பாதை வகுத்துத் தருகிறார். இந்த இணையற்ற ஞான நூலுக்கு, ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் விளக்கம் எழுதியிருப்பது எவ்வளவு பொருத்தமான காரியம் என்று சொல்ல வேண்டியதில்லை. "கல்கி"யில் அவர்கள் தொடர்ச்சியாக பஜகோவிந்த விளக்கம் எழுதி வந்தபோது பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்து மகிழ்ந்தனர்.

"பக்தி மார்க்கம் வேறு, ஞான மார்க்கம் வேறு என்று பக்குவமடையாத சிலர் பேசுவதுண்டு. அதனால் நாம் குழப்பிக் கொண்டு பொருளைத் தவறாக உணரலாகாது. அறிவு நன்றாக முற்றி இதயத்தில் பதிந்தால் அது ஞானமாகும். அந்த ஞானமானது வாழ்க்கையுடன் கலந்து செயலுருவமடைந்தால் அதுவே பக்தியாகும்......" என்று கூறி ராஜாஜி அவர்கள் இந்த நூலை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

இம்மாதிரி இந்நூல் முழுமைக்கும் மூலக்கிரந்தத்தைச் சரியானபடி அறிந்து கொள்ளும் விதத்தில் விளக்கம் எழுதப் பட்டிருக்கிறது. ஸ்ரீ சங்கரரின் வாக்கையே பிரதிபலிக்கும் மாணிக்கவாசகரின் வாக்கு, ஆழ்வார் வாக்கு, வள்ளுவர் வாக்கு இவற்றை மேற்கோள்களாகக் காட்டியிருப்பது மூல நூலுக்குத் தமிழ் மணம் ஊட்டுகிறது.

இந்நூலின் ஆரம்பத்தில், "பஜகோவிந்தம் பாட்டைத் தமிழர்கள் கேட்டிருக்கிறார்கள். புதியதல்ல......முப்பத்தொரு பாடல்களையும் நான் படித்து அறிவும் மகிழ்ச்சியும் அடைந்த போது இதைத் தமிழில் சொல்ல வேண்டும் என்னும் ஆசை மனத்தில் உதித்தது. இதுவும் ஒரு மோகமே என்பதை அறிவேன். ஆயினும் ஆசையைத் தீர்த்துக் கொள்ளுகிறேன்"—என்று ராஜாஜி அவர்கள் கூறுகிறார்கள். இந்நூலைப் படித்ததும் இத்தகைய ஆசை அவர்களுக்கு அடிக்கடி உண்டாக வேண்டும், அதன் மூலம் எல்லோரும் ஆன்ம ஞான அநுபவம் பெற வேண்டும் என்று ஆசைப்படத் தோன்றுகிறது.

பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 17. விலை ரூ. 1—0—0.



# அவளுக்கு தெரியும்

வெகு சூடிகை அவள். மாலை சோர்வுடன் வீடு திரும்பும் கணவனை புது மனிதனாக்கும் மந்திரம் அவளுக்கு தெரியாததா! அவர் சட்டையை கழற்றுவதற்குள் அவள் ஒரு டம்ப்ளர் 'டீ' போட்டுக் கொண்டு வந்து விடுகிறாள்.

'இந்தாருங்கள்! முதலில் 'டீ'யைக் குடியுங்கள். ஆறிவிடப் போகிறது' என்று அன்புடன் அதிகாரமல்லவா செய்கிறாள் அவள்!

அவருக்கு பிடித்தமாக இருக்க 'டீ'யில் இன்ன அளவு சர்க்கரை பால் சேர்க்க வேண்டும், இன்ன சூட்டில் 'டீ' இருக்க வேண்டும் என்பதை அவளைப் போல் ஒவ்வொரு நல்ல மனைவியும் அறிவாள்.

*[ஒரே நொடியில், அதிக சிரமமில்லாது தயாரிக்கக் கூடிய சிக்கனமான பானம் 'டீ' தான் என்பதை சொல்லவும் வேண்டுமா!]*

## மந்திர சக்தியுள்ள
## 'டீ'யைக் குடியுங்கள்.



சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

C.T.B. 67

## நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா ?



மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உங்கள் பற்களை வெண்மையாகவும், ஈறுகளை ஆரோக்கியமாகவும், சுவாசத்தை இனியதாகவும் ஒரே சமயத்தில் விளங்கச் செய்கிறது.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையில் அடங்கியுள்ள பொருள்கள் வாயில் ஊறும் கெட்ட நீர்களையும் புளிப்புச் சத்தையும் கரைத்து பற்கள் பழுதடையாமல் காப்பாற்றி விகாரமான கறைகளையும் அகற்றி விடுகின்றன. இப்பொழுதே ஒரு டியூப் மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை வாங்கி தினமும் இரண்டு தடவை உங்கள் பற்களைச் சுத்தம் செய்து வாருங்கள்.


"பெருமையைப் பெறத் தகுதி வாய்ந்தவர். உண்மையில் நான் பெருமை அடைகிறேன். பல வருஷங்களாக நான் மக்ளீன்ஸ் உபயோகித்து என் பற்கள் அழகாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன."

**இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!**




HTY-3 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரீசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிர்க், வார்டன் ரோட், பம்பாய் 26.




# உழைப்பால் உயர்ந்த ஏழை

'பகீரதன்'

5

கடலின் பட்டுப்போன்ற மார்பகத்தைக் காற்று மெதுவாகத் தட்டிக் கொடுத்தது. காற்று சற்று உஷ்ணமாகவே வீசிக்கொண்டிருந்தது. அந்த உஷ்ணக் காற்றின் ஆலிங்கனத்தில் சொக்கிப் போய்த்தானோ என்னவோ கடல் பெருமூச்செறிந்தது; பொங்கிப் பொங்கி அலை அலையாக வந்து கரையில் மோதிக் குதித்தது. அப்படி மோதும் அலைகள் நாலா பக்கங்களிலும் சிதறி விழுந்தன. சிதறிய அலைகளும் மணலில் கலந்து உருகி மெதுவாக மூச்சுவிட்டு மறைந்தன.

இருள் சூழ்ந்த அந்தக் கடலின் அடிவாரத்தில் ஒரு வெளிச்சம் மினு மினுத்தது. அது வட்ட வடிவமாகச் 'செக்கச் செவேலென்று நெருப்புத் தணல்போல மேலே மேலே வந்து கொண்டிருந்தது. நிலவின் ஒளிபட்டுக் கடல் அலைகள் வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறித்தன. சற்றுத் தூரத்தில் தெரிந்த ஒரு அலை உச்சியில் வேலனின் தலை தெரிந்தது. தலை வழியாகத் தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது. முகத்தில் தைரியம் நிரம்பியிருந்தது. அவன் தன்னுடைய ஒரு கையால் அந்தப் பெண்ணை அணைத்துப் பிடித்து அலைக்கு மேலே தூக்கிக்கொண்டிருந்தான். ' அவள் தன் கைகளை உயரத் தூக்கியவண்ணம் கத்தினாள். கைகளை வீசித் தண்ணீரை வாரி இறைத்தாள்; பயங்கரமாக அலறிவிட்டாள்.

''ஐயையோ! நான் மூழ்கிச் சாகிறேனே, கடவுளே! என் மூச்சுத் திணறுகிறதே!'' என்று கூச்சல் போட்டாள். உப்புத் தண்ணீரை 'அபக்' 'அபக்'கென்று குடித்தாள்.

வேலன் அவளைத் தண்ணீருக்கு மேலேயே தூக்கிப் பிடித்திருந்தான். தன் பலம் முழுவதையும் உபயோகப்படுத்தி அவளைத் தண்ணீரில் மூழ்காமல் தூக்கிப் பிடித்திருந்தான். இன்னொரு கையால் தண்ணீரைத் தள்ளிக் கொண்டு கரையை நோக்கிப் பாய்ந்து நீந்தி வந்தான்.

திடீரென்று அடித்த பேரலை அவனைக் கரையை நோக்கித் தள்ளிக் கொண்டு வந்தது. அலையில் அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரண்டு கொண்டு வந்ததைப் பார்த்தால் கடல் நீரில் குளித்து மூழ்கிக் களியாட்டம் ஆடும் காதலர்களைப் போலவே காட்சி அளித்தார்கள்!

வானத்தில் இருந்த வெண் நிலவு, மேகத்துக்குள் மறைந்த தன் பாதி உருவத்தைக் காண்பித்துக்கொண்டு நின்ற நிலையைப் பார்த்தால் அது இவர்களைப் பார்த்துச் சிரிப்பதுபோ லிருந்தது. சுற்றிச் சுற்றிச் சுழன்று வந்த கலங்கரை விளக்கின் பிரகாசமான வெளிச்சமும் சிரிக்கத்தான் செய்தது! வேலனின் வலிவுமிருந்த கரங்களால் பிளந்து தள்ளப்படும் கடல் நீர்கூடச் சிரித்துக் கொண்டுதான் இருந்தது!

ஆமாம்! சிரித்துச் சிரித்துத்தானே கவலையைத் தணித்துக் கொள்ள வேண்டும். துக்கமும் துயரமும் கஷ்டமும் கவலையும் சிரித்து மகிழ்வதில்தான் மறையும். நாம் எல்லோருமே சிரிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எந்தத் துக்ககரமான செயலையும் பார்த்துச் சிரித்து விட்டால் எல்லாமே மறந்து விடும். அப்படிச் செய்வதற்கு நாம் என்ன நிலவா! கலங்கரை விளக்கா! இல்லை, கடல் அலைகளா! நாம் மனிதர்களாயிற்றே என்று நினைக்கிறீர்களா! ஆம் மனிதர்கள்தான். மனிதன் ஒருவனால்தான் சிரிக்க முடியும். பகுத்தறிவை உபயோகித்துச் சிரித்துப் பழக வேண்டும். பகுத்தறிவு இல்லாவிட்டால்தானே சிரிக்க முடியாது!

கடைசியாக வந்த பெரிய அலை வேலனையும் அந்தப் பெண்மணியையும் கரையில் கொண்டு வந்து தள்ளி விட்டது. தாங்கள் குடித்திருந்த கடல் நீரினால் களைத்துப் போய் இருவரும் அந்த ஈர மணலில் சோர்ந்து கிடந்தனர்.

சற்று நேரம் கழித்து, வானத்திலிருந்த நிலவு இன்னும் கொஞ்சம் மேலே வந்த பிறகு வேலன் களைப்புத் தீர்ந்து கண்களைத் திறந்து பார்த்தான். தன் எதிரில் சோர்ந்து படுத்துக் கிடந்த அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளது தலைமயிர் கருப்பாக இருந்தது. நீளமாக இல்லாவிட்டாலும் அடர்ந்து இருந்தது. அலை அலையாக நெளிந்து லேசாக ஆடிக் கொண்டிருந்தது.

வயிறு நிறையத் தண்ணீர் குடித்திருந்ததால் அவள் வயிறு சற்று உப்பியிருந்தது. மிகுந்த களைப்புடன், துவண்டு கிடந்தாள். மூச்சுத் திணறித் திணறி வந்து கொண்டிருந்தது. அவள் நிலைமையை வேலன் ஒரு கணத்தில் புரிந்து கொண்டான். உடனே உணர்ச்சி பெற்றான்.

சட்டென்று அவளைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு சக்கரம் சுழற்றுவது போல் கிறு கிறுவென்று சுழற்றினன். அவள் குடித்திருந்த கடல் நீரெல்லாம் வெளியில் வந்து விட்டது. அவளைத் தூக்கிக்கொண்டு போய்க் காய்ந்த மணலில் போட்டான். அவளுக்கு மூன்றுல் கடல் பரந்து கிடந்தது; நிலவின் குளிர்ந்த கிரணங்களால் அது வர்ணிக்க முடியாத அழகு பெற்று விளங்கியது. மெதுவாக வீசிக் கொண்டிருந்த இளம் காற்று அவன் மனத்தில் விவரிக்க முடியாத ஏதோ ஒரு இன்பத்தை ஊட்டிக் கொண்டிருந்தது.

தன்னையும் அறியாமல் எழுந்து அவள் முகத்துக்கு முகம் நேராகப் பார்த்தான். அவளது சிவந்து உருண்ட கன்னங்களைப் பார்த்தான். ஈரம் பாய்ந்து துடிதுடிப்போடு இருந்த அழகிய உதடுகளைப் பார்த்தான். அது புன் சிரிப்பால் லேசாகப் பிரிந்து நின்ற கோலத்தைப் பார்த்தான். மூடியிருந்த கண்கள்; அதற்கு மத்தியில் நீண்டு வளைந்து நிமிர்ந்து நின்ற மூக்கு எல்லாவற்றையும் பார்த்தான். பார்த்துக்கொண்டே யிருந்தான்!

அவள் உடைகள் நனைந்து• இருந்ததால் உடலோடு உடலாக ஒட்டிக் கொண்டிருந்தது. அவள் அணிந்திருந்த புடவையும், அதற்கு ஏற்ற ரவிக்கையும் அவள் உடலுக்குப் பொருத்தமாகவும் அமைப்பாகவும் இருந்தன. ஒரு கை தேர்ந்த சிற்பி கடைந்தெடுத்த பொற்பாவைபோல் விளங்கினுள்.

அவன் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே மூடியிருந்த அவள் கண்கள் இரண்டும் திறந்தன. பட்டாம் பூச்சியின் இறக்கைகள் போல் அந்தக் கண்களின் இமைகள் ஒரு கணம் பட படவென்று அடித்துக்கொண்டன. சற்று நேரம் இமைக்காமல் இருந்தன. அப்பொழுது அந்தக் கண்களை வேலன் கூர்ந்து பார்த்தான். அந்த இரண்டு கண்களும் சாதாரணக் கண்களா! இல்லை, கன்னங்கரேலென்று சுழன்ற கண்கள்; கருத்தைக் கவரும் கண்கள். தங்கள் இமைகளால் கை காட்டி, விழிகளால் இன்ப மூட்டி திக்கற்ற வேலனைத் திணற அடித்துக் கொண்டிருந்தன.

அவன் வியப்பும் திகைப்பும் அடைந்தவனுய் அந்த அழகிய கண்களைப் பார்த்தபடி யோசித்தான். மீண்டும் அந்தச் சுந்தர முகத்தைப் பார்த்தான். அவ்வளவுதான்; வந்தது மோசம்! அவன் உறுதியான உள்ளம் சல சலத்தது; பலம் நிறைந்த அவன் உடல் நெளு நெளுத்தது.

"என்ன அதிசயம்! என்றுமே அனுபவிக்காத உணர்ச்சியாக இருக்கிறதே! இவ்வாறு உடம்பைக் நெளு நெளுக்க வைக்கும் சக்தி அந்தக் கண்களில் இருக்கிறதா! என்ன காந்த சக்தியோ! என்ன மாயசக்தியோ! இப்படி மனத்தை மகிழ்விக்கிறதே!" என்று எண்ணினுன் வேலன்.

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

இந்தமாதிரி சமயத்தில் வேலனுக்கு மட்டுமா புரியாது! யாருக்குமே புரியாது! இந்திரனும், சந்திரனும், இராவணனும் இன்னும் எத்தனை எத்தனையோ இதிகாச புருஷர்களும் சரித்திர நாயகர்களும் தடுமாறித் தங்கள் நிலைகுலைந்ததை, அழிந்து மடிந்து போனதை நாம் படித்ததில்லையா!

ஆனல் வேலன் மனத்தில் காதல் பிறந்திருக்கிறது. அவன் கருத்து காதலால் கலங்கிவிடாது. அவன் வாழ்க்கையில் அடிபட்டவன் அல்லவா! இருந்தாலும் அவன் ஏழையாயிற்றே! வீடு வாசல் அற்ற அனாதையாயிற்றே! அவன் உள்ளத்தில் காதல் ஏற்படலாமா!

காதலுக்கு யார் கட்டுப்பாடு விதிக்க முடியும்!

இந்தக் காதல் ஒன்றுதான் ஏழையென்றும் பணக்காரன் என்றும், பாமரன் என்றும் பட்டதாரி என்றும், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்றும், ஆண்டை அடிமை என்றும் பாராமல் எல்லோருக்கும் ஒரேதரமாய் இருந்து வரும் அபூர்வ சக்தி! ஆனல் இது வளர்வதற்கு எத்தனை தடைகள்! எத்தனை தொல்லைகள்! அடடா! எழுத்தாலும் சொல்லாலும் அதை விளக்கிவிட முடியுமா! முடியாது! உலகம் தோன்றிய நாளிலிருந்தே இது இருந்து வருகிறது. இதனுல்தான் உலகமும் வளர்ந்து வருகிறது என்று கூடச் சொல்லலாம்.

இதைப் போலவே இன்னொரு சக்தியும் இருக்கிறது. அதுவும் ஏற்றத் தாழ்வைப் பாராத அபூர்வ சக்திதான்! அந்தச் சக்திக்கு ஒவ்வொரு மனிதனும் என்றாவது ஒருநாள் பணிந்துதான் ஆகவேண்டும். ஆனல் அதைப் பற்றி இப்பொழுது நினைக்கக் கூடாது. வாழ்வை நினைத்த பின் தாழ்வை நினைப்பது வாழ்வுக்கு அழகல்ல!

இந்தச் சமயத்தில் அவள் தன் சுய உணர்வைப் பெற்றுள். 'வீரீச்' சென்று கத்திக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். சுற்றும் முற்றும் விழித்துப் பார்த்தாள். அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. பயம் நிறைந்த தன் அகன்ற கண்



காதல் வேலனைப் பார்த்தாள்; பார்த்தாள்; பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவள் கண்களில் நிரம்பி யிருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்து கொண்டிருந்தது. கையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிக்கொண்டே எழுந்தாள். ஈரப் புடவையை அப்படியே இறுக்கித் தன் இரு கைகளாலும் முறுக்கிப் பிழிந்தாள். புடவைத் தலைப்பை உதறிக்கொண்டே தன் ஆடைகளைச் சரி செய்து கொண்டாள்.

வேலன் அவளைப் பாராதது போலவே ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான். புதுமையும் பூரிப்பும் கொண்டு விளங்கும் அவள் அழகிய உடலைப் பார்த்தான்.

அவளும் வாய் பேசாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நனைந்து போன உடைகளும், சிலுசிலு வென்று அடித்த ஈரக் காற்றும் குளிரை உண்டாக்கின. அலைகளின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

அந்த அலைச் சத்தத்துக்கும் மேலே விம்மல் சத்தம் கேட்டது. வேலன் திடுக்கிட்டான். அவன் மனதையும் உள்ளத்தையும் உருக்கிய அந்தச் சோகம் நிறைந்த சத்தம் தனக்கு எதிரில் நிற்கும் பெண் மணியிடமிருந்து தான் வருகிறது என்பதை ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டான்.

விம்மல் சத்தம் இப்பொழுது அழுகையாகப் பீறிக்கொண்டு வந்தது.

அந்த வேதனையை வேலனால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. அந்த மணல் வெளியில் இப்படியும் அப்படியும் அலைந்தான். அவன் முதுகுக்குப் பின்னால் மூடிப் பிசைந்துகொண்டிருந்த கைகள் அவன் சிந்தனையின் வேகத்தைக் காண்பித்துக்கொண்டிருந்தன. நிலைபடாமல் அலைபட்ட தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

"பெண்ணே!......"

இந்த வார்த்தைஅவன் வாயிலிருந்து வருவதற்குள் அவன் உடலில் ஒரு தரம் சூடு ஏறித் தணிந்தது. நெஞ்சு 'திக்திக்'கென்று



துரித காலத்தில் அடித்துக்கொண்டது. உடல் லேசாக நடுங்கியது.

அவள் தன் தலையைத் தூக்கி வேலனை நிமிர்ந்து பார்த்தாள். வேலனும் பார்த்தான். அவள் இதயம் அடித்துக் கொண்டிருந்தது. திடீரென்று மேகக் கூட்டத்திலிருந்து நிலவு வெளி வந்தது. அதனால்

அந்த வெண்மணல் வெளி மேலும் வெளிச்சமாகிவிட்டது. இப்பொழுது அவளை வேலனால் நன்றாகப் பார்க்க முடிந்தது. சுருண்ட அவள் கேசம் கன்னத்தில் புரண்டு கொண்டிருந்தது. கரிய பெரிய கண்கள் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. அவள் இளம் தோள்கள் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தன. அவன் அழகிய முகத்தைப் பார்த்தான். சற்றுக் கவனித்துப் பார்த்தான். அவள் கண்களிலிருந்து சாரை சாரையாக நீர் வடிந்து கொண்டிருந்தது.

“பெண்ணே! பயப்படாதே! உனக்கு எந்த விதமான தீங்கும் செய்ய மாட்டேன்”, என்றான். அந்தக் குரலில் அன்பும் ஆதரவும், பரிவும் பாசமும் கலந்து இருந்தன.

அவள் பதில் பேசாமல் தலையைக் குனிந்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவள் கால்கள் மணலைக் கிளறிக் கொண்டிருந்தன.

“எனக்கு எல்லாரும் ஒன்றுதான். நான் கடலில் மூழ்கிச் சாக வந்தேன். என்னைக் காப்பாற்றி எனக்குத் தீங்கிழைத்து விட்டீர்கள்!” என்றாள் அவள். அவள் சொன்ன வார்த்தைகளில் இருந்த அழுத்தம் வேலனை நடுநடுங்கச் செய்து விட்டது. அவன் ஒரு கணம் திகைத்துவிட்டான்.

திடீரென்று வேலன் பேச ஆரம்பித்தான். தைரியமாகப் பேசினான். தன் பதினெட்டு வருஷத்து வாழ்க்கையில் அவளைப் போன்ற அழகியைப் பார்த்ததில்லை என்றான். சட்டென்று மேலே பேச முடியாமல் திணறினான். அப்பொழுதெல்லாம் அவன் இதயம் பேசியது. அவன் கண்கள் பேசின. அவன் உடலின் ஒவ்வொரு அவயங்களும் பேசிக் கொண்டிருந்தன.

அவள் குபீரென்று சிரித்தாள்.

அவள் சிரிப்பு வேலனின் இதயத்தைத் தாக்கி மயக்கி விட்டது. அவன் ஏதோ பேச முயன்றான். என்ன பேசுவது என்று தெரியாமல் திணறிக் கொண்டு நின்றான்.

வேலனைப் பார்த்து அவள் லேசாகச் சிரித்தாள். அவள் உதடுகள் அசைந்தன. அவள் உடல் நெளிந்தது. ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

“நீங்களும் என்னைப் போலவே வாழ்க்கையில் மிகுந்த கஷ்டம் அனுபவித்திருக்கிறீர்கள். சந்தோஷமில்லாமல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்” என்றாள்.

வேலனுக்கு இந்தச் சொற்கள் காதில் தேன் மாரி பொழிந்தது போலிருந்தது. அவன் சிறகில்லாமலே வான வெளியில் பறக்க ஆரம்பித்து விட்டான். அவன் உள்ளமும் உடலும் ஒரு புது உணர்ச்சி பெற்று விளங்கியது. அப்படியே சொக்கிப் போய் விட்டான்.

மிகுந்த சிரமத்துடன் பேச முயன்றான். மகிழ்ச்சியால் அவன் மூச்சு திணறியது. நெஞ்சை ஏதோ வந்து அடைத்தது. திணறிக் கொண்டே “பெண்ணே! உன் பெயர் என்ன?” என்றான்.

“வேலம்மாள்!” என்றாள் கொஞ்சும் குரலில்.

“உண்மையாகவா! உன்பெயர் வேலம்மாளா!” என்றான். அவன் குரலில் வியப்பும் குதூகலமும் கலந்து கும்மாளி போட்டன.

“ஏன் அப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்!” என்றாள் மிகுந்த அமைதியோடு.

“என் பெயர் வேலன்” என்றான்.

“ஆ! என்ன பொருத்தம்!” என்ற வார்த்தைகள் அவளையும் அறியாமல் அவள் வாயிலிருந்து வெளிவந்தன.

சற்று நேரம் அங்கு மௌனம் நிலவியிருந்தது. அலை ஓசையைத் தவிர வேறு சத்தமே இல்லை.

அந்தச் சத்தத்தையும் மீறி ஒரு பெருமூச்சு விட்டான் வேலன். “நீ தற்கொலை செய்து கொள்ள ஏன் விரும்பினாய்! அப்படி உனக்கு என்ன நேர்ந்து விட்டது!” என்றான்.

“என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை. ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்! நான் சாக விரும்பினாலும் தெய்வம் என்னைச் சாகவிடாது போலிருக்கிறதே” என்றாள் மிகுந்த அலுப்புடன்.

வேலன் ஒரு நிலைக்கு வந்து விட்டான். அவன் மூளை தெளிவாக இருந்தது. அவன் சிந்தனை செயல்பட ஆரம்பித்து விட்டது.

“பெண்ணே! தற்கொலை ஒரு கோழையின் செயலாகும். கண்ணகி பிறந்த நாட்டில், வீரப் பெண் மணிகள் தோன்றிய தமிழகத்தில் பிறந்த நீ தற்கொலை செய்து கொள்ளலாமா! தற்கொலை செய்து கொள்வதாயிருந்தால் ஒரு நாளைக்கு நான் நூறு முறை தற்கொலை செய்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட கஷ்டம் எனக்கு. ஆனால் நாம் கஷ்டப்படுகிறோமே ஒழிய, இந்த உலகம் இன்பமானது. நீல வானமும், நிலவும், கடலும், அதன் அலைகளும், இந்த வெண் மணலும் இன்பமயமாக விளங்கவில்லையா! நம் அறிவினால் துன்பத்தை ஒதுக்கித் தள்ளி இன்பத்தை எடுத்துக் கொள்ள வேணும். அதுதான் வாழும் வழி. நம் காரியம் முடிந்த பிறகுதான் சாவோம்; அது வரை நமக்குச் சாவே கிடையாது” என்றான். கடைசியில் அவளையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பன்மையில் கூறி முடித்தான்,

வேலம்மாள் கவனமாக இதைக் கேட்டாள். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். “ஐயா! நீங்கள் என் அறிவைத் தூண்டி விட்டீர்கள். இனிமேல் நான் சாகமாட்டேன். சாக முயற்சிக்கவும் மாட்டேன்; நான் இந்த உலகில் வாழப் பிறந்தவள். இப்பொழுது நாழியாகி விட்டது. அடுத்த ஞாயிற்றுக் கிழமை மாலையில் இங்கு வாருங்கள், என் வாழ்க்கைக் கதையை, என் சோக சரித்திரத்தைச் சொல்லுகிறேன்” என்றாள். கை கூப்பி வேலனை வணங்கினாள். சட்டென்று திரும்பினாள். அந்தக் கடற்கரை மணலையும் லட்சியம் செய்யாமல் வேகமாகச் சென்றாள்.

“இவள் சாதாரணப் பெண்ணா! இல்லை பெண் உருவில் வந்த மோகினியா!” என்று நினைத்தான் வேலன். அவள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் வலது காலினால் மணலைக் கிளறிக் கொண்டே திக்பிரமை பிடித்தவன்போல் நின்று கொண்டிருந்தான். தூரத்தில் மணல் வெளியில் வேலம்மாளின் அழகிய உருவம் நடந்து சென்றது. கலக்கமும் பிரமையும் நிறைந்து நின்ற தன் கண்களை இமைக்காமல் அந்த உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பால் போன்ற நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. விரிந்து பரந்து கிடக்கும் கடல் சிரித்துக் கொண்டிருந்தது.

** ** **

மறு நாள்.

வேலன் இன்று ஒரு முடிவுக்கு வந்து விட்டான். ஏதாவது ஒரு வேலையை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து விட வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். அடுத்த ஞாயிற்றுக்கிழமை வேலம்மாளைப் பார்க்கும் போது வயிற்றில் பசி இருக்கக் கூடாது என்று எண்ணினான். “அன்றைக்குப் போன தொழிற்சாலைக்கே போய் மீண்டும் வேலை கேட்க வேண்டும். எவ்வளவு கஷ்டமான வேலையாக இருந்தாலும் குறைந்த கூலியாக




சீல் உடைக்கப்படாமலிருக்கிறதா எனக் கவனித்து வாங்கவும்

---

இந்திய கவர்ன்மெண்ட் அங்கீகாரம் பெற்ற

## பாரத் டிராவல் ஸர்வீஸ் லிமிடெட்

கம்பெனியாரால் நடத்தப்படும்

ஐந்தாவது

# வட இந்திய யாத்திரை

55 நாட்கள் — 10 க்ஷேத்திரங்கள்

5-9-52ல் சென்னையிலிருந்து புறப்பட்டு

பண்டரிபுரம், பூனா, பம்பாய், நாசிக், ஷிர்டி, பரோடா, டாகூர், உஜ்ஜெயினி, ஆக்ரா, மதுரா, டெல்லி, குருக்ஷேத்திரம், ஹரித்வார், லக்னௌ, பைஜாபாத், அலகாபாத், காசி, கயா, கல்கத்தா, கட்டாக், பூரி (ஜகன்னாத்), வால்டேர் (சிம்மாசலம்), ராஜமகேந்திரி, பெஜவாடா முதலிய இடங்களுக்குச் செல்லும்.

[illegible]

இரண்டாவது வகுப்பு சார்ஜ் ரூ. 510

மூன்றாவது வகுப்பு சார்ஜ் ரூ. 200

(யாத்திரை பூராவிற்கும் (தினசரி 2 வேளை) சாப்பாட்டுக்கு ரூ. 75/-)

மேலும் விபரங்களுக்கு

## பாரத் டிராவல் ஸர்வீஸ் லிமிடெட்

(Tourist Agents - Recognised by the Govt. of India)

11 & 12, ஜெகன்னாட் லேன் பீ — — மதராஸ்-1

ஃபோன்: 2400 & 55100 — தந்தி: "EXCURSION"

---




உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

# ஜில்லெட்

உபயோகிக்கிருர்கள்...



ஒரு தனவந்தர் ப்ளூ ஜில்லெட்டை விட உயர்ந்தாக பிளேடை வாங்க முடியாது. ஆயினும் இதன் விலை மிகவும் சரசமா யிருக்கிறது. இந்த புகழ்பெற்ற பிளே டுகள் நீடித்தகாலம் உழைப்பதால் ஒவ்வொரு மனிதனும் சமமான சுகபோ கத்தை அனுபவிக்க முடியும். ப்ளூ ஜில்லெட் பிளேடுகளையே வாங்குங்கள். (மின்சாரத்தால் கெட்டியாக்கப்பட்ட தும் பிரத்தியேகமாக பதப்படுத்தப்பட் டதுமான எஃகில் தயாரித்தது). உங்கள் நாகரீகமான தோற்றத்திலும் வாழ்க் கையில் வெற்றிபெற்ற மனிதர்களி டையே நீங்களும் இடம் பெறுங்கள்.



# ப்ளூ ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 1-4 அணு

இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்தத் தொழிற்சாலை மேஸ்திரி சாதாரண தண்ணீர் கொடுக்கும் பையனாக இருந்து மேஸ்திரி வேலைக்கு உயர்ந்தவர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவருக்கு ஏழையின் கஷ்டம் தெரிந்திருக்கும். அவரை எப்படியாவது நேரில் பார்த்து வேலை வாங்கி விட வேண்டும்."

இப்படி நூறாவது தடவையாக நினைத்துக் கொண்டு "காந்தி இரும்புத் தொழிற்சாலை"யை நோக்கிப் புறப்பட்டான். அவன் வயிறு நேற்றுப் போலவே காலியாக இருந்தது. வயிற்றின் கொடுமையை நினைத்து ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டான். வேலம்மாளின் நினைவு வந்தது. அவள் அழகிய முகம் அவன் மனத்துக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது. ஏதோ பாட்டை வாயால் முணு முணுத்துக் கொண்டே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். ஆகாயம் நிர்மலமாயிருந்தது.

காலை நேரத்திலேயே வெய்யில் கடுமையாக காய்ந்தது. தூரத்தில் காந்தி தொழிற்சாலையின் பெரிய கட்டிடம் தெரிந்தது. எத்தனை எத்தனையோ தொழிலாளர்கள் சேர்ந்து உழைத்த உழைப்பெல்லாம் அந்தக் கட்டிடத்தின் கம்பீரத்தில் தெரிந்தது. கட்டிடம் நிலைத்து நிற்பதற்காக அஸ்திவாரம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தொழிற்சாலையின் உயர்வுக்குத் தொழிலாளர்கள். ஆனால் அந்தப் பெரிய கட்டிடத்தின் பூமிக்கு அடியில் அஸ்திவாரம் இருப்பதை யாராவது பார்க்க முடியுமா! அது தன்னைத் தியாகம் செய்து கொண்டு கட்டிடத்தைக் காப்பாற்றி வருகிறது. அது போலவே எத்தனை எத்தனையோ தொழிலாளர்கள் உழைப்பால், காந்தி இரும்புத் தொழிற்சாலைக்குப் பெயரும் புகழும் வந்தாலும் அதனால் லாபம் பெறுபவர் அதன் முதலாளிதான்.

இந்தத் தொழிற்சாலையின் முதலாளிக்குக் காந்தி மகானின் மீதோ அவர் கொள்கைகளின் மீதோ நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் அந்த மகானிடம் மக்களுக்கு இருக்கும் எல்லையற்ற பக்தியை வைத்துப் பணம் பண்ணுகிறார்.

அந்தத் தொழிற்சாலையின் வாசலில் இவனைப் போலவே இன்னொரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். வேலன் அவனை நெருங்கி "ஏன் ஸார்! மேஸ்திரி ஐயா வந்து விட்டார்களா!" என்று கேட்டான். அவன் குரலில் ஒரு பணிவு இருந்தது.

"ஏன்!" என்றான் அந்த வாலிபன்.

"அவரைப் பார்த்து வேலை கேட்பதற்குத்தான்!"

"பெரிய மனிதர்கள் யாரிடமிருந்தாவது சிபார்சுக் கடிதம் கொண்டு வந்திருக்கிறீரா!"

"சிபார்சுக் கடிதமா! சிபார்சுக் கடிதம் எதற்கு ஸார்! என் கையில் வேலை யிருக்கிறது. பட்டறையில், லேத்தில் என்னை விட்டுப் பார்க்கட்டும். வேலை செய்து காண்பிக்கிறேன். அதோடு இந்தத் தொழிற்சாலையின் மேஸ்திரி ஏழைக்கு இரங்குபவர் என்றும் கேள்விப்பட்டேன்."

"உன்னைப்போல் தான் நானும் கேள்விப் பட்டேன். ஆனால் அவர் தன்னையே முதலாளி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். முதலாளிக்கும் இவர் வார்த்தையில் அசைக்க முடியாத நம்பிக்கை."

"சந்தோஷப்பட வேண்டிய காரியம் ஸார். நம்மைப் போல ஒரு தொழிலாளியை மேஸ்திரியாக்கி அவரை இவ்வளவு தூரம் நம்புவதற்காக முதலாளியைப் பாராட்ட வேண்டும்."

"உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை என்று தான் நினைக்கிறேன். அவர் வேலையை மெச்சி, அவர் திறமையைப் புகழ்ந்து அவரை மேஸ்திரி யாக்கிவிட வில்லை. அவரிடம் நல்ல திறமை இருக்கிறது. அவர் திறமைக்கு ஒரு பட்டம் பெற்றவரை வைப்பதாயிருந்தால் ஆயிரம், இரண்டாயிரம் கொடுக்க வேண்டும். அப்படியே கொடுத்தாலும் அவர்களிடம் தொழில் திறமையைப் பூரணமாகக் காண முடியாது. அதற்காகத் தான் இவரை மேஸ்திரியாக்கி அவருக்கு எழுநூறு ரூபாய் சம்பளத்தைக் கொடுத்துச் சில சாதாரணமான அதிகாரங்களையும் கொடுத்திருப்பது போல பாவனை செய்திருக்கிறார் முதலாளி."

"அந்த அளவுக்காவது முதலாளியைப் பாராட்டத்தானே வேண்டும்!"

"ஆமாம் பாராட்டத்தான் வேண்டும். என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒருவர் கோழி வளர்க்கிறார். தினம் தனக்கு இல்லாவிட்டாலும் கோழிக்கு நல்ல தீனி போடுகிறார். ஏன்? அதன்மீது இரக்கப் பட்டா! வாயில்லாத ஜீவன் ஆயிற்றே பட்டினியோடு கிடக்கிறதே என்று பச்சாதாபப்பட்டா! அதெல்லாம் ஒன்றுமில்லை. கோழி நன்றாக வளர்ந்தால் ஒரு நாள் நல்ல விருந்துக்கு உதவுமே என்று தான். அப்படித்தான் இங்கும் மேஸ்திரிக்குக் கருணை காட்டப்படுகிறது."

"அது எப்படியாவது போகட்டும், மேஸ்திரி எனக்கு வேலை கொடுப்பார் இல்லையா!"

"அந்த மேஸ்திரி வேலை கொடுப்பாரா, மாட்டாரா என்பதை நீரே தெரிந்து கொள்ளும். இந்தத் தொழிற் சாலையிலேயே அவருடன் வேலை செய்யும் ஒரு தொழிலாளி இருக்கிறார். அந்தத் தொழிலாளியும் மேஸ்திரியும் ஒன்றாகவே இந்தத் தொழிற்சாலைக்கு வந்தவர்கள். அவர் திறமைசாலி என்பதும் மேஸ்திரிக்குத் தெரியும். அவர் மேஸ்திரியிடம் தம் சம்பளத்தை உயர்த்தச் சொல்லிக் கேட்டாராம். அதற்கு மேஸ்திரி என்ன பதில் சொன்னார் தெரியுமா! 'பி. ஏ.,—எம். ஏ., படித்து இன்ஜினியர் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் இருநூறு மூந்நூறுக்குத் தாளம் போடுகிறார்கள். நீ இருநூற்று ஐம்பது ரூபாயை முழுசா வாங்கிக் கொண்டு போதவில்லை என்கிறாயே. கடவுள் அவரவர்களுக்குத் தகுந்தபடி அளந்து தான் விட்டிருக்கிறார்' என்று சொன்னாராம். இவர் அக்கிரமத்துக்குக் கடவுள் துணை! 'மேஸ்திரி ஐயா எந்தக் காலேஜில் இன்ஜினியர் பட்டம் பெற்றுக் கொண்டு வந்து வேலை செய்கிறீரு! மாதம் எழுநூறு ரூபாய்க்கு மேலே வாங்கிக் கொள்ளுகிறீரே' என்று கேட்கலாமா என்று அந்தத் தொழிலாளி நினைத்தாராம். ஆனால் கேட்கவில்லை. அப்படிக் கேட்டால் வேலைக்கே ஆபத்து வந்துவிடுமே என்று பேசாமல் இருந்து விட்டார். அப்படிப்பட்ட புண்ணியவானா உமக்கு வேலை கொடுக்கப் போகிறார்! எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை" என்று ஒரு நீண்ட பிரசங்கமே செய்தான் அந்த வாலிபன்.

"வெறும் ஏட்டுப் படிப்பு படித்து விட்டால் மட்டும் சிறந்த அறிவாளி ஆகிவிட முடியுமா! இந்தத் தொழில் நிலையத்திலேயே பத்து வருஷங்களுக்கு மேலாக வேலை செய்து வருகிறாரே அந்தத் தொழிலாளி; அது மட்டும் படிப்பில்லையா! இது நல்ல அனுபவம் நிறைந்த, அறிவு நிறைந்த, உழைப்பின் மூலம் நேரிடையாகக் கற்ற கல்வியாயிற்றே ஸார். பள்ளிக்கூடங்களில் யார் இப்படிக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதை அந்த மேஸ்திரிக்கு எடுத்துச் சொல்ல வேணும். சொன்னால் தானே அவருக்குத் தெரியும்" என்றான் வேலன்.

அந்த வாலிபன் வேலனின் நிலை கண்டு இரங்கினான். "ஸார்! நான் சொல்லுவதைக் கேட்டுக் கொள்ளுங்கள். என் தந்தையும் ஒரு தொழிலாளி

தான் அவர்தாம் எனக்கும் சொன்னார். அதைத் தான் உங்களுக்குச் சொல்லுகிறேன். எங்கே யாவது வேலைக்கு இருந்தால் நியாயத்தையும் உண்மையையும் விட மேலே இருக்கிறவரின் மனதறிந்து நடந்து கொள்ளவேணும். அவர் மூன்றும் மூன்றும் பத்து என்றால் 'ஆமாம்' என்றுதான் சொல்லவேணும். 'இல்லை ஆறு' என்றால் அது உண்மையாக இருந்தாலும் தன்னை மதிக்க வில்லை என்று மேலே இருப்பவர் கோபித்துக் கொள்ளுவார் என்று சொல்லியிருக்கிறார். நாம் அப்படியே நடக்க வேண்டுமென்பதில்லை. பொறுத்திருந்து சமயம் பார்த்து அவர்களிடம் உண்மையையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லலாம். இப்படிப் பொறுமையைக் கடைப் பிடிக்காததால்தான் எத்தனையோ தொழிலாளிகள் வேலையை இழந்து விடுகின்றனர்'' என்றான் அந்த வாலிபன்.

வேலன் சிரித்தான்

''என்ன சிரிக்கிறீர்களே! உங்களிடம் சொல்லுவதற்கு என்ன! எனக்கு உண்மையிலேயே வேலை செய்யத் தெரியாது. எப்படியோ அவரை இவரைக் காக்காய் பிடித்துச் சிபார்சுக் கடிதமும், நான் படித்த தொழிற் பள்ளிக்கூடத்துச் சர்டிபிகேட்டும் பெற்று வந்திருக்கிறேன். நிஜமாகவே வேலை செய்து காண்பி என்றால் என் பாடு திண்டாட்டம்தான்!'' என்றான் அந்த வாலிபன் அவன் குரலில் உண்மை இருந்தது.

''நண்பரே! வித்தியாசமாக நினைத்துக்கொள்ளக் கூடாது. நான் ஒரு ஏழை. சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது. எனக்கு இந்த வேலைகளில் நல்ல அனுபவம் உண்டு. படித்துப் பட்டம் பெற்ற மேதாவிகள் கூட என்னோடு வேலை செய்ய முடியாது. இருந்தும் என்ன! எனக்கு எந்தப் பெரிய மனிதர்களையும் தெரியாதே சார்! நீங்கள்தான் உதவி செய்ய வேணும்'' என்று அழுமாட்டாக் குறையாகச் சொன்னான் வேலன். அவன் கண்கள் கலங்கி யிருந்தன.

''பயப்படாதீர்கள். இந்தத் தொழிற்சாலையில் மாதச் சம்பளத்துக்கு உங்களை வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி என்னால் செய்ய முடியாது. ஆனால் தினக் கூலிக்குக் கட்டாயம் ஏற்பாடு செய்கிறேன். அது என்னால் முடியும்!''

''ரொம்ப வந்தனம், சார்!'' என்றான் வேலன்.

அந்த வாலிபன் ஒரு எட்டணா காசை எடுத்து அவனிடம் கொடுத்து ''நீங்கள் போய் ஏதாவது சாப்பிட்டு விட்டு வாருங்கள். நான் உங்கள் வேலைக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றான்.

வேலனைப் பார்த்தவுடனேயே அவனுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று அந்த வாலிபனுக்குப் பட்டு விட்டது. வேலனின் களங்கமற்ற முகம், கவடு சூதற்ற பேச்சு அவன் இதயத்தைத் தொட்டு விட்டது. பார்த்தால் பெரிய செல்வந்தர் வீட்டுப் பிள்ளைபோல் தோற்ற மளிக்கிறான். பேச்சில் உயர்ந்த பண்பு இருக்கிறது. முகத்தில் நல்ல தைரியம் இருக்கிறது. எல்லாம் இருந்தும் என்ன! வறுமைதான் அவனை வாட்டிக் கொண்டிருக்கிறதே! அவனைப் பார்க்கும்போது நாம் எவ்வளவோ மேல் அல்லவா! என்று அந்த வாலிபன் உள்ளம் எண்ணியது.

இப்படித் தமக்குக் கீழே இருப்பவர்களைப் பார்த்துத் திருப்திப் படவேண்டியதுதான். ஆனால் அதற்காகக் கீழே இருப்பவர்கள் கீழேயே இருக்கும்படி விடலாமா! அவர்கள் தரம் உயரப் பாடுபடவேண்டாமா! அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர முடியாமல், உண்டு களித்து வாழும் கூட்டத்துக்கும் பாடம் கற்பிக்கப் பாடுபட வேண்டும்.

வேலன் அகமும் முகமும் மலர அந்தக் காசை வாங்கிக் கொண்டு போய் அதிக விளம்பரம் இல்லாத ஆனால் சுகாதார சுத்தத்துடன் இருக்கும் சாதாரண ஹோட்டலில் போய் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு வந்தான்.

''தேசியம், சமதர்மம், என்றெல்லாம் வானளாவ மேடை ஏறிப் பேசுகிறார்கள். ஏழை மக்களின் துயரங்களை வாய் கிழிய வார்த்தைகளால் அடுக்குகிறார்கள். அதன் மூலம் ஏழை மக்களின் செல்வாக்கைப் பெற்றுத் தங்கள் சொந்த வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளும் ஏழை பங்காளர்களான பங்களா வாசிகளை விட உண்மையிலேயே ஏழைக்கு இரங்கும் ஏழைகள் நாட்டில் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைகளால்தான் தேசத்தில் இன்னும் கொஞ்சமாவது நியாயமும் தர்மமும் இருந்து வருகிறது; மழை பெய்கிறது'' என்று எண்ணினான் வேலன். வயிற்றுப் பசியை நீக்கிய அந்த வாலிபனுக்கு மானசீகமாகத் தன் நன்றி கலந்த வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டான்.

** ** **

யாரோ முன்பின் தெரியாத அந்த வாலிபனின் உதவியால் வேலனுக்குக் காந்தி இரும்புத் தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. தினக் கூலிக்குத்தான்; தினம் மூன்று ரூபாய் கூலி கிடைத்து வந்தது. வேலன் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் வேலை செய்தான். அவனுடைய அபாரமான வேலைத் திறமையையும், தொழில் நுணுக்கங்களில் உள்ள சாமர்த்தியங்களையும் பார்த்து அவனுடன் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் வேலனை மெச்சிப் பாராட்டினார்கள். அவனுக்கு இருக்கும் அபூர்வமான சூட்சுமத் திறமையை எண்ணி வியந்து போனார்கள். அவன் அதிகச் சம்பளம் வாங்கும் பெரிய தொழில் நிபுணர்களைவிட அதிகமாகவே உற்பத்தி செய்தான்; மிகவும் சுத்தமாகச் சாமான்களைச் செய்தான். இருந்தும் அவன் பிற தொழிலாளர்களைப் போலக் களைப்பு அடைவதில்லை. சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் அவ்வப்போது பலப் பல ஹாஸ்யங்களை அள்ளி வீசிக் கொண்டும் வேலை செய்தான். அவனுடைய சரளமான சுபாவமும், கபடமற்ற பேச்சும், கருத்தான வேலைத் திறனும் தொழிலாளர்களை எல்லாம் கவர்ந்து விட்டது. அவர்கள் வேலனை சுற்றிச் சுற்றி வந்தார்கள். நாலு தினங்களுக்குள்ளாகவே வேலன் அந்தத் தொழிற் சாலையின் அத்தனைத் தொழிலாளர்களின் கவனத்துக்கும் உரியவனாகி விட்டான்.

வேலை முடிந்து திரும்பியதும் அவன் வயிறு நிறையச் சாப்பிடுவான். தன் சகத் தொழிலாளி வீட்டில் போய்ப் படுத்துக் கொள்வான். அந்தத் தொழிலாளி வேலனுக்கு ஒரு அறை கொடுத்து உதவியிருந்தான். அப்போது அவனுக்கு வேலம்மாளின் நினைவு வந்துவிடும். அவள் வரச் சொன்ன ஞாயிற்றுக் கிழமையை நினைத்துப் பார்ப்பான். நாலு நாட்கள்தான் ஆகியிருக்கிறது. இருந்தும் அவனுக்கு அது நாலு வருஷங்கள் ஆகிவிட்டது போல ஒரு தோற்றமும் கூடவே நேற்றுத்தான் வேலம்மாளைச் சந்தித்தது போல ஒரு இன்ப நினைவும் ஏற்படும். அவன் உள்ளம் வேலம்மாளைப் பார்ப்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்தது. தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த வேலம்மாளின் களியும் ஒளியும் நிறைந்த கண்களை நினைத்து அவன் மனம் குழம்பிப் போவான். அவள் மனவெளியிலே மயங்கிக் கிடந்த கோலத்தை நினைத்துப் பார்த்து மகிழ்ந்து போவான். அமைதி


# தி பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414 - மதராஸ்-5

தந்தி: 'EVERMENS'.... போன்: 85834


## மாதாந்திர சீட்டுகள்

ஜூலை மாத சீட்டு வரிசையில் இடம் பெறாத விண்ணப்பதாரர்களுக்கு இடமளிக்க ஆரம்பிக்கும் எங்கள் ஆகஸ்டு மாத சீட்டு வரிசை (3-வது வெள்ளிக்கிழமை, ஏல வரிசை.

சந்தா செலுத்தும் கடைசி தேதி 11-8-52 முதல் ஏலத் தேதி 14-8-52

| | மாதச் சந்தா | சீட்டின் மதிப்பு |
|---|---|---|
| B கிளாஸ் | ரூ. 100/- | ரூ. 2,500/- |
| C ,, | ரூ. 50/- | ரூ. 1,250/- |
| D ,, | ரூ. 25/- | ரூ. 625/- |
| E ,, | ரூ. 20/- | ரூ. 500/- |
| F ,, | ரூ. 15/- | ரூ. 375/- |
| G ,, | ரூ. 10/- | ரூ. 250/- |
| | 25 மாதங்கள் | 25 மெம்பர்கள் |

ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் "செக் பெறலும் கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகைகளை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும்.

**சீராகச் சேமிப்பதற்கு உங்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்.**

(போர்டார் உத்திரவுப்படி)

எம். வி. சுப்ரமண்யம், மானேஜிங் டைரக்டர்



**தாய்மார்கள் விரும்பி வாங்கும் அழகிய ஸ்டீல் தொட்டில், கொசு வலை ஸ்டாண்டுடன் கூடியது மலிவான விலை - நீடித்த உழைப்பு!**







ஸ்டீல் மாஸ்டர் மடக்கும் நாற்காலி. வீடு, ஆபிஸ், ஹோட்டல், சினிமாக் கொட்டகை ஆஸ்பத்திரி, கான்டீன் முதலியவைகளுக்கு இன்றியமையாதவை. மிகக் குறைந்த விலை. உறுதியான ஸ்டீல் நாற்காலி. ஒன்றின் விலை ரூ. 16—0—0

விவரங்களுக்கு:

## ஸாம்ஸன் & கம்பெனி லிமிடெட்

151, பிராட்வே :: மதராஸ்-1

போன்: 4521 தந்தி: BARAPASH

யாக, மௌனமாக, அழகாகக் கிடந்த வேலம்மாளின் எழில் உருவம் அவன் மனக்கண் முன் வரும். புன்னகை செய்தபடி நெளிந்து கொண்டிருந்த உதடுகள், மனத்தை மயக்கிய அந்தக் கரிய பெரிய மருளும் விழிகள், குழி விழுந்த சிவந்த கன்னங்கள், சுருள் சுருளாகக் காற்றில் அலைந்த கருமையான கேசங்கள் எல்லாமே நினைவுக்கு வரும். அந்த மகிழ்வூட்டும் இன்பக் காட்சியை எண்ணிய வண்ணம் தூங்குவான்.

அன்றும் அப்படித்தான் அவன் வேலம்மாளை நினைத்துக் கொண்டு படுத்திருந்தான். நீண்ட நேரம் வரை அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. இருளும் அமைதியும் அவனை என்னவோ செய்து கொண்டிருந்தது. வெளியில் வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான். மின்னும் நட்சத்திரங்கள் அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிச் சிரித்தன. கொஞ்ச நேரம் அந்த நட்சத்திரங்களைப் பார்த்தான். திரும்பவும் படுத்துக் கொள்ளத் தன் அறைக்குள் சென்றான். படுக்கையில் படுத்தான். கண்ணை மூடினான். விதி அவனைப் பார்த்துச் சிரித்தது!

* * *

ஐந்து நாட்கள் கழிந்தன. ஞாயிற்றுக் கிழமை வந்தது. வேலன் அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டான். வேலம்மாளைப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவன் மனத்தைக் குதூகலிக்கும்படிச் செய்து கொண்டிருந்தது. எப்பொழுது மாலை வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தான். அவன் மனோ வேகத்துக்குத் தகுந்தபடி கடிகாரம் ஓடுமா! கடிகாரம் ஓடுவதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. பொழுதே போகாதோ என்று நினைத்தான். எப்படியோ வேலனை வேதனைப் படுத்தி வந்த பகல் பொழுது ஒரு மாதிரிகழிந்து விட்டது.

வேலன் தன்னை நன்றாக அலங்காரம் செய்து கொண்டான். சலவை மடிப்பு கலையாத சட்டையும் வேஷ்டியும் அணிந்து கொண்டான். நேரே கடற்கரைக்குச் சென்றான்.

வேலம்மாள் அவனுக்கு முன்னதாகவே அங்கு வந்து காத்திருந்தாள். வேலனை அவளுக்குச் சட்டென்று அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. வேலனுக்கும் அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சற்று நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

வேலம்மாள் “வணக்கம்!” என்றாள்.

வேலனும் “வணக்கம்!” என்றான்.

சடக்கென்று வேலம்மாள் எழுந்தாள். அங்கிருந்து நடக்க ஆரம்பித்தாள்.

வேலனும் அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.

வேலம்மாளும் வேலனும் மௌனமாகவே சென்று கொண்டிருந்தனர். அவன் அவளைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே சென்றான். அவளும் அவனை ஓரக் கண்ணால் பார்த்த வண்ணம் சென்றாள். அப்பொழுது இருவர் கண்களும் விநோதமாகப் பிரகாசித்தன. அவள் கன்னங்குழிய சிரித்தாள். அவனும் சிரித்தான். ஆனால் இருவரும் எதுவும் பேசவில்லை. அவர்கள் பாதங்கள் கடற் கரை மணலில் புதைந்து எழுந்தன.

தூரத்தில் தெரிந்த ஒரு தோட்டத்தை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருந்தனர். திடீரென்று புடவை தடுக்கி வேலம்மாள் தடுமாறி விழுந்து விட்டாள். வேலன் அவளைத் தாங்கிப் பிடித்தான். அப்பொழுது அவள் உடல் வெட வெட வென்று நடுங்கியது; நெருப்பாகச் சுட்டது!

வானம் நிர்மலமாயிருந்தது. அவர்கள் அந்தச் சிறிய தோட்டத்துக்குள் வந்து விட்டனர். தூரத்தில் ஒரு பறவை கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. வேலன் அந்தக் கீதத்தைக் கேட்டான். வேலம்மாளும் அனுபவித்தாள். சற்றுத் தூரத்தில் ஒரு மரம் தாழப் படர்ந்திருந்தது. வேலம்மாள் அதைப் பார்த்தாள். அதன் கிளையில் ஏறி அமர்ந்தாள். அந்த மரத்தைச் சுற்றி மலர் குலுங்கும் புஷ்பச் செடிகள் நிறைந்திருந்தன. வேலன் அவளுக்குப் பின்னால் இருந்த வேறு ஒரு கிளையைப் பிடித்த வண்ணம் அவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் மரக்கிளையிலிருந்து கீழே இறங்க முயன்றாள். வேலன் அவள் கையைப் பிடித்து இறக்கி விட்டான். அவ்வளவுதான்! ஏதோ ஒரு காந்த சக்தி தன்னைத் தாக்கியதுபோல் உணர்ந்தான். அப்படியே கண்ணை மூடிக் கொண்டான்.

அவன் உடல் காற்றிலே பறப்பதுபோலிருந்தது. அவன் வான மண்டலத்தை நோக்கிச் செல்லுகிறான். அவள் கையைப் பற்றிய வண்ணம் வேலம்மாள் நடந்து வருகிறாள்.

இருவரும் மேகக் கூட்டங்களில் நடந்து செல்லுகின்றனர். வெள்ளை மேகங்கள் அவர்களுக்கு வழிவிட்டு விலகி நின்றன. மின்னும் நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டி வரவேற்பு அளிக்கின்றன. மேகங்கள் மீது கால்கள் படுகின்றனவா என்றே சந்தேகமாயிருக்கிறது. பட்டுப் போன்ற அவ்வளவு மிருதுவான மேகங்கள்.

வேலன் கண்ணைத் திறந்தான். வேலம்மாள் சற்றுத் தூரத்தில் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தான்.

“வேலம்மாள்!” என்றான்.

“ஏன்!” என்றாள்.

“இன்றைக்கும் நாழியாகி விட்டது என்று சொல்லி விட்டுப் போய்விடுவாயோ!”

“அப்படிச் செய்ய மாட்டேன்.”

“அப்படியானால் நீ ஏன் கடலில் விழுந்தாய்! இன்று அதைச் சொல்வதாகச் சொன்னாயே!”

வேலம்மாள் அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

“ஐயா! தங்களை எனக்கு முன்பின் தெரியாது. இருந்தாலும் தாங்கள் எனக்கு உயிர் அளித்தீர்கள். என் உள்ளத்திலும் இடம்பெற்று விட்டீர்கள். உயிர் கொடுத்த உங்களிடமே என் வாழ்க்கையையும் ஒப்படைத்து என் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்!” என்றாள்.

வேலன் நிறைந்த ஆவலோடு அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

வேலம்மாள் பேச ஆரம்பித்தாள். அவள் சொற்கள் பொன்னிறக் கதிர்கள் மின்னும் நெல் வயல்களின் மீது காலை இளங்காற்று வீசுவது போலிருந்தது. அவள் பேச்சில் ஒரு தெளிவும், அபூர்வமான வேகமும், உயர்ந்த பண்பும் கலந்து இருந்தன. குரலில் ஒரு இனிமை இருந்தது.

கடலிலிருந்து அடித்த குளிர்ந்த காற்றினால் வேலம்மாளின் அழகிய கூந்தல் கலைந்து விட்டது. அவள் கலைந்த கூந்தல் காற்றில் பறந்தது. அது அவள் நெற்றி, கன்னம், தோள்களில் எல்லாம் புரண்டுகொண்டிருந்தது. அவள் அதையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். எங்கோ தூரத்தில் யாரோ இருவர் கல கல வென்று சிரிக்கும் சத்தம் காற்றிலே மிதந்து வந்தது! (தொடரும்)

# குளிர்ந்த பானங்கள்

## வீட்டிலேயே

சுலபமாகவும்
சிக்கனமாகவும்
செய்துகொள்ளுங்கள்




## டி.எஸ்.ஆர்

அதிநேர்த்தியான

## சர்பத்துகள்

- நன்னாரி
- ரோஸ், ஆரஞ்சு

மற்றும் பலவித சர்பத்துகள்

இந்த கோடைக்கு ஏற்ற பானங்கள்
விருந்தினரை உபசரிக்க மிகமேலானவை

## டி.எஸ்.ஆர். & கோ.,

.... கும்பகோணம் .....

FAS-770-TAM

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
சுராஜ் ஏஜன்ஸீஸ்
7, ஜானி ஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்
கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டு:
1. பாலபட்டாரி (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது)
கோயமுத்தூர்



# "ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"



1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்யும்

ஆயுள் பூராவும் பலன்
தரும் வெள்ளி ரக்ஷை

ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கையை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டெ. தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9 ம் நாள் ரக்ஷை பிராணதத்துடன் அனுப்பப்படும். (2) வெளி நாட்டு பேர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

★

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)



கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின் பெருமையையும் அவர் இந்தியாவுக்கு ஆற்றி இருக்கும் அருள்தொண்டையும்

# மகாத்மா காந்தி

என்ற நூலில் அழகாக விளக்கியிருக்கிறார்

விலை அணா எட்டு
(தபால் செலவு தனி)

சசிதேவி எழுதிய

# விஜயா

முதலிய கதைகள்

விலை ரூ. 2-8-0
(தபால் செலவு தனி)

●

கிடைக்குமிடம்

## கல்கி காரியாலயம்


கீழ்ப்பாக்கம் :: சென்னை

# வட்ட மேஜை

## காங்கிரஸ் கமிட்டி எதற்காக?

நாங்கள் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு மிகவும் மன வருத்தத்துடன் எழுதுகிறோம். தாங்கள் என்னவோ ஒவ்வொரு வாரமும் 'கல்கி' இதழில் காங்கிரஸ்காரர்கள் மக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும், பொதுக் கூட்டங்கள் போட்டு 'மக்களுக்கு அரசாங்கத்தின் சாதனைகளையும், கஷ்டங்களையும் எடுத்துக் கூற வேண்டியதின் முக்கியத்தைப்பற்றியும் விடாமல் எழுதிக் கொண்டே வருகிறீர்கள். ஆனால் என்ன எழுதி என்ன பலன்! செங்கற்பட்டு ஜில்லா (டவுன்) காங்கிரஸ் கமிட்டியார்களுக்கு நீங்கள் எழுதுவதெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதுவது போல்தான் இருக்கிறது. கடந்த எட்டு மாதங்களாக ஒரு பொதுக் கூட்டம் கூட காங்கிரஸ்காரர்கள் இந் நகரில் போடவில்லை.

நாங்கள் சிலர், அநேகமாக மாணவர்கள்தான், தேர்தலுக்கு முன்னும் காங்கிரஸ் அபிமானிகளாக இருந்தபோதிலும் தீவிரவாதிகளாக இல்லை. ஆனால் தேர்தல் சமயத்தில் நாங்கள் படிப்பையும் சிறிது காலம் மூட்டை கட்டி வைத்து விட்டு இரவும், பகலும் மழை என்றும், குளிரென்றும் பார்க்காமல், கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்தோம். ஸ்ரீ அழகேசன் அவர்களின் வெற்றி, அதாவது நம் காங்கிரஸ் கட்சியின் வெற்றியில் எங்களுக்கும் பங்கு உண்டு. அப்படி காங்கிரஸுக்காக உழைத்த நாங்கள் மேலும் கட்சியைப் பலப்படுத்தும் நோக்கத்துடனும் பேராசைக்கும், பதவி மோகத்துக்கும் நாட்டில் கிளர்ச்சி செய்யும் தேச விரோதிகளின் வலையில் மக்கள் விழாமல் பாதுகாக்கவும் எங்களால் இயன்றதைச் செய்ய ஒரு சங்கத்தை ஏற்படுத்தினோம். அந்தச் சங்கத்தின் சார்பில் எங்கள் ஜில்லாவில் வெற்றி பெற்ற காங்கிரஸ் அங்கத்தினர்கள் அனைவருக்கும் ஒரு பொதுக் கூட்டம் போட்டு வரவேற்பு அளித்தோம். காங்கிரஸ் கூட்டத்திற்கு ஜனங்கள் வருவதில்லை என்று நொண்டிச் சாக்கு சொல்லி வந்த எங்கள் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு அன்றைக்கு வந்த ஜனத் திரள் ஒரு பாடமாகவே இருந்தது.



"நான் ரொம்ப அதிர்ஷ்டக் கட்டை, ஸார்!"
"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"
"எனக்கு ஒரு சினிமாப் படத்துக்கு இலவச பாஸ் கிடைத்தது. அதை உபயோகப் படுத்துவதற்குள் அப் படம் நின்று போய்விட்டது!"

அது நடந்தும் இப்பொழுது ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

காங்கிரஸ் கட்சி 152 பேர்களை வைத்துக் கொண்டு மந்திரிசபை அமைக்கத் தவித்துக்கொண்டிருக்கையில் நம் மாகாணத்தை வாழ்விக்க வந்த நம் ஒப்பற்ற தலைவர் ராஜாஜி தம் உடல் நலத்தையும் சிறிதும் பொருட்படுத்தாது மக்களின் நல்வாழ்வுக்காக மறுபடியும் அரசியலில் ஈடுபட்டு மந்திரி சபை அமைத்ததைப் பாராட்டுவதற்கு எங்கள் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் கூட்டம் நடத்தவில்லை. 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்று சொல்லுவதுபோல் மந்திரி சபை ஸ்திரமாவதற்குள்ளேயே என். ஜி. ஓ.க்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் அநேக சலுகைகளை அளித்தார் நம் ராஜாஜி. அதுவும் மக்களுக்குச் சரியாக எடுத்துக் கூறப்படவில்லை.

மக்கள் நெடு நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த உணவுக் கட்டுப்பாடு நீக்கலும் அமுலுக்கு வந்தது. இது சென்னை மாகாணத்துக்கே பெருமை தரக்கூடிய விஷயம். இதைப்பற்றிக் கூட்டமோ பேச்சோ ஒன்றும் கிடையாது.

அதே சமயத்தில் எதிர்க் கட்சியார்கள் செய்து வரும் பிரசாரத்தைப் பாருங்கள். தேர்தலுக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியார் இந் நகரில் ஏழு கூட்டங்கள் போட்டிருக்கிறார்கள். திராவிடக் கழகத்தார் மூன்று கூட்டங்கள் போட்டிருக்கிறார்கள். இதைத் தவிர திராவிட கழகத்தாரின் பிரசார நாடகங்கள் பல நடந்திருக்கின்றன.

கூட்டத்தில் எதிர்க் கட்சியினர் நாக்கில் நரம்பில்லாமல் காங்கிரஸைத் திட்டும்போது எங்களுக்குக் கோபம் கோபமாக வரும். அவர்கள்மேல் கூட அவ்வளவு இல்லை. தூங்கி வழிந்துகொண்டிருக்கும் எங்கள் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின்பேரில்தான்.

எதிர்க் கட்சியின் பிரசாரத்தையும் அவர்கள் காங்கிரஸ்காரர்களைப் பற்றிக் கூறும் தூஷணைகளையும் கேட்கச் சகிக்காமல் நாங்கள் நேராகச் சென்று டவுன் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியிடமும், தலைவரிடமும் மற்றைய கமிட்டி அங்கத்தினர்களிடமும் முறையிட்டோம். அவர்கள் அலட்சியமாக இருந்து வருகிறார்கள். அவர்கள் போக்கின் விவரமே புரியவில்லை.

ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதற்குக் கொஞ்சம் பணம் செலவாகிறது என்பது உண்மைதான். காங்கிரஸ் கமிட்டியாரிடத்தில் கூட்டம் போடும்படி எப்பொழுது கேட்டாலும் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அப்பொழுது ஜில்லா காங்கிரஸ் கமிட்டி என்பதாக ஒன்று எதற்காக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

பி. வெங்கடேஷ்
வி. தியாகராஜன்
பி. ராமதுரை
செங்கற்பட்டு 25-7-52 — பி. வி. ராஜன்
செ. வி. ஸம்பத்குமார்
கே. லக்ஷ்மிநாராயணன்
கே. வி. ராமன்
அ. சா. சிவராமன்

[த. நா. கா. கமிட்டி தலைவர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் செங்கற்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி விஷயத்தில் சிறிது கவனம் செலுத்தக் கோருகிறோம். சென்னை நகருக்குப் பக்கத்திலுள்ள ஜில்லாவில் தீவிர காங்கிரஸ் பிரசாரம் நடை பெறுவது மிகவும் அவசியம். — ஆசிரியர்]

# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

## 27. விபரீத கரணி

பெயரைப் பார்க்கும்போதே ஏதோ விபரீதமாய் இருக்கிறதே என்று தோன்றுகிறதல்லவா! அது உண்மையில் விபரீதமானதுதான். நாம் எதிர்பார்த்ததிலெல்லாம் ஒன்றும் நடைபெறாமல், எதிர்பாராத ஒன்றில் நடைபெற்றது என்றால் 'இது என்ன விபரீதமாய், ஆச்சரியமாய் இருக்கிறதே!' என்று சொல்லத்தான் தோன்றும். உண்மையில் அம்மாதிரி ஆச்சரியத்தை உண்டாக்கக் கூடியதுதான் இந்த விபரீத கரணி யென்னும் ஆசனம். நோயாளிகள், உலகிலுள்ள சகல வைத்தியர்களும் செய்து பார்த்தும் குணமாகாமல், இந்த ஆசனம் செய்ததும் அவர்களுக்குக் குணமாயிற்றென்றால் இதற்கு விபரீத கரணி அதாவது ஆச்சரியத்தை உண்டாக்குதல் என்று பெயரிடாமல் வேறு என்ன பெயரைத் தான் இட முடியும்!

வாழ்க்கையில் நாம் அறிந்தோ அறியாமலோ பல இன்னல்களுக்கும், நோய்களுக்கும் ஆளாகிறோம். இதிலிருந்து விடுபட எது கிடைக்குமோ எது சுகமளிக்குமோ என்று சதா நாடிய வண்ணமிருக்கிறோம். நமக்காகவென்று எத்தனை வித வைத்தியர்கள்—வைத்தியங்கள்! எத்தனை வித ஆராய்ச்சிகள்! எத்தனை வித மருந்துகள்! எத்தனைவிதக் கருவிகள்! எத்தனைவிதச் சாதனங்கள்! இவைகளெல்லாம் வைத்தியர்கள், அறிவாளிகள், விஞ்ஞானிகள் முதலியோர் சதா இரவும் பகலுமாய்க் கஷ்டப்பட்டுக் கண்டு பிடிக்கின்றனர். இவைகளெல்லாம் மக்கள் நோய் என்னும் பெரும் பிசாசினிடமிருந்து விடுபடவே செய்யப் படுகின்றன. அவர்களை உண்மைச் சமூக சேவகர்கள், தியாகிகள் என்று சொன்னாலும் மிகையாகாது. இவர்களுக்கு நோயாளி உலகம் எத்தனை ஜன்மங்களெடுத்துப் பிறந்து ஊழியம் செய்து நன்றி தெரிவித்தாலும் இவர்கள் செய்யும் தியாகங்களுக்கு ஈடாகாது. எத்தனை விஞ்ஞானிகள் முதன் முதலில் அவர்கள் செய்யும் ஆராய்ச்சிக்குத் தங்கள் உடலையே உபயோகித்துப் பலியாகி யிருக்கின்றனர்! ஒரு டாக்டர் ஒரு வித கொசுக்களைத் தன்னையே கடிக்க விட்டுக் கொண்டு இறந்திருக்கிறார். இப்படிப் பல தியாகங்கள் செய்துதான் மக்கள் நிவாரணத்திற்காக மருந்துகள் கண்டு பிடிக்கின்றனர். ஒரு டாக்டர் ஒரு மருந்தைக் கண்டு பிடிக்க 693 தடவை செய்து பார்த்தாராம். அதற்கு 693 என்றே பெயர் வைத்து விட்டனர். எம் & பி 693 என்றால் இந்தக் காலத்தில் யாருக்கும் தெரியாமல் இருக்காது. எழுத்தறிவு இல்லாத சாதாரண மனிதன் கூட 'ஜுரதோஷம்', சளி பிடித்தால் '693' சாப்பிட்டால் சரியாய் விடும் என்கிறான். அதைப் போல ஸிபசால் மாத்திரைகள் வந்தன. அதையும் பெருவாரியாக மக்கள் உபயோகிக்க ஆரம்பித்தனர். பிறகு இவைகளை விட உயர்ந்தது என்று 'சல் படைஜன்' என்ற மருந்து வந்தது, அதையும் ஒரு கலக்குக் கலக்கி வென்றுவிடலாம் என்று டாக்டர்கள் சந்தோஷப்பட்டார்கள். மக்களும் இவைகளைப் பெருவாரியாக உபயோகிக்க ஆரம்பித்தனர். இம்மாதிரி கந்தக மருந்துகளெல்லாம் டாக்டர்கள் மேற்பார்வையில்தான் உபயோகிக்க வேண்டுமென்பதை மக்கள் மறந்தனர். மருந்தினுள்ள கந்தகம் விஷத் தன்மையுடையது. அது சளியைக் கரைத்து, அவயவங்களைச் சவுக்கடி கொடுத்தாற்போல ஒரு வேகத்தை உண்டாக்கக் கூடியது. அதன் வேகம் மண்ணீரல், மூத்திரக் காய்களைக் கட்டாயம் பாதிக்கும். அதிகமானால் இருதயமும் பாதிக்கும். இதற்கு மறுப்பு டாக்டர்களால்தான் செய்ய முடியும். இம்மாத்திரைகளை எடுத்துக் கொண்டால் வெங்காயம், வெள்ளைப் பூண்டு, முட்டை போன்றவைகளைச் சாப்பிடக் கூடாது. சமையல் சோடா சிறிது ஜலத்தில் கலக்கிச் சாப்பிட வேண்டும். இதைத் தவிர மூத்திரக் காய்க்கும், மண்ணீரலுக்கும் கஷ்டமேற்படாதபடி நிறைய பழரசம் அருந்த வேண்டும். அல்லது பழங்களாவது நிறைய சாப்பிட வேண்டும். சாதாரண மக்கள் இவைகளை எப்படி அறிவார்கள்! மாத்திரை சாப்பிட்டோம். சளி கரைந்தது. ஜுர வேகம் தணிந்தது என்று நம்புகின்றனர். பிறகு இந்த மருந்தினால் ஏற்படும் கெடுதல்களை முதலிலேயே எண்ணிப் பார்க்கின்றார்களா! பிறகு கஷ்டப்படுகின்றனர். ஆகையால் இப்பொழுது 'டாக்டர்களுடைய அனுமதியின்றி இம்மாதிரி மருந்துகளைக் கொடுக்கக் கூடாது' என்று மருந்து வியாபாரிகளுக்கு உத்தரவாகி இருக்கிறது. இருந்தாலும் இம் மருந்து, பரவலாக இருந்துதான் வருகிறது.

பெனிஸிலின் என்ற மருந்து வந்தது. முதன் முதலில் இதன் உபயோகம் அவ்வளவாய் இல்லை. ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி அவர்கள் அந்திய காலத்தில் சிறையிலிருக்கும்போது அவருக்கு எத்



மனைவி:—நீங்கள் இப்போ தெல்லாம் நான் சொல்லுவது ஒன்றையும் கேட்பதில்லை. நீங்கள் இப்படியே இருந்தால் நான் ஐக்கியப் பின்னணிக் கட்சியில் போய்ச் சேர்ந்து விடுவேன்!



"நான் இன்றைக்குச் சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும். என் மனைவி ரேடியோவில் பேசுகிறாள்!"

"ஏன், உங்கள் மனைவி வீட்டில் பேசிக் கேட்டதில்லையா, என்ன?"

பட்ட வியாதிக்குப் பெனிசிலின் வேண்டுமென்று அவதிப்பட்டனர். தந்திகள் பறந்தன. பிறகு சென்னையிலிருந்து விமான மூலம் கொண்டு செய்யப்பட்டது. நமது உள்நாட்டு வைத்தியத்திற்கும், மேல் நாட்டு வைத்தியத்திற்கும் இதுதான் வித்தியாசம். ஒரு மருந்து அகப்படவில்லையானால் பல தலை நகரங்களுக்குத் தந்திகள் பறக்கும். அப்படியும் கிடைக்கவில்லையானால் மேல் நாட்டிலிருந்து வரும் வரை காத்திருக்க வேண்டும். அதுவரை நோயாளியும் காத்திருக்க வேண்டுமே! நமது நாட்டு டாக்டர்கள் படிப்பு முறை மாற வேண்டும். வெறும் மேல் நாட்டு முறை மட்டும் கற்கக் கூடாது. உள்நாட்டு வைத்தியத்திலும், பல அற்புத மருந்துகள் இருக்கின்றன. இரண்டு முறைகளையும் கற்க வேண்டும். இம் முறை எப்பொழுது நடைமுறையில் வருகிறதோ அப்பொழுதுதான் நமது நாட்டுக்கும் நல்ல காலம் பிறக்கும். அதுவரை, ஹோட்டலில் சமைத்த உணவை எடுத்துப் பரிமாறும் பரிசாரகனைப் போலத்தான் நமது டாக்டர்கள் இருக்க முடியும். ஏன் நமது மருந்து வகைகளையும் கற்று மேல் நாட்டவர்களுக்கு நாம் அதை அனுப்பி வைக்கக் கூடாது!

இப்பொழுது பல மேல் நாட்டு மருந்து வகைகளும் நமது நாட்டிலேயே செய்ய ஆரம்பித்து விட்டனர். இதில் பெனிசிலின் பெருவாரியாகச் செய்கின்றனர். இப்பொழுது பெனிசிலின் யுகமாகவே மாறிவிட்டது என்று சொன்னால் மிகையாகாது. எடுத்ததற்கெல்லாம் பெனிசிலின் ஊசிகள், மாத்திரைகள், எல்லாம் லக்ஷக்கணக்கில்தான் உபயோகம். கண் நோய், பல் நோய், காது நோய், கட்டி, ரணம், வலிகள், ஜுரம், புண்கள் முதல் சர்வத்திற்கும் பெனிசிலின் உபயோகமாகிறது. இத்தனைக்கும் இது ஒரு காளானிலிருந்து செய்கின்றனர். இக்காளானிலிருக்கும் விஷத் தன்மையை மாற்றி விடுகின்றனர். உபயோகித்தால் உடலில் இருக்கும் கிருமிகள் இதனால் இறந்துவிடுகின்றதாம். ஆனால் இதுவும் ஒரு அளவுதான், வேலை செய்கிறது என்பதில் சந்தேகமில்லை. பிறகு இம்மருந்து உபயோகித்து உபயோகித்துப் பழக்கமாய் விட்டால் பிறகு இம்மருந்து வேலை செய்வதில்லை. உள்ளிருக்கும் கிருமிகள் இத்தனையும் சாப்பிட்டு ஏப்பம் விடத் தயாராகின்றன. ஒரு சிலருக்கு ஆரம்பத்தில் கூட இம் மருந்து வேலை செய்வதே இல்லையாம். எனினும் இது ஒரு தற் சாந்திக்கு நல்ல மருந்துதான்.

க்ஷயத்திற்கு ஸ்ட்ரெப்டோமைசின் வந்ததும் க்ஷய ரோகிகளுக்கு விமோசனம் கிடைத்து விட்டது என்று சந்தோஷப்பட்டனர். இதற்கு முன் வந்த மருந்துகளை விட பல மடங்கு பரவாயில்லைதான். ஆனால் இந்த மருந்தும் சிலருக்குக் குணம் செய்வதில்லை என்று வைத்தியர்களே ஒப்புக்கொள்கின்றனர். தவிர, இது குணத்தில் எப்படி மேலானதோ அப்படியே விலையிலும் உயர்ந்தது. க்ஷய ரோகிகளுக்குப் பணம் நிறைய வேண்டும். இல்லாதவர்களுக்கு, ஆஸ்பத்திரிகளால் எத்தனை பேர்களைக் குணமாக்க முடியும்! நூறு பேருக்கு ஒரு படுக்கை கூட இல்லையே! இப்பொழுது ஸ்ட்ரெப்டோமைசினை விட உயர்ந்த ஒரு மருந்து வரப்போகின்றது. டீபீபோன், டைட்ரனிட் என்று அதன் பெயர். இரண்டும் இரண்டு கம்பெனிகளின் தயாரிப்பு. ஆனால் ஒரே வித மருந்துதான். இதைப் பலவித ஆராய்ச்சிகள் நடத்தி வெற்றி கண்டிருக்கின்றனராம். இன்னும் சில ஆராய்ச்சிகள் நடத்தினபின் வெளி வருமாம். ஒருகால் ஸ்ட்ரெப்டோமைசினைப் போல சிலருக்கு வேலை செய்யாமல் இருக்குமோ என்று பார்ப்பதற்காக இருக்கலாம். அல்லது நீடித்து இந்த மருந்தை உபயோகிப்பதால் நோயாளிக்கு க்ஷயம் போனாலும், வேறு வித நோய்களை உண்டாக்காமல் இருக்குமா என்று ஆராய்ந்து சோதனை பார்ப்பதற்காகவும் இருக்கலாம்.

மற்றும் ஆஸ்துமாவுக்கு எத்தனையோ வித மருந்துகள் பெலடோனா, நைட்ரோ—கிளிசரின் அட்ரினேலின் முதலிய மருந்துகள் உடனே பலனளிக்கக் கூடியவையாயிருக்கின்றன. பணம் உள்ளவர்கள் பல மருந்துகளை உபயோகித்து ஆஸ்துமாவைப் போக்கடித்தும் விடுகின்றனர். ஆனால் நிரந்தரமாய் ஆஸ்துமா வராது என்று சொல்லுவதற்கில்லை. ஒரு வருஷம் கழித்துச் சிலருக்கு வருகிறது. சிலருக்கு இரண்டு மூன்று வருடங்கள் கழித்தும் வருகிறது. சிலருக்கு நாலாறு வருடங்களுக்குப் பிறகும் வருகிறது. இவர்களெல்லாம் மறுபடியும் பல அற்புத மருந்துகளை உபயோகிக்க வேண்டியதுதான். அவைகளத்தனையும் உபயோகித்தும் வியாதி என்னமோ குணமாகாமல், சாகவும் முடியாமல் நிம்மதியாய் உயிர் வாழவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.


மற்றும், டயாபெடஸ், டயாரியா, பெருவியாதி, புத்து நோய் முதலிய பலவற்றிற்குப் பல அற்புத மருந்துகள் இருந்தும் நோய்கள் தீர்ந்தபாடில்லை. அநேக வியாதிகள் கிருமிகளால்தான் உண்டாகின்றன. அக்கிருமிகளைக் கொல்வதற்காகத்தான் இத்தனை மருந்துகளும். ஆனால் அதே சமயம் உடலுக்குக் கேடு விளைவிக்காமலும் இருக்க வேண்டும். அதற்காகத்தான் இத்தனை ஆராய்ச்சிகளும் செய்ய வேண்டியிருக்கின்றன. சிலவித கிருமிகள் எதற்கும் சளைக்காமல், எல்லா மருந்துகளையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும். இவைகளைக் கொல்ல எவ்வளவு அதிகம் மருந்துகளை உபயோகிக்கிறோமோ அவ்வளவிற்கும் மற்ற உறுப்புக்கள் பாதிக்கத்தான் செய்யும். இவ்வாறு பாதிப்பதைத் தடுப்பதற்காக மற்றும் வேறு மருந்துகள் சாப்பிட வேண்டும். இவ்வாறு பலவகை மருந்துகளினாலும், நோயால், இனி உடலில் சக்திகூட இல்லை, நடமாடுவதற்குக்கூட முடியாது. இனி எதிலும் நம்பிக்கையில்லை என்றும் நிலைமையிலும், விபரீதகரணி என்னும் ஆசனம் பல ஆச்சரியமான பலன்களை அளிக்கிறது. (தொடரும்)

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


"லக்ஸ் டாய்லட்
சோப்புத்தான் சரும அழகிற்கு
மிகவும் சிறந்தது" என்று கூறுகிறார்
எஸ். வரலக்ஷ்மி
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மை
யானதும் சுத்தமானதுமான சோப் உங்கள்
சருமத்தை வசீகரமாகச்செய்யும்!
சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்
LTS. 334-X30 TM

REGD. No. M 4392

*Registered as a newspaper in Ceylon*




# ஆரோக்கியத்தைப் பெற உங்கள் உணவை புத்திசாலித்தனமாக தேர்ந்தெடுங்கள்

எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பதைப்போலவே, நாம் எதை சாப்பிடுகிறோம் என்பதும் முக்கியமானது. நம் நோக்கம் ஒரு சமநிலை உணவை பெறவேண்டியதாக இருக்கவேண்டும். அதாவது, நமது தினசரி ஆகாரம் எல்லா ஐந்துவகை உணவு சத்துக்களும் அடங்கியதாக இருக்கவேண்டும்:
1. விடமின்கள்—செழிப்பான இரத்தத்திற்கும், நோய்களைத்தடுப்பதற்கும். 2. புரதசத்துக்கள்—தசைகளையும் உறுப்புகளையும் பழுதுபார்க்க. 3. தாதுப்பொருள்கள்—எலும்புகள், பற்கள், இரத்தம், குழந்தைகளின் வளர்ச்சி இவைகளுக்கு. 4. மாவுசத்துக்கள் — உடலுக்கு 'உஷ்ணம்' அளிக்க 5. கொழுப்புகள் — நீடித்துநிற்கும் தினசரி சக்திக்கு. நீங்கள் தேர்ந்தெடுக்கவேண்டிய கொழுப்புகளிடையே ஒன்று டால்டா. இது எல்லாவித சமையல்களுக்கும் உகந்தது. ஆரோக்கியமளிப்பது. மேலும் கையாள மிகவும் சௌகரியமானது. சீல் செய்த டின்களில் சுத்தமாகவும், புதிதாகவும் உங்களிடம் வந்து சேருகிறது.

**உங்கள் எடையை கூட்டுவது அல்லது குறைப்பது எப்படி?**

*இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்:*

**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

# சக்தியைப்பெற டால்டாவில் சமையுங்கள்



**சமநிலை உணவில் உங்களுக்குத் தேவையான கொழுப்பை அளிக்கிறது**

HVM. 178-50 TM